Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් டிச.09-15, 2001

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 437

## மக்கள் சக்தியின் முடிவுகளும் நெருக்கடிகளும்

## கைவசமுள்ள மாற்றுத் திட்டம்



உலக அழகியின் காதல்

விஜய்- பிரசாந்த் தகராறு

# ஆன்மீகம்

## இறைவன் அளித்த ஞானம், யோகம் என்னும் ஆயுதம்



ஒருவன் யாரிடமாவது சண்டையிடும் சமயத்தில் அவனிடம் ஆயுதங்கள் இல்லை என்றால் அவனுக்கு அதிக பயம் ஏற்படுகின்றது. யாரிடம் ஆயுதங்கள் இருக்கிறதோ அவனுக்கு பயம் இருப்பதில்லை. ஆகவே ஏதேனும் ஒரு சூழ்நிலையில் ஏதோவொரு காரணத்தினால் ஒருவனுக்கு பயம் ஏற்படுகிறது என்றால், அவனுக்கு கடவுளால் அளிக்கப்பட்ட ஞானம் அல்லது யோகம் (கடவுளை நினைவு செய்தல்) என்ற ஏதோவொரு ஆயுதத்தின் குறைபாடே ஆகும். ஒருவேளை அவனிடம் பொருத்தமான ஞானம் யோகம் என்ற எண்ணற்ற ஆயுதங்கள் இருந்தும் அதனை உபயோகிக்காமல் பெட்டியில் வைத்துப் பூட்டி வைத்து விடுகிறான். இது ஆயுதம் இருந்தும் இல்லாதது போல் அல்லது அந்த ஆயுதங்களை பயன்படுத்தும் முறையினை அறியாமல் இருக்கிறான். அப்படி அறிந்திருந்தால் ஒருவனிடம் ஊக்கம், தைரியம் மற்றும் நம்பிக்கை அவனைப் பார்க்கும்பொழுது நமக்குத் தென்படுகிறது. அப்படியானவன் அப்பொழுது பயம் என்னும் மாயை எந்தெந்த விதங்களில் தன்மீது வந்து போர் புரியும், மேலும் அது எப்படி எப்படி எல்லாம் எந்தெந்த வடிவங்களை எடுத்துப் போர் புரியும், அது எந்தெந்த சமயங்களில் தனது சக்தியை நம்மீது உபயோகிக்கும் என்பதைப்பற்றி புரிந்துகொண்டிருக்கிறான். ஆகவே அவன் இந்த மாயையை இறைவன் தனக்கு உணர்த்தி உள்ள சக்திகள் ஆகிய ஞானத்தையும், யோகத்தையும் பாவித்து மாயாமீது போராடி வெற்றியடைந்தே திருவான்.

ஞானமூலம் நாம் அறிய வேண்டிய ஆயுதங்கள் சங்கு, சக்கரம், தண்டாயுதம், தாமரை, சகிப்புத்தன்மை என்னும் கேடயமும் ஆகும். ஓம் சாந்தி.

பி.கு.விக்கி.கல்முனை.

## நோன்பின் மாண்பு பொன்மொழிகள்!

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது எந்த மனிதர் ரமழான் மாதத்தில் (மார்க்க சம்பந்தமான எந்தக் காரணமுமின்றி நோயின்றி (வேண்டுமென்றே) ஒரு நாள் நோன்பை விட்டு விடுகின்றாரோ அவர் ரமழான் அல்லாத காலம் முழுவதும் நோன்பிருந்தாலும் (அதற்குப் பகரமாக) அதனைக் கணாச் செய்தவராக முடியாது. என ரஸூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் அருளினார்கள். (நூல்: மிஷ்காத்)

அபூ உபைதா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். நோன்பு ஒரு கேடயம் அதனை உடைக்காமலிருக்கும்வரை என்று ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம் அவர்கள் அருளியதை நான் செவியுற்றேன். (நூல்: நஸாயீ- இப்னுமாஜா)

ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லாம் அவர்கள் அருளியதாக இப்னு உமர் (ரவி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அல்லாஹு தஆலாவும் அவன் மலக்குகளும் ஸஹர் சாப்பிடுவோரின்மீது அருள் புரிகின்றனர். (நூல்: அத்தபரானி)

தொகுப்பு:- மௌலவி காத்தான்குடி பௌஸ்.

## கண்களின் இச்சை

கண் என்பது ஒரு மனிதனுடைய சரீரத்தில் எவ்வளவு முக்கிய பங்கு வகிக்கின்றதே, அதே போல் தான் அவன் செய்கின்ற பாவத்திற்கும் வகிக்கின்றது. மனிதன் செய்கின்ற பாவத்திற்கு கண்ணானது 60% மான பங்களிப்பினைச் செலுத்துகின்றது.

ஆதி மனிதர்களான ஆதாமும், ஏவாளும் கர்த்தருடைய வார்த்தையையும் மீறி பாவம் செய்ததற்கு இந்தக் கண்களே பிரதானக் காரணம் என்பதை ஆதி 3:6ஐ வாசிக்கும்போது நாம் விளங்கிக் கொள்ள முடியும். 11 சாமு 11:02ம் வசனத்தில் தாவீதும், நியா 14:1, 16:1 ஆகிய வசனங்களில் சிம்சோலும் பாவம் செய்ததற்கு இந்தக் கண்களே பிரதானக் காரணமாயிருந்தது. கண்களின் இச்சையினால் பாவம் செய்து அதனால் படாத பாடு பட்டவர்கள் வேதத்திலும் சரி, சமூகத்திலும் சரி ஆயிரமாயிரம் பேர். இந்தக் கண்களின் இச்சையிலிருந்து தப்புவதற்கு வேதம் நமக்கு அநேக வழிகளைத் திறந்துக் காட்டுகின்றது. குறிப்பாக உன்னத 5:12ம் வசனத்தில் அவருடைய கண்கள் பாலினால் கழுவப்பட்டிருக்கிறது என்றும், 1 பேதுரு 2:3ம் வசனத்தில் அந்தப் பாலானது திருவசனமாகிய ஞானப்பால் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அன்பான தேவ பிள்ளைகளே கண்களின் இச்சைக்கு அடிமையாகி ஆண்டவரைவிட்டு விலகிப் போகாமல் அவருடைய வசனத்தினால் கண்களைக் கழுவி வாழ்க்கையைக் காத்துக் கொள்ளுங்கள்.

ஜெ.ராம் விக்டர்-லபுகெலை.

## கவிதைப் போட்டி இல.437



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 15.12.2001

கவிதைப் போட்டி இல.437
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## கவிதைப் போட்டி இல.434

பரிசுக்குரிய கவிதை

### கொ(தி)ண்டாட்டமா?

ஏர் பூட்டும் காலமதில்
எருதுகளுக்குக் கொண்டாட்டம்!
தேர்தல் நடக்கும் காலமிதில்
தெரு மாடுகளுக்கும்
திண்டாட்டமோ??
காரைதீவூர் சிவம்-குருக்கள் மடம்.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### வாக்குறுதி

இன்று முதல்
ஒவ்வொரு குடும்பத்திற்கும்
ஒவ்வொரு
லீட்டர் பால் இலவசமாக
வழங்கப்படும்.
எஸ்.பி.கணேஷ்-தாண்டியடி.

### வெப்தளம்

எருமையுடன் எரிபொருள்
நிலையத்தில் என்ன வேலை?
ஓ.. எதிர்காலத்து வாகனங்கள்
இப்படியும் இருக்கலாம் என்பதனை
கற்பனையில் ஓடவிட்ட
வெப்தளம் ஒன்றின் வேடிக்கையோ?
கிருஸ்ணன், சிவா-மஸ்கெலியா.

### வாக்குறுதி

தேர்தலில் யாம் வெற்றி பெற்றால்
எரிபொருளை நீரின் விலையாக்கி
மாடுகளையும் மனிதர் பயணிக்கும்
அதிவேக வாகனங்களாய் மாற்றிடுவோம்!
ஏ.எச்.எம்.மௌஜூத்-ஹிஜ்ராபுரம்.

### ஓ.வேட்பாளரா?

நீங்கள் பிரசாரக் கூட்டத்திற்காக
புறப்பட்டீர்கள்..
காரிலே ஏறினால்
காத்திருக்கும் வெடியொன்றா
காட்சி கொடுக்கின்றீர்கள்
காளை முதுகிலேறி.
வ.அகிலா-கொக்கட்டிச்சோலை.

### அவர்கள் வென்றுவிட்டார்கள்

பணிந்தார்கள்!
குனிந்தார்கள்!
கும்பிட்டார்கள்!
இனி எம்மை
திரும்பியும் பார்க்கமாட்டார்கள்!
ஏனென்றால் அவர்கள்
வென்று விட்டார்கள்!
த.நகுலேஸ்வரன்-வேலூர்.

### சவாரியின் இலட்சியமென்ன..?

கல்தோன்றி மண்தோன்றாக்
காலத்திலேயே தோன்றிவிட்டதடா
பேதம்..!
எரிபொருள் நிரப்பிப்புறப்படும்
உங்கள் நெடுந்தூரச்சவாரியின்
இலட்சியமென்ன நிம்மதியைக்
கைப்பற்றுவதா..?
அ.ச.அஹமத் சியாத்-நிந்தவூர்-11.



### ஓர் திருப்பம்!..

விலை போகின்ற
போக்கினைப்
பார்த்தால்?
மிலேனியமல்ல!
மீண்டும்-நாம்
வேடுவர் யுகத்திற்கே
திரும்பிடுவோம்..
போலிருக்கின்றது!!
எஸ்.மூக்கன் விஜயதீபம்-பசறை.

### ஏமாற்றம்

மழை என்றும் பாராமல்
மின்னல் என்றும் பாராமல்
மாடு என்றும் பாராமல்
அதில் ஏறிக்கொண்டு
சுயம்வரம் வந்த
என்னை
ஏமாற்றிவிட்டாளே!
றிஸ்வானா கில்ஹாம்-கிண்ணியா-04.

### சவாரி

முட்டாள்களே!
நீங்கள் மாட்டின் மீது சவாரி
செய்வதை விட
வோட்டு கேட்டு மக்கள் மீது சவாரி
செய்தால்
இன்ட கூலர் பஜீரோவில்
சாவரி செய்யலாம்!
ரி.சுதன்-கொழும்பு-06.

### பயணம் எப்படியோ

பயணத்தின்
பாதி வழி
டீசல் தீர்ந்ததோ?
எங்கள் எதிர்காலப்
பயணம் இப்படியாகுமோ?
ஏ.ராசேந்திரன்-கீளியன்குடியிருப்பு.

### நன்றிகெட்டவர்கள்!

இவர்களை
சுமந்து களைத்த பின்
தாகம் தீர்க்க வந்த
எனக்கு!
இவர்கள் காட்டுவது தெரியாதா
இது!
பெற்றோல் நிலையமென்று..!
ஹப்புத்தளையூர்-மனோகோபாலன்.

## உங்கள் பக்கம்

### எட்டப்பர்களால்தான் மலையகம் இப்படிப்போனது....

"தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்படக் கூடாது" என்ற கட்டுரையை வாசித்தேன். ஏமாறுபவர்கள் இருக்கும்வரை ஏமாற்றுபவர்களுக்கு என்றுமே பஞ்சமில்லை. குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்கம்புகளைப் போல இனத்துக்குள்ளேயே எட்டப்பர்கள் இருப்பதால் தான் தோட்டத் தொழிலாளர்களுக்கு எல்லாமே எட்டாக் கனியாக இருக்கின்றது. படிக்கிறது கட்டபொம்மன் நூல்-பிடிப்பது எட்டப்பன் வால் என்பதைப் போல பட்டம், பதவிகளுக்காக பலவித பொய்களை கூறி வாய்க்கு வந்த வாக்குறுதிகளை வழங்கி வாக்குகளை பெற்று பாராளுமன்றம் சென்றபின் பாராமுகமாக இருக்கும் சில அரசியல் வியாபாரிகளினால்தான் இன்னமும் மலையகம் மங்கி போய் கிடக்கின்றது.

மற்ற பிரதேசங்களை விட மலையகம் எல்லா வகையிலும் மங்கிதான் இருக்கின்றது. அதற்கு காரணம் யார்? காரணகர்தாக்கள் யார்? எல்லாமே நம்மவர்கள்தான். நமக்குக் கிடைத்துள்ள ஒரே துருப்புச்சீட்டு இந்த ஓட்டுத்தான். பெறுமதி மிக்க இந்த வாக்கை வைத்து வாழ்வை வளமாக்கி கொள்வதற்காக வாக்குறுதி வழங்கியவர்களுக்கு வாரி வழங்கினால் அவர்கள் எல்லாம் கிடைத்தப்பின் தேர் ஏறி மாறிவிடுகிறார்கள். தொடர்ந்து நாறி நாற்றமெடுக்கும் தொழிலாளர்களின் பிரச்சனைகளை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை.

தோட்டத் தொழிலாளர்களின் சகல பிரச்சனைகளையும் அறிந்தவர்கள் தெரிந்தவர்கள், அவர்களோடு உண்டு உறவாடியவர்கள் என தேர்தலுக்கு முன் கூறுபவர்கள் அதற்குப் பின் தங்களை 'ராஜ பரம்பரையினர்' என்று பறைசாற்றிக் கொண்டு பரிவாரங்களுடன் பவனி வருகிறார்கள். மேலும் வேட்பாளர்களாக இருப்பவர்கள் கூட அநேகர் ஏற்கனவே பலமுறை தேர்தலில் போட்டியிட்ட பழைய முகங்கள் தான். இவர்கள் தொழிலாளர்களுக்காக எதுவுமே செய்யாவிட்டாலும் மலையக தனித்துவம் தவறிவிடக்கூடாதென்பதற்காக தொடர்ந்து அவர்களுக்கே வாக்களிக்கக்கூடிய கட்டாயத்தில் மலையக தோட்டத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள்.

போட்டியிடும் வேட்பாளர்களும் தங்களை விட்டால் வேறு ஆளில்லை. வெற்றிப் பெறுவது நிச்சயம் என்ற மமதையில் தொடர்ந்து வாக்குறுதிகளை அள்ளி வீசிக் கொண்டு எள்ளி நகையாடுகிறார்கள். எனவே வாக்காளர்களை குற்றம் சொல்ல முடியாது. நம் இனத்துக்குள்ளேயே இப்படியான கருத்து வேற்றுமைகள், சுயநலம், பதவி ஆசைகளைக் கொண்டவர்கள் இருக்கும் வரை மலையகத்துக்கு விடிவே இல்லை. நல்ல தலைவர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நல்லவர்களாக இருப்பதுதான் அவர்களுக்குள்ள ஒரே குறைப்பாடு. ஆனால்-என்றாவது இந்த குன்றின் அவலகுரல்களைக் கேட்டு குறை தீர்க்க ஒரு குமரன் குறிஞ்சிமலரைப்போல வருவான்... அவன் எப்போது வருவான் யார் அவன் என்பது தான் கேள்விக்குறி!

பாலா சங்குபிள்ளை.

### நிரந்தர அதிபர் நியமிக்கப்படுவாரா?

கல்குடா கல்வி வலயத்திற்குட்பட்ட கோறளைப்பற்று மேற்கு கல்வி பிரதேசத்திலுள்ள ஓட்டமாவடி பாத்திமா பாலிகா வித்தியாலயத்திற்கு கடந்த ஒருவருட காலமாக ஒரு நிரந்தர அதிபர் நியமிக்கப்படாமை குறித்து பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் கடந்த 11.10.2000 இல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார். 'IC' தர இப்பாடசாலைக்கு நிரந்தர அதிபர் வேண்டி இதுவரை விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. தகுதியான அதிபர்கள் பலர் இப்பிரதேச இரண்டாம், மூன்றாந்தரப்பாடசாலைகளில் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் 2002இல் ஒரு தகுதியான நிரந்தர அதிபரை இப்பாடசாலைக்கு நியமிக்க வலயக் கல்விப் பணிப்பாளர் அக்கறை கொள்ள வேண்டுமென பெற்றோர் கோரிக்கை விடுக்கின்றனர்.

யூ.ஏ. ஸலாம்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

## வாசக[ர்] சாலை

### உன்னை படித்தேன்



என் உயிரில் கலந்த விழிகளை வியக்க வைத்த என்னுயிர் முரசே!

முரசே என்னுள் பதிந்த உன்னை எப்படி வாழ்த்துவது என்றுதான் தெரியவில்லை. இருந்தும் உன்னை வாழ்த்த நினைக்கிறேன். நீ கொண்டு வரும் அனைத்து அம்சங்களும் மிக மிக அற்புதம். அதிலும் 'தேன் கிண்ணம்', 'சினிவிசிட்', 'ஸ்போட்ஸ்' இவை அனைத்தும் பிரமாதம் இனி வரும் காலங்களும் உன்னுடைய சேவையை நன்றாக செய்ய என் இனிய வாழ்த்துக்கள்.

வே.பாக்கியராஜி- டுபாய்.

அன்பின் முரசே! முரசில் வந்த "உங்கள் பக்கம்" பகுதியில் தமிழர்களின் அவல நிலை என்ற தலைப்பில் சிலாப வாழ் தமிழ் மக்களின் நிலையினை நாட்டிற்கு அறிமுகம் செய்த தினமுரசிற்கு என் நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

"நன்றி"

எஸ்.எல்.ராதிகா-சிலாபம்.

என்னருமை முரசே!

எங்கும் என்றும் உலா வரும் முரசே, நீ அள்ளி வரும் அனைத்து ஆக்கங்களும் சூப்பர். உன்னை யாரும் என் கண் முன்னால் கிழித்தால் அது என் இதயத்தை கிழிப்பது போன்றதாகும் உன் சேவை தொடர என் வாழ்த்துக்கள்!

நஸ்லியா நௌசாட், நிககொள்ள.

எல்லோர் நெஞ்சிலும் இடம்பிடித்துக்கொண்ட நீங்காத முரசே உன் ஒவ்வொரு பக்கமும் ஒவ்வொரு திருப்பம் போல் உன் முரசில் ஒவ்வொரு பக்கமும் என் மனதை கொள்ளை கொண்டு விட்டாய். உன் முரசில் அமைந்து இருக்கும் அனைத்து விடயங்களும் அலை கடலில் என்னை மூழ்கிவிட்டது. இதுப்போன்ற எல்லா மனதிலும் முரசின் அனைத்து அம்சங்களும் மனதில் நிற்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

எம்.சுதன்-கொட்டகலை.

வாரா வாரம் நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் சிந்திக்க வைக்கின்றது. 'கவிதைப் போட்டி', 'எக்ஸ்ரே ரிப்போட்', 'அதிரடி அய்யாத்துரை', 'அண்டை மண்டலத்தில் எஸ்.டி.எஸ்.', 'வாரம் ஒரு வார்த்தை', 'கவிதைகள்', 'சிறுகதைகள்', 'தொடர்கதைகள்', 'பாப்பாமுரசு' போன்றவை என்றென்றும் அழியாத சின்னங்கள். என்றென்றும் வாழ்த்துகிறேன்.

எம்.எஸ்.எம்.ஹூபைன்-கல்முனைக்குடி-14.

என், அன்பு தினமுரசே

நான் உன்னை வாராவாரம் காதலித்து வருகிறேன். என்னுடைய ஆருயிரில் ஓர் உயிராய் குடிபுகுந்த தினமுரசே உன் நினைவாய் வாழும் தினமுரசின் ரசிகன் நான். நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் என்னை மிக, மிக கவர்ந்தன. தினமுரசே நீ மென்மேலும் வாழ்க வளர்கவென வாழ்த்தும் தினமுரசின் உயிர் நண்பன்.

கே.நாதன்-வத்தளை.

என் இனிய முரசே, வாரப்பத்திரிகைகளின் வரிசையில் உன்னை மிஞ்சயாரும் இல்லை என்பதை செயல் ரீதியில் நிரூபித்துவிட்டாய். மனதுக்குள் சஞ்சலப்பட்டுக்கொண்டே வியாபார நோக்கத்திற்காக வேண்டாதவர்களி புகழ்பாடும் தமிழ் பத்திரிகை உலகில் உன் பணி நிச்சயம் தனித்துவமானதுதான்.

உண்மை-நேர்மை-வெளிப்படைத் தன்மை என்பன தொடரட்டும்.

அருள்மொழி, யாழ்ப்பாணம்.

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தாலோ, உங்கள் முகவரிடம் திருப்பிக் கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்பவேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# இரண்டு பிரதான கட்சிகளுக்கும் ஆட்சி அமைக்க போதிய பெரும்பான்மைப் பலம் கிடைக்காதென அவதானிகள் கருத்து- சிறிய கட்சிகளை நாடவேண்டிய நிலை?

இம்முறை பொதுத்தேர்தலின் பின்னரும் இலங்கை அரசியலில் ஸ்திரத்தன்மை தோன்றும் என்று எதிர்பார்க்க முடியாதென அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பரவலான வன்முறைகளுக்கு மத்தியில் நடைபெறும் பொதுத்தேர்தல் பிரதான கட்சிகள் இரண்டிற்கும் ஆட்சியமைக்க போதிய பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் ஆறு மாதங்களுக்கு முன்பிருந்த நெருக்கடி நிலைக்கே நாடு மீண்டும் திரும்பிச் செல்லும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றி பெற்ற சில இடங்களை அது இம்முறை ஐக்கிய தேசிய முன்னணியிடம் இழக்க நேரிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும் ஐதே.முன்னணியினாலும் ஆட்சியமைக்கப் போதுமான பெரும்பான்மைப் பலத்தை பெற முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதே.

இம்முறையும் ஜே.வி.பி.யின் முடிவு ஆட்சியமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

225 ஆசனங்களைக் கொண்ட இலங்கை பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களை கைப்பற்றும் கட்சியின் தலைவருக்கு அரசாங்கத்தை அமைத்து பெரும்பான்மையை நிரூபிக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுப்பார்.

தேர்தல் முடிவுகள் வியாழக்கிழமை அதிகாலை முதல் வெளிவரும்.

புதிய பாராளுமன்றம் 2002ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கூடவுள்ளது.

இதற்கிடையில் தமது கட்சி வெற்றி பெறுமாயின் பாராளுமன்றத்தை உடனடியாகக் கூட்டப்போவதாக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தலுக்கு பின்னர் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் விஷேட மாநாடொன்று செவ்வாய்கிழமை பொலிஸ் தேர்தல் பணியகத்தில் நடைபெற்றது. வாக்கெடுப்பு முடிவடையும் தினத்திற்கு பின்னர் சகல கட்சிகளினதும், குறிப்பாக தேர்தலில் தோல்வியைத் தழுவும் கட்சியின் ஆதரவாளர்கள் தாக்குதலுக்கு உள்ளாகாமல் தடுப்பது தொடர்பாக இந்த மாநாட்டின் போது ஆராயப்பட்டது. வன்முறையில் ஈடுபடுவோர்மீது பொலிஸார் கடுமையான நடவடிக்கை எடுப்பர் என தெரிவிக்கப்படுகின்றது ■

## தேர்தல் ஆணையாளரின் உத்தரவு உயர் நீதிமன்றினால் நிராகரிப்பு

யாழ்.குடா நாட்டு வாக்காளர்கள் அனைவரும் வாக்களிப்பின் போது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டதை ஆட்சேபித்து ஈ.பி.டி.பி. சமர்ப்பித்த மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் தேர்தல் ஆணையாளரின் உத்தரவை நிராகரித்தது.

குடா நாட்டு வாக்காளர்கள் வாக்களிப்பின்போது அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்று முன்னதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக அறிவித்திருந்தார்.

யாழ் குடாநாட்டு மக்களிடம் மாத்திரம் இவ்வாறு அடையாள அட்டை கோருவது அவர்களது அடிப்படை உரிமையை மீறும் செயல் என்றும் நாட்டின் வேறெந்த பகுதியிலும் இல்லாத இந்த வழிமுறையை குடாநாட்டில் மாத்திரம் அமுல் செய்யக்கூறுவது அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சம அந்தஸ்த்தை மீறும் செயலெனவும் ஈ.பி.டி.பி. தனது மனுவில் குறிப்பிட்டிருந்தது.

இதனை ஆராய்ந்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான நீதிபதிகள் குழு தேர்தல் ஆணையாளரின் உத்தரவை நிராகரித்து தீர்ப்பு வழங்கியது.

## தனி நாட்டை கைவிட்டது பற்றியோ

### சுயாட்சி பற்றியோ பிரபாகரன் எதையும் கூறவில்லை என்கிறார் கதிர்காமர்

தலதாமாளிகைமீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதலுக்கும் ஆப்கானில் பாமியான் புத்தர் சிலைகள் அழிக்கப்பட்டதற்கும் எந்தவொரு வேறுபாடும் இல்லையென்றும் தெரிவித்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர், நாட்டைப் பிரிக்க முடியாது என்ற நிலைப்பாட்டில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்று அதில் முன்னேற்றம் காணப்பட்டால் மாத்திரமே விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்துப் பரிசீலிக்க முடியுமென தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தினத்தை முன்னிட்டு ஆற்றிய உரை குறித்து கருத்து தெரிவித்திருக்கும் அமைச்சர் கதிர்காமர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

விடுதலைப்புலிகளின் தலைவரின் உரை ஐந்து கருப்பொருட்களை உள்ளடக்கியுள்ளது.

தேசியவிடுதலைப் போராட்டத்திற்கும், பயங்கரவாத அமைப்பிற்கும் இடையில் வேறுபாடுகண்டு வரையறைப்படுத்த சர்வதேச சமூகம் தவறிவிட்டதாக முதலாவது முறைப்பாட்டைப் புலிகளின் தலைவர் தெரிவித்திருக்கிறார். புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தயாராக இருந்தும், அதனை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிராகரித்து விட்டதாக இரண்டாவது குற்றச்சாட்டையும், மூன்றாவதாக தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பாகவும், நான்காவதாக தேர்தல் தொடர்பாக தமது நிலைப்பாட்டையும், ஐந்தாவதாகப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்வதற்கு முன்னர் தமது அமைப்பின் மீதான தடை நீக்கப்படவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

அரசியல் நோக்கத்திற்காக வன்செயலை ஊக்குவித்தல், பொது மக்கள் மத்தியில் வன்முறைகளை மேற்கொள்ளுதல், பொதுமக்களை அச்சுறுத்தல் போன்றவையாவுமே பயங்கரவாத நடவடிக்கைகள் என்பது சர்வதேச நிலைப்பாடாகும்.

அமெரிக்காவின் உலக வர்த்தக மையத்தைத் தாக்கிய அல்கைதாவுக்கும், மத்திய வங்கியைக் குண்டுவைத்துச் சேதமாக்கிய புலிகளின் நடவடிக்கைகளுக்கும் வேறுபாடு இல்லை. தலதா மாளிகையைத் தாக்கியமை பயங்கரவாத நடவடிக்கை இல்லையா? தலதா மாளிகையில் புலிகள் குண்டு வைத்ததற்கும், தலிபான் பாமியான் சிலைகளைத் தாக்கியழித்ததற்கும் வேறுபாடு இல்லை.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் பற்றிய விடயத்தில் தனிநாட்டைக் கைவிட்டது பற்றியோ, சுயாட்சிபற்றி விசேடமாகவோ குறிப்பிடப்படவில்லை.

தேர்தல் பற்றி தமக்கு ஆர்வம் இல்லையென குறிப்பிட்டுள்ள பிரபாகரன், ஜனாதிபதி குமாரதுங்கவின் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துகளையே தெரிவித்துள்ளார். இது அவர் எதற்கு முன்னுரிமை கொடுக்கிறார், எதிர்பார்ப்பு என்ன என்பதற்கான சமிக்ஞையாகும். என்றும் கதிர்காமர் கூறியிருக்கிறார். ■

## மட்டு ஈ.பி.டி.பி அலுவலக குண்டு வெடிப்பில் 26 பேர் காயம்

கடந்த சனிக்கிழமை காலை மட்டக்களப்பு ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் 26 பேர் வரை காயமடைந்தனர்.

ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கு வந்திருந்த 300க்கும் மேற்பட்ட பொதுமக்களுடன் அலுவலகப் பொறுப்பாளர் பரணீதரன் பிரதீபன் உரையாடிக்கொண்டிருந்த வேளையில் அவரது மேசைக்கு கீழிருந்த நேரக்கணிப்பு குண்டொன்று பலத்த சத்தத்துடன் வெடித்ததில் அங்கு குழுமியிருந்தவர்களில் 14 பெண்கள் உட்பட 26 பேர் படுகாயமடைந்தனர்.

இவர்களில் பரணீதரன் பிரதீபன், அவரது உதவியாளர்களான ரதன், கபிலன் ஆகியோரும் அடங்குவர்.

குண்டு வெடிப்பையடுத்து அங்கு விரைந்த ஏனைய ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் பொலிஸாரும், காயமடைந்து அப்பகுதியில் வீழ்ந்து கிடந்தவர்களை வாகனங்களில் ஏற்றிக்கொண்டு மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு விரைந்தனர்.

காயமடைந்த அனைவரும் உடனடியாக அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். 7 பேருக்கு செவிப்பறைகள் சேதமடைந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தையடுத்து படையினரும் பொலிஸாரும் அலுவலகத்தில் வேறெங்காவது குண்டுகள் வைக்கப்பட்டுள்ளனவா எனத் தேடுதல் நடத்தியதுடன் அப்பகுதியில் நின்றவர்களையும் விசாரணைக்குட்படுத்தினர்.

அலுவலகத்திற்கு வந்தவர்களில் எவரோ ஒருவரே இந்தக் குண்டை அங்கு வைத்திருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர்.

விடுதலைப்புலிகள் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கமாட்டார்களென மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பி.இராசமாணிக்கம் தெரிவித்தார்.

இந்தச் சம்பவத்தையடுத்து நகரில் பாதுகாப்பு நடவடிக்கைள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

### திருக்கோவில்

இதேவேளை திருக்கோவில் விநாயகபுரம் பகுதியில் சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்ற பேரணி ஒன்றின்மீது மேற்கொள்ளப்பட்ட பெண்கள்மீது அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த சிலர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு பயந்து நாலாபுறமும் சிதறி ஓடியபோது தடுக்கி விழுந்ததில் மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

## "போருக்கு புலிகள் தயாராகவே உள்ளனர்!"

— அன்ரன் பாலசிங்கம் —

பொதுஜன ஐக்கிய முன்னணி மீண்டும் ஆட்சியமைத்தால் யுத்தம் வெடிக்கும். ஐ.தே.க. வெற்றிபெற்றாலும் சமாதானம் ஏற்பட்டுவிடுமென நம்புவதற்கில்லை. குழப்பமான நிலைமையே தோன்றும். பாராளுமன்றத்தால் தமிழ் மக்களின் பிரச்சனை தீராது என்று விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் ஆலோசகர் அன்ரன்பாலசிங்கம் லண்டன் அரேனா மண்டபத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

இனவாத சக்திகளை மீண்டும் ஆட்சி பீடம் ஏற்றினால் போர் தொடரும் அதனால் நாடு பொருளாதார சீரழிவுக்கு உள்ளாகும் என்ற எச்சரிக்கையை சிங்கள மக்களுக்கு பிரபாகரன் விடுத்திருக்கிறார்.

அரசாங்கத் தரப்பினர் பிரசாரம் செய்வது போல ஐ.தே.க தலைவர் ரணிலுடன் விடுதலைப்புலிகள் எந்தவொரு இரகசிய ஒப்பந்தமும் செய்யவில்லை. ரணில் வெற்றிபெற்றால்கூட ஜனாதிபதி சந்திரிகா முட்டுக்கட்டைகளைப் போடலாம். அதனால் குழப்பான சூழ்நிலையே உருவாகும்.

போருக்குப் புலிகள் தயாராகவே உள்ளனர். போராளிகள் யாழ்ப்பாணம் செல்லத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பையும் யுத்தத்தின் மூலமோ அல்லது சமாதானத்தின் மூலமாகவோ எமது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருவோம்.

நான் இங்கு உரை நிகழ்த்த பிரித்தானிய அரசாங்கம் அனுமதி வழங்குமா என்று பலருக்குச் சந்தேகம் ஏற்பட்டிருந்த நிலையில் இங்கு பேசவந்துள்ளேன்.

மண்டபத்துக்கு முன்னால் பயங்கரவாதத்திற்கு எதிரான தேசிய இயக்கம் என்று கூறிக்கொண்டு சிலர் ஆர்ப்பாட்டம் நடத்தினர். புலிகளுக்குப் பயந்து இராணுவத்தில் இருந்து ஒளித்து ஓடிவந்தவர்கள் சிலரே வெளியில் நின்று கத்துகின்றனர். பிரபாகரனின் மாவீரர் நாளில் நிகழ்த்திய உரைக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக விளக்கமளித்து வருகின்றனர். அதிகாரபூர்வமான விளக்கமளிப்பது நானே. அதற்கான அதிகார பூர்வ அனுமதி எனக்கே வழங்கப்பட்டிருக்கின்றது. இலங்கையில் புலிகளை வெல்ல முடியாது என்ற கட்டம், நிலையற்ற அரசு, நிலை குலைந்துசெல்லும் பொருளதாரம் என்ற முக்கியமான காலகட்டத்தில் பாராளுமன்றத்திற்கான தேர்தல் நடக்கின்றது. விடுதலைப் புலிகளே சர்ச்சைக்குரிய முக்கிய விடயமாக முன்வைக்கப்பட்டுத் தேர்தல் நடக்கின்றது. சமாதான வழிமுறையிலான தீர்வா அல்லது போரா என்ற சர்ச்சை முன்வைக்கப்பட்டிருக்கின்றது. போருக்கும், சமாதானத்திற்கும் இடையிலான போட்டியாகத் தேர்தல் நடக்கின்றது. முதற்தடவையாகத் தலைவர் பிரபாகரன் சிங்கள மக்களுக்கு விடுத்திருக்கும் அழைப்பில் இந்தத் தேர்தலில் போர் வெறிகொண்ட இனவாத சக்திகளை ஒதுக்கித்தள்ளுமாறு கேட்டிருக்கின்றார். இல்லையெனில் போர் தொடரும். அதனால் நாடு பொருளாதார சீரழிவுக்கு உள்ளாகும். என்றும் பாலசிங்கம் தனது உரையில் தெரிவித்தார். ■

## 'முடிவுகள் வரும்போது வெளிநாட்டில் வாழ்வு'

தேர்தல் முடிவுகள் வெளிவர முன்னர் பல அரசியல் முக்கியஸ்தர்கள் குடும்பங்களுடன் நாட்டை விட்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்வேறு நாடுகளுக்கு குடும்பத்தவர்களுடன் செல்வதற்கு பல பிரபலங்கள் விமான டிக்கெட்டுகளை பதிவு செய்துள்ளன.

இதனால் இந்தக் காலப்பகுதியில் வெளிநாடு செல்லும் அனைத்து விமானங்களினதும் இருக்கைகள் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு விட்டதாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, தாய்லாந்து மற்றும் மேற்கு நாடுகளுக்குச் செல்லவே விமான டிக்கெட்டுகள் பெறப்பட்டுள்ளன.

இதில் பலர் அரசியல்வாதிகள். இவர்களை விட பிரபல தொழிலதிபர்கள், வர்த்தகர்கள், பாதுகாப்புத்துறை உயரதிகாரிகளும் அடங்குவரெனத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். நகரில் மாபெரும் மக்கள் பேரணி

### ஆயிரக்கணக்கான மக்கள் பங்கேற்பு

நாரந்தன்னை தாக்குதல் சம்பவத்தின் பின்னர் மந்த கதியில் இருந்த குடாநாட்டின் தேர்தல் பிரசாரங்கள் ஞாயிறன்று ஈ.பி.டி.பி.யினரின் மக்கள் பேரணியோடு மீண்டும் புத்துயிர் பெற்றது.

யாழ்.நகரில் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் 2 மணிவரை 200 இற்கும் மேற்பட்ட வாகனங்களிலும், நடைபவனியாக ஊர்வலமாகவும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஈழமக்கள் ஜனநாயக் கட்சி (ஈ.பி.டி.பி) யின் ஆதரவாளர்கள் மக்கள் பேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

யாழ்.குடாநாட்டின் சகல பகுதிகளிலுமிருந்தும் துரையப்பா ஸ்ரேடியத்தை வந்தடைந்த 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இந்த மக்கள் பேரணியில் கலந்துகொண்டனர்.

வாகன ஊர்திகள் மற்றும் கால்நடையாகப் புறப்பட்ட இந்த மக்கள் பேரணி, யாழ். நகரைச் சூழவுள்ள அனைத்து வீதிகள் ஊடாகவும் ஊர்வலமாகச் சென்றது.

இந்த மக்கள் பேரணியில் கலந்து கொண்ட பொதுமக்கள் 'எங்கள் சக்தி மக்கள் சக்தி', 'எங்கள் சின்னம் வீணைச் சின்னம்', 'போடுங்கள் புள்ளடி வீணைக்கு', 'மக்கள் சேவைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா' ஆகிய கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது யாழ்.நகர வீதிகள், பல்கலைக்கழகச் சுற்றாடல், நல்லூர் ஆகிய பகுதிகளில் பெரும் திரளான மக்கள் வெள்ளத்தைக் காணக்கூடியதாகவிருந்தது.

இந்த மக்கள் பேரணியில் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளரும், வேட்பாளருமான கே.வி.குகேந்திரன் (ஜெகன்), முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வேட்பாளருமான எஸ். தவராஜா, மற்றும் பிரதேச உறுப்பினர்கள், கட்சியின் முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

பிற்பகல் 2 மணிக்குப் பின்னர் இந்த மக்கள் பேரணியில் கலந்துகொண்ட வாகன ஊர்திகள் யாழ்.குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் ஊர்வலமாகச் சென்றன.

இரண்டு கிலோமீட்டர் தூரத்திற்கு இந்த மக்கள் பேரணி யாழ்.நகர வீதிகளில் ஊர்வலமாகச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

## தப்பியோடிய படையினரை கைது செய்யுமாறு உத்தரவு

படைகளிலிருந்து தப்பியோடித் தலைமறைவாகியிருப்போரை உடனடியாகக் கைது செய்யுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொலிஸாருக்கு அவசர உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமை குறித்து சனிக்கிழமை, ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் உயர்மட்ட மாநாடொன்று நடைபெற்றது.

இதில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர் உட்பட பாதுகாப்பு உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தேர்தலில் வாக்குமோசடிகள் மற்றும் வன்முறைகளில் ஈடுபடுவதற்கு எதிர்க்கட்சியினர், இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களை பயன்படுத்தவுள்ளதாகப் பொலிஸ் தகவல்கள் தெரிவித்ததையடுத்தே அவர்களை உடனடியாகக் கைது செய்யுமாறு ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்தார்.

வடமேல் மாகாணத்தில் இடம்பெற்று வரும் மோசமான வன்முறைகளில் இவர்களே ஈடுபட்டுவருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புலிகளின் மரண தண்டனை

கிழக்கில் புலிகளின் தளபதி கருணா மற்றும் பிராந்தியப் பொறுப்பாளர் தாத்தா ஆகியோரின் நெருங்கிய உறவினர்கள் இருவர் கடந்த 2ம் திகதி புலிகளால் மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கிராம சேவகரான ஞானமுத்து-விவேகானந்தராசா (40) என்பவரும் ராகவன் நேசன் (24) எனப்படும் இளைஞர் ஒருவருமே புலிகளால் மரண தண்டனை விதிக்கப்பட்டோராவர்.

சந்திவெளியிலும், கிரானிலும் இவர்களது சடலங்கள் சூட்டுக் காயங்களுடன் கிடக்கக் காணப்பட்டன. சுடப்பட்ட கிராம சேவகர் புலிகளின் கிழக்குத் தளப்பிரதேசமான குடும்பிமலைப் பகுதியில் கடமையாற்றியவர் என்றும் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் இவர் புலிகளால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தார் என்றும் கூறப்படுகிறது.

மற்றைய இளைஞரான நேசன் என்பவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## புலி உறுப்பினர் காயம்

புலிகளின் கிழக்குப் பிரதேச புலனாய்வுப் பொறுப்பாளரான அற்புதன் மாஸ்ரர் என்பவர் கிளேமோர் கண்ணிவெடியில் அகப்பட்டு தனது காலை இழந்தார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள மட்டக்களப்பு-பன்குடா வெளியில் கடந்த வாரம் இச்சம்பவம் இடம்பெற்றது. சம்பவத்தைத் தொடர்ந்து பல பொதுமக்கள் புலிகளால் கடும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள்.

கடந்த ஒருவாரத்தில் புலிகளின் முக்கியஸ்தர்களைக் குறிவைத்து நடத்தப்பட்ட இரண்டாவது கண்ணிவெடித் தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

# முரசம்

## தேர்தலுக்குப் பிந்திய வன்முறைகள் தவிர்க்கப்படவேண்டும்

**அன்புள்ள உங்களுக்கு, வணக்கம்.**

சுமார் இருபது உயிர்களை பலிகொண்டு நூற்றுக்கணக்கானவர்களைக் காயங்களுக்கு உள்ளாக்கிவிட்டு தேர்தல் பிரசாரங்கள் முடிவுக்கு வந்துள்ளன.

தேர்தலுக்கு முந்திய வன்முறைச் சம்பவங்கள் இரண்டாயிரத்தை நெருங்கியுள்ளன. அடுத்து இரண்டாம் கட்டம் ஆரம்பமாக இருக்கிறது!

வாக்களிப்பு முடிவுகள் வெளியானதும் மீண்டும் ஒரு சுற்று வன்முறைகள் அரங்கேறும். இதில் பெரும்பாலும் பாதிக்கப்படுவது தேர்தல் தோல்வியைத் தழுவிய கட்சிகளின் ஆதரவாளர்கள்தான்.

இந்த நாட்டில் தேர்தல் என்பதும் வன்முறை என்பதும் ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் என்று சிந்திக்கும் அளவுக்கு கடந்த நாட்களில் நடந்த சம்பவங்கள் அமைந்திருந்தன.

வன்முறைகளைப் பற்றிப் பேசாமல் தேர்தலைப் பற்றிப் பேச முடியாது என்றளவுக்கு ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளது.

இந்த அநர்த்தத்தை அரசியல்வாதிகள் விளங்கிக் கொள்ளாவிட்டாலும் சமூகத்தில் உள்ள பொறுப்பு வாய்ந்த பிரஜைகளும் மதத்தலைவர்களும் கடும் கவலை கொண்டுள்ளார்கள்.

வன்முறைகளை நிறுத்துமாறு மும் மதங்களைச் சேர்ந்த தலைவர்கள் கடந்த ஒரு மாத காலத்துக்குள் பல தடவை கோரிக்கை விடுத்தும் எவ்வித பிரயோசனமும் இல்லாமல் போய்விட்டது.

தேர்தல் முடிவடைந்ததும் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பதும் வழமையான விடயமாகிவிட்டது.

இம்முறை தேர்தலுக்கு முந்திய வன்முறைகளின் தன்மையை அவதானிக்குமிடத்து வாக்களிப்பு முடிவுகள் வெளியானதும் பழிதீர்க்கும் படலம் ஒன்று அரங்கேறுவதற்கான சாத்தியம் போதிய அளவில் காணப்படுகின்றது.

அதனை முன்கூட்டியே தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்ப பாதுகாப்புத் தரப்பினருக்கு இருக்கின்றது.

இதுவரை இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவதானிக்குமிடத்து பொலிஸாரின் கடமை குறித்து திருப்தி கொள்ள முடியாது. ஒரு சில நிகழ்வுகளை தவிர்த்துவிட்டுப் பார்த்தால் பொலிஸாரின் மந்தகரமான செயற்பாடுகளும் பல வன்முறைச் சம்பவங்களுக்கு தூண்டுகோளாக அமைந்துள்ளன.

இத்தனைப்பேர் கொலை செய்யப்பட்டதாகவும் இத்தனை வீடுகள் சேதமாக்கப்பட்டதாகவும் புள்ளி விபரம் வெளியிடுவதால் மாத்திரம் அமைதியை நிலை நாட்டி விட முடியாது.

தேர்தலின் பின் வன்முறைகள் தலை தூக்காத வண்ணம் உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

எந்தக் கட்சி வெற்றிபெற்றாலும் மறுதரப்பினர் மீது வன்முறையை கட்டவிழ்த்து விடுவதை தவிர்க்க கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

தேர்தல் முடிந்த அடுத்த ஒரிரு நாட்கள் முழு நாடுமே ஸ்தம்பித்துப் போயிருக்கும். குண்டர்களின் ராஜ்யம் தான் நடக்கும் இதனை இந்த நாடு வரலாற்றில் பலமுறை கண்டுவிட்டது. இந்தமுறையாவது இந்த நிலமை மாற்றப்படவேண்டும்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

**என்றென்றும் அன்புடன்,**
**ஆசிரியர்.**

---

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மக்கள் சக்தியின் முடிவுகளும் நெருக்கடிகளும்

**எம்.பி.எம். பர்ஸான்**

சுமார் 6 மாதகாலத்துக்கு மேலாக நீடிக்கும் அரசியல் நெருக்கடி இந்தப் பொதுத்தேர்தலுடனாவது முடிவுக்கு வருமா என்ற கேள்விக்கு பல தரப்புகளில் இருந்தும் சாதக மற்ற பதில்களே தரப்படுகின்றன. மீண்டும் ஸ்திர மில்லாத நிலையே தோன்ற வாய்ப்பிருப்பதாக அர சியல் கட்சிகள் முதல் தேர்தல் அவதானிப்பாளர்கள் வரை சகலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.தேர்தல் முடிவு கள் குறித்து வெளியிடப்பட்டுவரும் ஆருடங்களை வைத் துப் பார்க்கும்போது கூட அடுத்த பாராளுமன்றமும் நீடித்து நிலைக்கக் கூடிய ஒன்றாக இருக்குமா என்பதை உறுதியாகக் கூறமுடியாதுள்ளது. இதனிடையே பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத பட்சத்தில் நிலைமை மேலும் சிக்கலாகும் சாத்தியமிருக்கிறது. அரசாங்க உயர் மட்டத் தலைவர்கள்



அண்மைக் காலமாக வெளியிட்டு வரும் கருத்துக்களால் அரசியல் நெருக்கடி அரசியலமைப்பு நெருக்கடியாக மாற்றமடையலாம் என்பது போல் தெரிகிறது.

ஐ.தே.க. அரசாங்கத்துடன் தன்னால் ஒத்துழைத்து செயற்பட முடியாது என்று ஜனாதிபதி குமாரதுங்க பகிரங்கமாகவே கூறிவருகிறார்.

தேர்தலில் பெரும்பான்மைப் பலம் ஐக்கிய தேசிய முன்னணிக்குக் கிடைத்தாலும் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்று ஆளுந்தரப்பில் இருந்து கருத்து முன்வைக்கப்படு கின்றது. பாராளுமன்றத்தில் அதிகப்படியானவர்களின் நம்பிக்கையை வென்றவருக்கே பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் ஐ.தே.க. திட்டவட்டமாக கூறியுள்ளது.

மீண்டும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு பெரும் பான்மைப் பலம் கிடைக்கும் பட்சத்தில் பிரச்சனை யிராது. ஆனால் ஐ.தே.க. வெற்றிபெறுமாயின் பல புதிய குழப்பங்கள் தோன்றும் என்பதில் சந்தேகமில்லை.

ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், பிர தமரும் அரசாங்கமும் வேறொரு கட்சியினுடையதாகவும் இருந்த குறுகிய அனுபவம் இலங்கை அரசியலுக்கு இருக்கிறது. 1994ம் ஆண்டு ஐ.தே.க.வைச் சேர்ந்த டி.பி. விஜேதுங்க ஜனாதிபதியாக இருந்தபோது பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவி சந்திரிகா பிரதம ரானார்.

இது 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடந்து, அதே வருடம் நவம்பரில் நடந்த தேர்தலில் ஐ.தே.க. தோல்வி கண்டது. சந்திரிகா ஜனாதிபதியானார். 3 மாதம் மட்டுமே நீடித்த டி.பி. விஜேதுங்க-சந்திரிகா அரசியல் எவ்வித தலை வலியையும் கொடுக்காது சந்திரிகாவிடமே அமைச்சரவையை அமைக்கும் பொறுப்பையும் ஒப்படைத்த டி.பி. அமைதியாக ஒய்வு பெற்றார். ஆனால் இம்முறை ஐ.தே.க. வெற்றி பெறும் பட்சத்தில் இவ்வாறு அமைதியான முறையில் ஆட்சி மாற்றம் நடக்குமா என்பது சந்தேகமே. ஏனெனில் ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைய இன்னும் நாலரை வருடங்கள் இருக்கின்றன. அதைவிட இரு தரப்பும் ஒருவரை ஒருவர் நசுக்கும் எண்ணத்துடன் ஜென்மப்பகையில் இருக்கிறார்கள். தாம் ஆட்சிக்கு வந் தால் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடுகளை இரத்துச் செய்யப்போவதாகவும், குற்றவியல் பிரேரணை ஒன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து திருமதி குமாரதுங்கவை வீட்டுக்கு அனுப்பப் போவதாகவும் ஐ.தே.க. கூறிவரு கின்றது. இந்நிலையில் இவ்விரு தரப்பினருக்கும் இடையில் ஒத்துழைப்பை எதிர் பார்க்க முடியாது.


தேர்தலில் தமது கட்சி வெற்றிபெற்றதும் ஆட்சியை வழங்க ஜனாதிபதி மறுத்தால் சிவில் புரட்சி ஒன்றை மேற்கொண்டாவது அதிகாரத்தைப் பெறப்போவதாக ஐ.தே.க. தலைவர்கள் கூறுகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியை பொறுத்த வரை யில் ஜே.வி.பி.யுடன் சேர்ந்து நன்னடத்தை அரசாங்க மொன்றையாவது அமைத்துக்கொள்வதே அதன் உச்ச கட்டக் கனவு. ஏனெனில் தனித்து நின்று பெரும்பான்மைப் பலத்தை பொதுஜன ஐக்கிய முன்னணி கைப்பற்றும் சாத்தியம் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. 1994ல் கிடைத்த வெற்றி இம்முறை கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் ஜே.வி.பி.யுடன் சேர்ந்து நன்னடத்தையில் ஈடுபடுவதும் கூட அத்தனை சுலபமான காரியமாக இருக்கப்போவதில்லை.

இம்முறை ஜே.வி.பி. கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றும். பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவிப்பதாயின் அதற்காக வேண்டி ஜே.வி.பி. முன்வைக் கப்போகும் நிபந்தனை முன்னைய நிபந்தனைகளைவிடவும் இறுக்கமானவையாகவே அமையும். ஏனெனில் ஐ.தே.க. ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்ற ஒரே காரணத்தை மையமாக வைத்து பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கண்ணை மூடிக்கொண்டு ஆதரவளிக்க ஜே.வி.பி.யினால் முடியாது. அவ்வாறு செய்தால் அந்தக் கட்சியின்பால் ஈர்க்கப்படும் இளைஞர் களின் எண்ணிக்கையில் நிச்சயம் சடுதியான வீழ்ச்சி ஏற்படும். ஆதலால் ஜே.வி.பி. சந்திரிகாவுக்கு கடுமையான நிபந்தனைகளை முன்வைக்கும். முன்பு போல ஜே.வி.பி.யின் நிபந்தனைகளை முழுமையாக ஏற்கும் நிலையில் திருமதி குமாரதுங்கவும் இல்லை என்றுதான் கூற வேண்டும். ஏனெனில் இனப் பிரச்சனை தொடர்பாக ஜே.வி.பி.யின் நிபந் தனைகள் சமாதான முயற்சிகளுக்கு பின்னடைவை தோற்றுவிக்கலாம் என்ற பொதுவான அபிப் பிராயம் நிலவுகிறது. உள்நாட்டு பொருளாதார சமூக சூழ்நிலைகளை கருத்தில் கொள்ளுமிடத்து தொடர்ந்து போரை முன்னெடுத்துச் செல்ல ஆட்சிக்கு வரும் எந்தக் கட்சியாலும் முடியாது. அதனால் என்னதான் இருந்தாலும் ஜே.வி.பி.யுடன் நன்னடத்தைக்கு செல்வதாக இருந்தால் சமாதானம் தொடர்பில் தமிழ் மக்களுக்கு சாதக மானதொரு நிலைப்பாட்டை எடுக்கவேண்டிய கட்டாயம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இருக்கிறது. ஜே.வி.பி.யுடன் கூட்டமைப்பை உரு வாக்கும் அதே நேரம் சமாதானப்பேச்சுவார்த்தை களை மீளத்தொடங்கக் கூடியதுமான இரண்டுக்கு மிடையில் ஒரு சமாந்திரக் கோட்டை வரையும் சவாலை பொதுஜன ஐக்கிய முன்னணி எதிர் கொள்கின்றது.

இது விடயத்தில் பொதுஜன ஐக்கிய முன் னணி பலத்த சங்கடத்துக்குள் அகப்பட்டுக்கிடக் கின்றது. தற்போது ஜே.வி.பி.யின்பால் செல்லும் ஒவ்வொரு வாக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி யில் இருந்து கழன்று செல்லும் வாக்குத்தான். இவ்வாறு தமது வாக்கு வங்கியை கரைக்கும் ஜே.வி.பி.யிற்கு எதிராக ஒரு வார்த்தைகூட பேச பொதுஜன ஐக்கிய முன்னணியால் முடியா துள்ளது.

கடந்த 20 நாட்களில் அரசாங்க அச்சு ஊடகங்களில் ஜே.வி.பி.க்கு பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு செய்தி கூட பிரசுரமாகவில்லை என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் பிர திநிதி ஒருவர் கூறியிருக்கிறார். உண்மையில் இன்னமும் அமையப்பெறாத கற்பனா ரீதியிலான ஒரு 'நன்னடத்தை அரசாங்கத்துக்குள்' பொதுஜன ஐக்கிய முன்னணி இறுகிக்கிடப்பதையே இது காட்டுகின்றது.



தேர்தல் களத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நீதி யும் நேர்மையுமான தேர்தல் ஒன்றின் காவலனாக தம்மை இனங்காட்ட முற்படும் அதே வேளை மறு புறத்தில் வன்முறைகளையும் கட்டவிழ்த்து விட்டுள் ளது. பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கள மிறங்கியிருக்கும் குண்டர்களுக்கு ஈடு கொடுக்க ஐ.தே.க.வும் தமது சார்பாக உள்ள கொலை காரர்களை ஏவி விட்டுள்ளது. அரசியல் ஜன நாயகம் குறித்து ஐ.தே.க.வுக்குள் இருக்கும் நம்பிக்கையீனத்தின் வெளிப்பாடாகவே இதனை கருத வேண்டியுள்ளது.

1994ம் ஆண்டு சந்திரிக்காவுக்கு இருந்த சமாதான பிரதிமை இன்று ரணில் விக்கிர மசிங்கவுக்குக் கிடையாது. ரணில் வெற்றிபெற் றால் அது உண்மையில் அவரது திறமைக்குக் கிடைத்த வெற்றி என்பதை விடவும் சந்திரிக்காவின் தவறான முடிவுகளுக்கு கிடைத்த தோல்வி என்பதுதான் பொறுத்தமானது.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியை சுற்றி யிருக்கும் பல வர்ணங்களைக் கொண்ட வானவில் கூட்டமைப்பு மேலோட்டமான எண்ணக் கருக்க ளால் தற்காலிக தேவைகளின் நிமித்தம் உருவாக் கப்பட்டவையாகும். அதனால் கொள்கை ரீதியில் உறுதியான ஒரு கூட்டணி அரசை வழங்குவதில் அது எந்தளவு தூரம் வெற்றி பெறும் என்பதை எதிர்வு கூறமுடியாது. ஐக்கிய தேசியக்கட்சி எதிர்நோக்கும் பிரதான சவால் பல இன, மத கூட்டமைப்பொன்றை கொண்டு நடத்துவதுதான். இந்த தேர்தல் செயற்பாட்டில் அத்தகையதொரு பல்லின அங்கத்துவம் கொண்ட கூட்டணியின் உறுதிப்பாட்டை நிரூபிக்க கடைசி வரையில் ஐக்கிய தேசியக் கட்சியினால் முடியாமல் போயுள் ளது.

குறைந்த பட்சம் ஐ.தே.க. சார்பாக பிரசுரிக் கப்பட்ட ஒரு விளம்பரத்திலாவது அத்தகைய பன்முகத்தன்மை குறித்த விடயம் வெளிப்படுத் தப்பட்டிருக்கவில்லை. வாசுதேவ நாணயக்கார, விக்கிரமபாகு, கருணாரத்ன போன்றவர்களால் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டப்பட்டு வருவதும் இதுதான். ஐ.தே.க. வானவில் கூட்டமைப்பினால் இனப்பிரச்சனை தொடர்பில் யதார்த்தமான ஒரு தீர்மானத்துக்கு வர முடியாமைதான். உண்மையில் ஐ.தே.க.வை சுற்றி பலவர்ணங்கள் ஒன்று திரண் டிருந்தாலும் ரணில் விக்கிரமசிங்கவின் போஸ்டர் களை அழகுபடுத்துவதற்காக மட்டுமே அவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த 7 வருட காலத்திலும் இனப்பிரச்சனை தீர்வு தொடர்பில் அரசியல் தந்திரோபாயமான செயற் திட்டங்களை கொண்டிருந்தாலும் தெளிவான ஒரு கொள்கைத் திட்டத்தை அது கொண்டிருக்கவில்லை.

ஐ.தே.க. எதிர்கொள்ளும் இந்த சவால் தேர்தல் பிரசாரத்தின் போதே வெளிப்படத்தொடங்கியது. தேசியப் பிரச்சனைக்கான தீர்வு விடயத்தில் அந்தக் கட்சிக்குள் உள்ள கடும்போக்காளர்களும், மிதவாதிகளும் பரஸ்பரம் முரண்பட்ட கருத்துக் களை வெளியிட்டு வருவதை இதற்கு உதாரண மாகக் கூறலாம்.

ஐ.தே.க.வை சுற்றியிருக்கும் மக்கள் சக்தி அதன் பொருளாதார முகாமைத்துவத்தை அடிப் படையாகக் கொண்டதுதான். அந்தக் கட்சிக்கு தேர்தலில் உள்ள மிகப்பெரிய சாதகத்தன்மையும் இதுதான். நாட்டின் பொருளாதாரத்தை வளப் படத்துவதில் பொதுஜன ஐக்கிய முன்னணி கண்ட தொடர்ச்சியான தோல்வி ஐ.தே.க.வின் முகாமைத் துவ திறன் மேல் மக்களை நம்பிக்கைகொள்ள வைத்துள்ளது.

ஆனால் தற்போது ஐ.தே.க. தலைவர்கள் மேடைகளில் கூறிவரும் ஜனநாயக சீர்திருத்தமும், பொருளாதாரச் சீர்திருத்தமும் ஒரே நேரத்தில் நிகழ முடியும் என்று எதிர்பார்க்கக்கூடாது. மூன்றாம் உலக நாடொன்றில் ஜனநாயக வரம்பு களை விரிவு படுத்திக்கொண்டு பொருளாதார நிலையை மேம்படுத்தும் செயற்பாடு மிகக் குறைந்த அளவிலேயே நிகழுகின்றது. இதற்கு இலங்கையும் ஐ.தே.க.வும் விதிவிலக்காக இருக்க முடியாது.

எவ்வாறெனினும் வரப்போகும் தேர்தல் முடிவுகள் உறுதியான ஒரு அரசாங்கத்துக்கு வழி அமைக்கவேண்டும் என்பதே நாட்டு மக்கள் அனைவரதும் ஏகோபித்த விருப்பமாக இருந்த போதிலும் அது நிறைவேறுமா என்பது சந்தேகமே.

மீண்டும் ஸ்திரமற்ற அரசாங்கம் ஒன்றோ அல்லது அதிகார கயிறிழுப்புகளோ தோன்றும் பட்சத்தில் மற்றனைவரை விடவும் பாதிப்புக்கு உள்ளாகப் போவது தமிழ் மக்கள்தான். ஏனெனில் ஆட்சி தள்ளாடும்போது எந்தத்தரப்பும் அதி காரத்தை பாதுகாக்கும் முயற்சியைத் தவிர வேறெதிலும் ஈடுபடப்போவதில்லை. நேரகாலம் முழுவதையும் பாராளுமன்றப் போராட்டத்திலேயே கழிக்கும் அரசாங்கமொன்றினால் இனப்பிரச் சனை தீர்வு, பொருளாதார அபிவிருத்தி என்று எதைப்பற்றியும் சிந்திக்க முடியாது. அதனால் தென்னிலங்கையில் அரசியல் நெருக்கடி நீளும் அளவுக்கு இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளும் பின்போடப்பட்டுக்கொண்டே இருக்கும்.

மறுபுறத்தில் யுத்தத்துக்கு அல்லது சமா தானத்துக்காக வாக்களியுங்கள் என்று புலிகளின் தலைவர் கூறியிருக்கிறார். 1999ம் ஆண்டிலும் இதே கருத்துப்படவே பிரபாகரனின் மாவீரர் தின உரை அமைந்திருந்தது. ஐக்கிய இலங்கைக் குள் சமாதானமாக வாழ தாம் தயாரென்றும் புலிகள் அறிவித்துள்ளனர். தேர்தலின் பின்னர் பேச்சுவார்த்தையோ போரோ எதுவாக இருந்தா லும் தாம் தயாராக இருப்பதை புலிகள் மறை முகமாக கூறுகின்றனர்.

இரண்டு தசாப்தங்களாக கொழுந்துவிட் டெறியும் பகைமைத்தீயை அணைக்க ரணில் விக்கிரமசிங்கவுக்கோ சந்திரிகா குமாரதுங்க வுக்கோ தனியாக முடியாது என்பதை கடந்த பல வருடகால அனுபவத்தில் நாம் தெளிவாக உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

தேர்தலின் பின்னர் யார் அதிகாரத்துக்கு வந்தாலும் தங்களுக்கிடையிலான அதிகாரப் போட்டிகள், கௌரவப் பிரச்சனைகள் அனைத் தையும் மறந்துவிட்டு தமிழ் மக்களின் பிரச்சனை களுக்கு கூடிய விரைவில் முடிவுகாண உழைப்பதே சகலருக்கும் நல்லது. ■

# அண்டை மண்டலத்தில்...

கானகன்

அதிரடியாக ஒரு மினி பட்ஜெட்டை அறிவித்து தமிழக மக்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது தமிழக அரசு. தமிழக அரசியல் வரலாற்றில் இது போன்ற அதிர்ச்சிகரமான பொருளாதார அணுகுமுறையை இதற்கு முன் வேறெந்த அரசும் நிகழ்த்தியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அதுவும் சட்டசபை நடக்காத காலக்கட்டத்தில், ஏற்கெனவே அ.தி.மு.க. அரசு பதவி ஏற்றபின்பு நிதியமைச்சர், பொன்னையன் ஒரு பட்ஜெட்டை சில மாதங்களுக்கு முன்பு தான் தந்துள்ளார் என்ற வகையில் அ.தி.மு.க. அரசு இப்படிப்பட்ட ஒரு மினிபட்ஜெட்டை சிக்கன நடவடிக்கை என்ற பெயரில். அறிவித்துள்ளது மக்கள் மத்தியில் ஒரு கலக்கத்தை உருவாக்கியுள்ளதைக் காண முடிகிறது.

பஸ்கட்டண உணர்வு, மின்கட்டண உயர்வு, பால்விலை உயர்வு, ரேஷன் அரிசி விலை உயர்வு போன்ற மக்களின் அத்தியாவசிய அடிப்படை தேவைகளில் கடும் விளைவுகளை உருவாக்கியதோடு மட்டுமில்லாமல் பஸ்போக்குவரத்து தனியார்மயம், அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் 30 சதவிகித ஆள்குறைப்பு, இனி அரசு ஊழியர்களை வேலைக்கமர்த்த போவதில்லை (டாக்டர், ஆசிரியர், போலீஸ் பணியிடங்களைத் தவிர) ஆன்லைன் லாட்டரி அறிமுகம் போன்ற கொள்கை முடிவகளையும் இந்த அரசு அறிவித்துள்ளது. பொதுவாக இது போன்ற முக்கியமான கொள்கை முடிவகளை சட்டசபையில் வைத்து எதிர்கட்சிகளின் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் பெற்றே அரசாங்கங்கள் இதுவரை நடைமுறைபடுத்தியுள்ளன. ஆனால் வழக்கத்துக்கு மாறாக மட்டுமல்ல, ஜனநாயக அணுகு முறைகளுக்கு விரோதமாகவும் இந்த மினி பட்ஜெட் சமர்பிக்கப்பட்டுள்ளதானது அ.தி.மு.க.வின் நெருங்கிய தோழமை கட்சிகளான தமிழ் மாநில காங்கிரஸ் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி போன்றவைகளையும் கூட எதிர்க்க வைத்துவிட்டது.

பஸ்கட்டணங்கள் சுமார் 30 சதவிகிதத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது. இது நாள் வரையிலுமான அரசுகள் 10 முதல் 15 சதவிகிதத்திற்கு மேல் பஸ்கட்டணங்களை உயர்த்தியதே இல்லை. தற்போது 17 நாட்கள் பஸ் ஊழியர்கள் ஸ்டிரைக் வெடித்து ஒய்ந்துள்ள நிலையில் பஸ்கட்டண உயர்வு ஓரளவு நியாயம் தான் என்று பொதுமக்கள் ஏற்றுக் கொள்ள முன்வந்தாலும் ஒரேயடியாக அதிகமாக உயர்த்தப்பட்டதை ஜீரணிக்க முடியாமல் தவிக்கிறார்கள்.

போக்குவரத்துக் கழகங்களால் அரசுக்கு இதுவரை 2035 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டும் அரசு, கட்டண உயர்வு தவிர்க்க முடியாதது என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இது தவிர போக்குவரத்துத் துறை படிப்படியாக தனியார் மயப்படுத்தப்படும் எனவும் அரசு சூசமாக காய் நகர்த்தியுள்ளது. போக்குவரத்துத் துறையை தனியார் மயப்படுத்துவதின் மூலம் குறிப்பிட்ட போக்குவரத்து வழி தடங்களில் பெர்மிட் பெற தனியார் பஸ் உரிமையாளர்கள் கோடிக் கணக்கில் ஆளும் கட்சித் தலைமைக்கு

## இது பட்ஜெட்டா? இல்லை பயங்கரவாதமா?

லஞ்சம் தர முன்வருவார்கள் என்பது கடந்த கால சரித்திரம் தந்த பாடமாகும்!

கான்வெண்ட், உள்ளிட்ட தனியார் பள்ளிகளில் படிக்கும் லட்சக்கணக்கான மாணவர்கள் இலவச பயணச்சலுகைகளை அனுபவிப்பதன் மூலம் அரசுக்கு ரூ.100 கோடிக்கு மேல் இழப்பு ஏற்படுகிறது. இது தவிர்க்கப் படலாம்.

மின்கட்டண உயர்வும் ஒரு சின்ன ஷாக்காகிவிட்டது. வீட்டு உபயோகத்திற்கான மின் கட்டணம் 25 பைசாவிலிருந்து ரூ.1.45 வரை உயர்த்தப்பட்டுள்ளதால் சாதாரண மக்கள் மாதம் ரூ.50லிருந்து ரூ.300 வரை அதிகமாக செலவிட நேரிடும். மேலும் தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள் கல்வி நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் மின்சார கட்டணம் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது மற்ற பல பொருள்களின் விலை உயர்விற்கும் வழிவகுக்கும்.

ஆனால் மின்வாரியம் சுமார் 3000 கோடி பற்றாக் குறையில் இயங்கி கொண்டிருக்கும் நிலையில் அரசாங்கம் இலவச மின்சாரமாக விவசாயிகளுக்கும், குடிசை வாசிகளுக்கும் சுமார் 4.950 கோடி இழந்து கொண்டுள்ளது. இந்த இழப்பை தடுத்து நிறுத்த குறைந்த பட்சம் பெரும் நிலப்பரப்புகளுக்கும், பண்ணையார்களுக்கும் வழங்கும் இலவச மின்சாரத்தையாவது அரசு தடுத்திருக்கலாம் என்பதே பலரின் எதிர்பார்ப்பு! தற்போதைய மின்கட்டண உயர்வால் அரசுக்கு ரூ.1500 கோடி வருவாய் கிடைத்தாலும் அது மின்வாரியம் புத்துணர்வுபெற்று பயன்பெறப் போவதில்லை என்றே கருத முடிகிறது.

மிகத்தரமான பால் வழங்கி வரும் ஆவின் நிறுவனமும் தொடர்ந்து நஷ்டத்திலேயே இயங்கி வருவதாலும், பல வருடங்களாக பால் உற்பத்தி செய்யும் சிறு விவசாயிகள் பால் கொள்முதல் விலையை உயர்திக் கோரியும் தங்களுக்குத் தர வேண்டிய பாக்கித் தொகைகளை கேட்டுப் போராடி வருவதாலும் பால் விலையை உயர்த்திக் கொள்ள ஆவின் நிர்வாகத்திற்கு அரசு அனுமதி தந்துள்ளது. அரசாங்கம்பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்திற்கு மானியமாக சுமார் 50 கோடியும், வழிவாகு கடனாக இணையத்திற்கு ரூ.28 கோடியும் வழங்கி உள்ளது. பல தனியார் பால் நிறுவனங்கள் நல்ல லாபத்தில் இயங்கி வரும் சூழலில் அரசு நிறுவனமான ஆவின் மட்டும் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கி வருவதால் பால்விலை ஒரு லீட்டருக்கு ரூ.2 என்று உயர்த்தப்பட்டுள்ளது. இதை ஏற்றுக் கொள்வது தவிர்க்க இயலாததே.

அரசு ஊழியர்களை 30 சதவிகிதம் குறைக்க உள்ள அரசின் திட்டம் உலக வங்கியின் கட்டளை என்பது அனைவரும் அறிந்ததே. சில துறைகளில் கூடுதல் ஊழியர்களும், வேறு பல துறைகளில் மிகவும் பற்றாக்குறையிலான ஊழியர்களும் உள்ள நிலையில் பொதுவாக 30 சதவிகித ஊழியர்கள் குறைப்பு என்பது பல பணிகளும், அரசின் நடவடிக்கைகளும் ஸ்தம்பிக்க காரணமாகிவிடக்கூடும். அதுவும் தினக்கூலி அடிப்படையில் கூட இனி ஆட்கள் எடுக்கப்படமாட்டாது என்பதும் காண்ட்ராக்ட் முறையில் தான் அரசு பணிகள் நிவேற்றப்படும் என்பதும் அரசின் நிர்வாகத் திறமையின்மைக்கு சிறந்த எடுத்துக் காட்டாக அமைகிறது. தனது 10 லட்சம் ஊழியர்களில் சுமார் 2.5 லட்சம் பேரை வீட்டுக்கு அனுப்பப்போகிறேன் என்று எந்த தைரியத்தில் அரசு கூறுகிறது. இனி ஏற்படும் பிச்சனை என்ன? இதை சமாளிக்கும் அணுகுமுறைகள் என்ன? என்ற திட்டமிடல் இல்லாமல் அரசாங்கம் அதிரடி அறிவிப்பு செய்துள்ளது. கடைந்தெடுத்த அரைவேக் காட்டுத் தனமாகும். இதில் என்ன கொடுமை என்றால் பணியாளர் மற்றும் சீராய்வு கமிஷன் ஒன்றை ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி. ஏ.எம். சுவாமிநாதன் தலைமையில் தமிழக அரசு அறிவித்த அடுத்த நாளே இந்த அறிவிப்பை அரசு செய்துள்ளதானது கமிஷன் அமைத்ததற்கே அர்த்தமில்லாமல் செய்துவிட்டது.



ஆன்லைன் லாட்டிரி என்ற ஒன்றை இந்த அரசு அறிவித்துள்ளது. இதன் மூலம் பாமர மக்களை பல வகைகளிலும் சுரண்டிக் கொழுத்த லாட்டிரி முதலாளிகளுக்கு ஒத்தாசை செய்த அரசு தற்போது படித்த மேல்தாட்டு மக்களின் பொருளாதார-நுகர்பொருள் ஆசையை சூதாட்ட மனோபாவத்திற்கு திருப்பும் பாவகாரியத்தைச் செய்ய முன்வந்துள்ளது. ஏற்கனவே இண்டர்நெட் தகிடுதத்தங்கள் பெருகிவரும் வேளையில் ஆன் லைன் லாட்டிரி பல்வேறு பதுவிதமான தகிடு தத்தங்களுக்குத்தான் வழிவகுக்கும்.

ரேஷன் அரிசி விநியோகத்தில் அரசு சுமார் 1600 கோடி ரூபாய் மானியமாக இழந்து கொண்டுள்ளது. இந்த இழப்பை குறைக்க நடைமுறை சாத்தியான வழிகள் பலவற்றை ஆராயாமல் ரேஷன் அரிசி விலை இனி வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டும் ரூ.3.50 எனவும் மற்றவர்களுக்கு ரூ.9 எனவும் அறிவித்துள்ளது. ஆனால் ரேஷன் அரிசியே தேவையில்லை என்ற நிலையிலுள்ளோர் எத்தனைபேர் என்பதை அரசு கணக்கிடத் தவறிவிட்டது. இந்த வகை கணக்கெடுப்பு ரேஷன் அரிசி கள்ள மார்கெட்டிற்கு வருவதை தடுத்திருக்கக் கூடும்.

அரசு மருத்துவமனைகளில் நுழைவு கட்டணமாக ரூ.5 வசூலிக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. மேலும் குறிப்பிட்ட சில மருத்துவ சிகிச்சைகளுக்கு கட்டணம் வசூலிக்கவும் அரசு முடிவு செய்துள்ளது. மருத்துவ துறையை தனியார் மனிதாபிமானமற்ற கொள்ளீக்கூடமாக மாற்றிக் கொண்டிருக்கும் நிலையில் ஏழைகளுக்கு இலவச மருத்துவமோ அல்லது மிகக்குறைந்த கட்டணத்தில் மருத்துவமோ தருவது அரசின் தலையாய கடமை. நடுத்தர வர்க்கத்தினரும் இன்று அரச மருத்துவமனைகளைத் தான் நம்பியுள்ளனர். இந்நிலையில் மருத்துவத்துறை மேலும் சிறப்பாகச் செயல்பட உருப்படியான திட்டங்கள் இன்றி கட்டணங்களை மட்டும் அரசு அறிவித்துள்ளது. எரிச்சலூட்டுவதாகவே உள்ளது.

இது கசப்புமருந்து உட்கொண்டேயாக வேண்டும் என்று ஜெயலலிதா இந்த மினி பட்ஜெட் குறித்து விதைத்தும் அளித்துள்ளார். வரிஉயர்வும், விலைவாசி ஏற்றமும், ஆள்குறைப்பும் மட்டுமே பொருளாதாரத்தை சீரமைக்க உதவிடும் என்று அரசாங்கம் நம்புவது-அரசாங்கத்திற்கு சமூகபொறுப்புணர்வும், திட்டமிடும் அறிவும் இல்லை என்பதைய உணர்த்துகிறது. உள்ளாட்சி தேர்தல்களும் முடிந்துவிட்ட நிலையில் மக்களிடமிருந்து இனி எதிர்பார்க்க ஒன்றுமில்லை என்ற தைரியத்தில் அ.தி.மு.க. அரசு இந்த மினிபட்ஜெட்டை நிதானமிழந்து அவசர கோலத்தில் அறிவித்துள்ளது. தமிழக முதல்வராகவுள்ள ஓ.பன்னீர்செல்வம் மினிபட்ஜெட் பற்றி எந்த ஒரு விளக்கத்தையும் மக்களுக்கு சொல்லவில்லை. ஆனால் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா தான் விளக்கம் தந்துள்ளனர். இதன் மூலம் பன்னீர் செல்வம் அதிகாரமற்ற ஆனால் அங்கீகரிக்கப்பட்ட முதல்வராக உள்ளார் எனவும் அ.தி.மு.க. தலைவி ஜெயலலிதா அங்கீகரிக்கப்படவில்லை எனினும் அதிகாரமுள்ள முதல்வராக உள்ளார் எனவும் மக்களுக்கு பட்டவாத்தனமாக விளங்கிவிட்டது.

# நாரந்தனைத் தாக்குதல் ஒரு பார்வை

இன்று இலங்கை மக்கள் எடுக்கும் முக்கியமான, தீர்க்கமான தீர்மானம் நாளை அவர்களின் சுபீட்சமான வாழ்வைத் தீர்மானிக்கும்: துன்பச் சகதியில் மூழ்கித் தத்தளிப்பதா? இல்லை அதிலிருந்து மீள்வதற்கான ஆக்க பூர்வமான பாதையை தேர்ந்தெடுப்பதா?

மக்களை சிந்திக்கவும் தீர்மானமெடுக்கவும் விடாமல் அரசியல் விழிப்புணர்ச்சியற்ற மந்தைக் கூட்டங்களாக வைத்திருப்பதையே நோக்காகக் கொண்டு அரசியல் கட்சிகளின் பிரசார நடவடிக்கைகள் நடைபெற்று ஓய்ந்துவிட்டன.

விடுதலைப் புலிகளை மையப்படுத்தி தேர்தல் வாக்குறுதிகள் அளித்த கட்சிகள் கட்டிய கண்ணாடி மாளிகை புலிகளின் தலைவரின் மாவீரர்த்தின உரை எனும் கல்லெறிபட்டு சுக்குநூறாகிவிட்டது.

இதை ஒரு புறம் வைத்துவிட்டு தேர்தல் வன்முறைகளை எடுத்துக்கொண்டால் யாழ்ப்பாண குடாநாட்டிற்கு வெளியே இடம்பெறும் வன்முறைகள் எண்ணிக்கையில் அதிகமானவையாக இருந்தாலும் அண்மையில் நாரந்தனையில் இடம் பெற்ற வன்முறை கவலை கொள்ளச் செய்கிறது. (ஆனால் நான்கு தமிழ் கட்சிகளின் கூட்டணி தமக்கு அனுதாப வாக்கு கிடைக்கும் என்பதால் சந்தோசம் கொண்டாடுகிறது.)

இந்த வன்முறை குறித்து ஏன்? எதற்கு? எந்த அரசியல் சூழ்நிலையில் நடந்தது என்பவை குறித்து அறிவார்க்கமான அலசல் அவசியம் தேவை.

இன்று நேற்றல்ல 1947ஆம் ஆண்டில் இலங்கையின் முதலாவது தேர்தல் நடைபெற்ற போதிலிருந்தே தீவகம் தனித்துவமான இடத்தை வகித்து வருகிறது. தீவக மக்கள் சாதுவானவர்கள் ஆனால் மிரண்டால் காடு கொள்ளாது என்பதை நிரூபித்து வருகிறார்கள்.

1947ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் குடாநாடு முழுவதும் ஏழு வேட்பாளர்களை நிறுத்தியிருந்தது. தீவகத்தில் அ.இ.த.க சார்பில் மிகவும் சக்திவாய்ந்த வேட்பாளர் ஏ.குலசிங்கமும் சுயேட்சை வேட்பாளராக ஏ.எல்.தம்பிஐயாவும் போட்டியிட்டனர்.

ஏ.எல்.தம்பிஐயா தொழிலதிபர். தீவக மக்களின் முன்னேற்றத்தில் அர்த்த புஷ்டியான அடித்தளங்களை இட்டவர். தீவக மக்களின் நன்றியுணர்ச்சி செல்வாக்கு மிக்க குலசிங்கத்தின் தோல்விக்கு காரணமானது. குடாநாடு முழுவதும் வெற்றி பெற்ற காங்கிரஸ் தீவகத்தில் மட்டும் தோல்வியைத் தழுவிக்கொண்டமையானது தீவக மக்களின் தனித்துவத்திற்கு முத்திரை குத்துவதாக அமைகிறது.

தேர்தலுக்கு முன்னரான பிரச்சார நடவடிக்கைகளுக்காகக்கூட காங்கிரஸ் வேட்பாளர்கள், ஆதரவாளர்களினால் தீவகத்திற்குள் நுழையமுடியவில்லை. காரணம் அன்று பண்ணைப்பாலம் கட்டப்படவில்லை. பயணங்கள் யாவும் வள்ளங்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டன. படகு ஓட்டிகள் எல்லோரும் தம்பிஐயாவின் ஆதரவாளர்களாகையால் காங்கிரஸ்காரர்களினால் பயணம் செய்ய முடியவில்லை.

1960 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தேர்தல்கள் யாவும் வேறுவேறு தினங்களிலேயே நடத்தப்பட்டன. கட்சித் தொண்டர்கள் ஒரு தொகுதியில் தேர்தல் முடிந்த கையோடு மறுநாள் தேர்தல் நடைபெறும் தொகுதிக்குச் சென்று தமது கட்சிக்கான பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.

யாழ்ப்பாண தொகுதியில் தேர்தல் முடிந்த கையோடு காங்கிரஸ் ஆதரவாளர்கள் ஊர்காவற்துறை தொகுதியினுள் நுழைய முயன்றபோது தீவக மக்களினால் விரட்டியடிக்கப்பட்டமை வரலாறு. தீவக மக்களின் அன்றைய ஜனநாயக ரீதியிலான போராட்டத்தை மீறி ஜீ.ஜீ.பொன்னம்பலம், தந்தை செல்வா, வட்டுக்கோட்டை கனகரத்தினம், வன்னிய சிங்கம் போன்ற தமிழினத்தின் அன்றைய தலைவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போனது. சிந்தனைக்குரிய விடயமாகும்.

இம்முறை நாரந்தனையில் இடம் பெற்ற நான்கு தமிழ் கட்சிகளின் கூட்டணி மீதான தாக்குதல் சம்பவம் தீவக மக்களின் நன்றியுணர்வின் வரலாற்று எச்சம். ஆனால் ஜனநாயக ரீதியில் போராடியிருக்க வேண்டியவர்கள் ஆயுதத்தை கையிலெடுத்து அத்துமீறிப்போய் விட்டார்கள். இது கண்டிக்கத்தக்கதும் கவலைக்குரியதுமாகும்.

ஈ.பி.டி.பி தீவகத்தில் செல்வாக்கு மிக்க கட்சியாகும். அக்கட்சியின் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களாலும் சமூக நலத்திட்டங்களாலும் நன்மையடைந்தவர்கள் முழுமையாக தீவகத்தில் வாழ்கிறார்கள். 1990 இல் இருந்து இன்றுவரை ஏன், நாளை கூட அந்த மக்களின் சுகதுக்கங்களில் நேரடியாக கலந்துகொள்ளும் ஒரே அரசியல் கட்சி ஈ.பி.டி.பி மட்டுமே. மக்களின் சுகதுக்கங்களில் கலந்துகொள்ளாத அபிவிருத்தி பணிகளில் ஈடுபடாத கட்சிகள் தேர்தல் காலங்களில் மட்டும் வாக்கு வேட்டைக்கு செல்வதை யாரால் ஏற்றுக் கொள்ள முடியும்.

எது எப்படியிருந்தாலும் நாரந்தனை கொடூர வன்முறைச் சம்பவம் இங்கு நியாயப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படவில்லை. கொலையில் முடிந்த இச்சம்பவம் கண்டிக்கப்படுவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெறவும் வேண்டும். மக்களின் உணர்வுகள் ஜனநாயகரீதியில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வேண்டுமே தவிர உணர்ச்சிவசப்பட்டு ஆயுதத்தைக் கையிலெடுத்து வன்முறையில் இறங்கியதால் அந்த உணர்வின் தனித்துவம், புனிதம் மழுங்கடிக்கப்பட்டு விட்டது.

ஜனநாயகரீதியிலான ஒரு நடவடிக்கையை மக்கள் ஜனநாயக ரீதியில் அணுகியிருக்க வேண்டும். எது எப்படி இருந்த போதிலும் இச்சம்பவம் குறித்த உண்மைத் தன்மையை வெளிக்கொணரும் பொறுப்பு நீதிமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் சக்தியின், அவர்களின் உணர்வின் வெளிப்பாட்டு எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்படுகிறது என்பது எதிர்பார்ப்புக்குரிய விடயமாக இருந்தாலும் கொலைக்குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

# 5வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி ஆன் சில்பா**

**07.12.2001**


நீர்கொழும்பு 62/66, தழுபத்தையை சேர்ந்த தவனேசன-சுசி அவர்களின் அன்பு புதல்வி செல்வி ஆன் சில்பா தனது 5வது பிறந்தநாளை தனது இல்லத்தில் விமர்சியாகக் கொண்டாடுகிறார். இவரை நீர்கொழும்பில் உள்ள அப்பா, அம்மா, ஜெர்மனியில் வசிக்கும் அப்பப்பா, அம்மம்மா, மாமா, மாமி, அண்ணாமார், அக்கா மற்றும் டன்பரில் வசிக்கும் குணசீலன் பெரியப்பா, சதீஸ் பெரியப்பா, சித்தப்பாமார், குயின்ரன் மாமா, இந்தியாவில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, அண்ணா, அக்காமார் மற்றும் நீர் கொழும்பில் வசிக்கும் சாந்தி பெரியம்மா, அக்காமார், றுக்சன் தம்பி ஜெயந்தி பெரியம்மா, றுக்சி அக்கா, அப்பம்மா, யோகன் மாமா, மாலா மாமி, யுக்சன் தம்பி, செல்லா சித்தி, உதயன் மாமா, சீலன் சித்தப்பா குடும்பம் மற்றும் கொழும்பில் உள்ள ஜெனி அன்ரா மற்றும் உற்றார் உறவினர் யாவரும் கர்த்தரின் கிருபையால் வாழ வேண்டுகிறார்கள்.

தகவல்:- ஜெனி அன்ரா.


# மலையாள மாந்திரீகம்



பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!



**சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"**

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாப்பின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

**சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"**

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் மூழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

**ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"**

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

**லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"**

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

**கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"**

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

**குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"**

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

**பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"**

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

**ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"**

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

**இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"**

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

**பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"**

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நானும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

**கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"**

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

**நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"**

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

**யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"**

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

**கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"**

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

**டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"**

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

**இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?**
**வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?**
**இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.**

**குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.**

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பீ.கே. சாமி (J.D.G.A.N)JP

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.



## மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P. ஆறுமுகம் அவர்களை.

**கொழும்பில் டிசம்பர் 22-28 வரை**

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

**கண்டியில் டிசம்பர் 29,30 திகதிகளில்**

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

**கல்முனையில் டிசம்பர் 08, 09 திகதிகள்**

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

**வவுனியாவில் டிசம்பர் 15, 16 திகதிகள்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா.T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019

DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.



## தெய்வீக மருத்துவம்

1960 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மட்டக்களப்பு மலையாள மாந்திரீக வசிய சர்வதேச சமூக தெய்வீக சேவை. (Govt. Approved) கிரகதோஷம், காதல், (ஆண்-பெண்) பிரச்சனை மற்றும் வேறு தீவினைகளால் வாழ்க்கையில் தீராத மனத்தாக்கம், கல்வி தொழில் விவாகம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு முயற்சித் தடை, கணவன்-மனைவி குடும்ப வாழ்க்கையில் சந்தோசமின்மை, உறவுப்பகை, வெளியில் சொல்ல வெட்கமான பிரச்சனை, தீய பழக்கம், மனிதத்தீமை மருந்தீடு போன்ற தீமைகள் ஏற்படுகின்றது இது போன்ற எவ்வித பிரச்சனைகளானாலும் "காண்டம்" இறைசக்தியால் பிரச்சனைக்குரிய காரணத்தை கண்டறிந்து துன்பம் நீங்கி மகிழ்ச்சியாக வாழ புனித புராதன தீங்கற்ற மாந்திரீக தெய்வீக மருத்துவத்தினால் நிவர்த்தியளிக்கப்படுகின்றது. நேரில் வர முடியாதோர், வெளிநாட்டவர்கள் தம் பிரச்சனைகளை எழுதினால் அல்லது ∴பக்ஸ் பண்ணிவிட்டு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடன் பயன் தரும் தெய்வீக மருத்துவப் பொருட்களை விசேட தபால் மூலம் பெற்று தம் எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். பூசை, தபால் செலவுகளை அனுப்பாதவர்களின் விடயங்கள் கவனிக்கப்படமாட்டாது. இரகசியம் பாதுகாக்கப்படும்.

**டாக்டர். பாலுசோதிடர்** S.(A).M.P J.P (S.L)

வாழ்விநிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்
SILPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE

THEIVEEGAM-NTSF-BATTICALOA.
SRI LANKA
TEL/FAX: 065-24825
வெளிநாட்டவர்களின் தொடர்புக்கு
TEL/FAX: 0099465-24825.



## மலிவு விற்பனை

ஆட்டிறைச்சி மாட்டிறைச்சி பன்றி இறைச்சி

முழு ஆடு 6 FRANK
அரை ஆடு 6 FRANK
மாட்டிறைச்சி -1-Kg-10. FRANK
பன்றி இறைச்சி -1-Kg-7. FRANK

தொடர்பு கொள்ள வேண்டியது

**ALES KIRSTLER**
**DORS PLATZ 4 8855**
**WANG SWISS**
**T.P.: 055401153**

மாலை.6.30 பிறகு தொடர்பு கொள்ள வேண்டிய
TP: 0554406347 PARTY SERVICE உண்டு.



## Vella Maxi Credit

சுவிஸில் உங்கள் பணத்தேவைகளை பூர்த்தி செய்ய இலகுவான கடன் வசதிகளை விரைவாக செய்து கொடுக்கின்றோம்

- 100,000 SFR வரை கடன் வழங்கப்படும்
- 10,000 SFRற்கு வருட வட்டி 525 SFR
- ஒரு மாதத்திற்கான கட்டுப் பணம் 877 SFR
- வட்டி வீதம் 9.99%
- ஏற்கனவே கடன் பெற்றவர்களுக்கும் வழங்கப்படும்
- B/C காட் உள்ளவர்களுக்கு மட்டும்

மேலதிக தொடர்புகளுக்கு


**கந்தராஜா பிரபு**

**Vella Credit**

Spltalgasse 16 (4ம் மாடி)
3011 Bern
Tel: 031/3122426 Fax: 031/3119351
Natel: 079/7139509



## இன்றயருள் மருந்து மந்திரயந்திரவசிய வைத்தியம்




GOVERNMENT APPROVED MEDICAL & SPIRITUAL, CHARITABLE SERVICE
முனிவர்களின் குருகுல குருசிஷ்ய பாரம்பரிய பரம்பரை
டாக்டர்-"மந்திரயோகி" (R.H.M.D-D.Acu P.I.S.M.)
குருசக்தி நிலையம். கல்லடி. மட்டக்களப்பு (இலங்கை)

இலங்கையிலும் இந்தியாவிலும் மாற்று, மருத்துவக் கல்வி கற்று மருத்துவப் பட்டங்கள் பெற்று சர்வரோகங்களுக்கும் சிகிச்சை அளித்தாலும் அனைவராலும் சரியாகச் செய்ய முடியாததும். அனைவருக்கும் அவசியமாகவும், அவசரமாகவும், இரகசியமாகவும் தேவைப்படும் மந்திர வசிய விடையங்களுக்கே இவரைக் கூடியளவு மக்கள் நாடுகின்றார்கள். இறைவன் நாட்டத்தோடு மஹான்களின் மஹரிஷிகளின் ஆசீர்வாதத்தினால் அருள்வாக்கோடு செய்து கொடுக்கும் எந்தவிடையமும் உடனடியாக வெற்றியளிப்பதே இதன் காரணமாகும் விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்-மனைவி குடும்பங்களை எங்கிருந்தாலும் ஒன்று சேர்ப்பது வெறுத்தவர்களை வேண்டியவர்களை உறவாக்குதல் தகாத ஆண் பெண் உறவை போதை வஸ்த்தை மறப்பித்தல். தீயசக்திகளினால் ஏற்பட்ட தீராத உடல்நோய் மனநோய் பிரச்சனைகளைத் தீர்த்து எத்துன்பங்களும் அணு காமல் உடல் விடுவளவு, வியாபார நிலையம் வாகனங்களைக் காவல்செய்ய. மற்றும் காதல், திருமணம், கல்வி, தொழில், வியாபாரம் வெளிநாட்டுப் பிரயாணம் வேறு காரியத்தடைகளை நீக்கி சகல காரியங்களிலும் வெற்றிபெற, நோய் வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கற்ற தெய்வீக மருந்து. மந்திரயந்திரவசியங்கள் செய்துகொள்ள வரமுடியாதவர்கள் கடல் கடந்த வெளிநாட்டவர்கள் தபால், பெக்ஸ், தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு மனோதத்துவ மாந்திரீக, ஆன்மீக, மருத்துவ அறிவுரைகளோடு இறைபரிகாரப் பொருட்களை விஷேட தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்.

GURSACKTHI CENTRE
KALADY, BATTICALOA (P.O)
(SRI LANKA.)

ரெலிபோன் - பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு : 065 - 24872
காலை 8.00 மணி இருந்து இரவு 10.00 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு : 009465 - 24872

வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி - காலை 7.00 மணியிலிருந்து இரவு 11.00 வரை
வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்த விஷேட ஆகர்ஷண மாந்திரீக வசிய முறைகள்.

REGISTERED BY MINISTRY OF HEALTH & MINISTRY OF HINDU RELIGIOUS & CULTURAL AFFAIRS

"எல்லாப்புகழும் இறைவனுக்கே"


# 'தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டால் மாத்திரமே புலிகள் மீதான தடை நீக்கம்' ஐ.தே.க.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வருமானால், விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு இனப்பிரச்சனைக்கு மாற்றுத் தீர்வொன்றுக்கு இணங்கும் பட்சத்திலேயே அவர்கள் மீதான தடையை நீக்குவது குறித்து ஆலோசிக்கப்படுமென முன்னாள் பிரதி வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், புலிகள் மீதான தடை நீக்கப்பட்டால் மட்டுமே அரசுடன் பேச்சுக்கள் நடத்தப்படுமென மாவீரர் தின உரையில் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தெரிவித்திருந்தார்.

இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே டிரோன் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

நாம் ஆட்சிக்கு வந்தால் நிபந்தனையற்ற விதத்தில் அனுசரணையாளரின் உதவியுடன் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவோம். இதன்போது புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டுமென்று அவசியமில்லை.

ஆனால், அவர்கள் மீதான தடையை நீக்க வேண்டுமாயின், தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு இனப்பிரச்சனைத் தீர்வுக்காக முன் வைக்கப்படும் மாற்றுத்திட்டத்தை புலிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தாங்களே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளென பிரபாகரன் கூறியுள்ளார். ஆனால், அவர்கள் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவதாயின் அதுபற்றி ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் ஆலோசித்த பின்பே முடிவு செய்வோம்.

இனப்பிரச்சனைத் தீர்வில் உண்மையானதும், நேர்மையானதுமான நாட்டங்கொண்டதொரு சிங்களத் தலைமைத்துவமே தேவையென பிரபாகரன் கூறுகிறார். அதுபோன்றே சமாதானத் தீர்வைக் காண்பதில் தாங்களும் இதயசுத்தியுடன் இருக்கிறோம் என்பதை புலிகளும் காண்பிக்க வேண்டுமெனவும் டிரோன்பெர்னாண்டோ தெரிவித்தார்.

# விளம்பரப் பகுதி

## 45 நாள் கண்ணீர் அஞ்சலி

22/10/2001ல் பூநகரி செல்விபுரத்தில் அகால மரணமடைந்த

**செல்வன் கதிர்காமநாதன் பிரபாகரன் அவர்கள்**

மலர்வு : 13.07.83
உதிர்வு : 22.10.01

அன்னை, தந்தை, தெய்வம், என்றாய்!
ஒழுக்கம் என் உயிர் என்றாய்!
பள்ளி சென்றாய், பல கலை பயின்றாய்
செல்லியா தீவுலுறை கண்ணகை அம்மனை -நீ
நித்த நிதம் போற்றி வந்தாய்
உற்றார், பெற்றார், ஊரார் நண்பரோடு
பிரபாகரன் என்றே அன்போடழைக்கவைத்தாய்
உன் அண்ணன் கண்ணன் மாண்ட
கவலை மாறுமுன்னே செல்வ மகன் உந்தனுக்கு
எதிர்பாரா வேளையில் நீர் அகால மரணமதை
தழுவி நீ எம்மையெல்லாம் தவிக்க வைத்தாய்
தம்பி! பிரபா! உனை இனி நாம்
காண்பதெப்போ?
உன் ஆன்மா சாந்திக்காய்
சக்தி கண்ணகையை நாம்
சிரந்தாழ்த்தி வேண்டி நிற்கும்.
உன் அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மைத்துனர் மைத்துனி உறவினர் நண்பர்கள்.

தகவல்:- கமல்-அண்ணன்-லண்டன்,
T.P:-2085744333


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு, மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,
NINTHAVUR-21, SRI LANKA.
☎ 067-50349

# தனித்துவமான வடக்கு-கிழக்குப் பிரச்சனை

## அலசுவது-இராஜதந்திரி

இலங்கையின் பன்னிரெண்டாவது பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் பிரசாரங்களில் பல்வேறு கட்சிகளும் ஈடுபட்டதுடன், பலதரப்பட்ட அரசியல் புள்ளிகளும் தமது கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

ஆனால் தேர்தலில் குதித்துப் போட்டியிடாதபோதிலும் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த உரையொன்று தனியொரு நபரான தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனால் கடந்த வாரம் வன்னிப்பகுதியிலிருந்து நிகழ்த்தப்பட்டிருந்தது.

எல்.ரி.ரி.ஈ. அமைப்பின் மாவீரர் வாரத்தை முன்னிட்டு நவம்பர் மாத இறுதிப் பகுதியில் வெளிவரும் அவ்வுரை, இத்தடவை தேர்தல் காலத்தை அண்டியதாக வெளிவந்திருந்தது.

இருபது நிமிடங்கள்வரை நீடித்த திரு.பிரபாகரனின் அவ்வுரை, அவரது அரசியல், இராணுவ நிலைப்பாடுகளை தெளிவாக்குவதாகவும், இத்தடவைப் பொதுத் தேர்தல் குறித்த கண்ணோட்டத்தைக் கொண்டதாகவும் அமைந்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த சுமார் இருபது வருடகாலமாக முழு அளவிலான ஆயுதப் போராட்ட அமைப்பாக இருந்து வருகின்றது.

இருபது வருடங்களுக்கு முன்னர் வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மட்டும் ஓர் ஆயுதப் போராட்ட அமைப்பாகத் தோற்றம் பெறவில்லை. சுமார் ஐந்து இயக்கங்கள் ஆயுதமேந்தியவையாக இருந்தன. அத்துடன் ஆயிரக்கணக்கான இளைஞர், யுவதிகளும் இந்த ஐந்து இயக்கங்களிலும் ஆயுதப் போராளிகளாக அங்கம் பெற்றிருந்தனர்.

வடக்கு-கிழக்கில் உருவான இந்த ஆயுதப் போராட்ட அமைப்புக்கள் அனைத்துமே இந்தியாவைப் பின் தளமாகக் கொண்டு இயங்கின. அத்துடன் வடக்கு-கிழக்கில் பல்வேறு இடங்களிலும் அவை அரச படைகளுக்கெதிரான தாக்குதல்களை மேற்கொண்டும் வந்திருந்தன.

1981ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பொதுசன நூலகம் தீயிடப்பட்ட சம்பவம், இதன்பின்னர் 1983ம் ஆண்டில் தென்னிலங்கையில் வெடித்த படுமோசமான இனக்கலவரம் என்பவையே வடக்கு-கிழக்கு மக்களை ஆயுதப்போராட்டத்தின் மீது பெரிதும் நம்பிக்கை வைக்கத்தூண்டியிருந்தன.

இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைத் தாயாகமாகக் கொண்ட தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகள், அடாவடித்தனங்கள் என்பவை காலத்துக்காலம் இடம்பெற்று வந்தன.

இதுதவிர தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு மதிப்பளிக்கும் விதத்தில் பல்வேறு தீர்வுத்திட்டங்கள், முன்வைக்கப்பட்டன. ஒப்பந்தங்களும் செய்து கொள்ளப்பட்டன. ஆனால் அவை யாவுமே பேரினவாத சக்திகளினால் நிராகரிக்கப்பட்டன.

அரசியல் உரிமைகள் மட்டும் மறுக்கப்பட்டிருக்கவில்லை. கல்வி, தொழில் ரீதியாகவும் தமிழ் மக்கள் மீது பாரபட்சமானபோக்கு விரிவடையலாயிற்று.

மிதவாத தமிழ் அரசியலாளர்கள் தமிழ் மக்களது உரிமைகளுக்காகவும் தனித்துவத்தைக் காப்பதற்காகவும் குரல் கொடுத்துக் களைத்துப் போயிருந்த தருணத்திலேயே தீவிரவாதம் தமிழ் அரசியல் கோதாவில் புகுந்து கொள்ளலாயிற்று.

இந்தியாவின் ஆசீர்வாதத்துடன் தோற்றம் பெற்ற வடக்கு-கிழக்கு சார்ந்த தீவிரவாதம், இலங்கையில் ஆட்சியதிகாரங்களில் இருந்தோரால் பயங்கரவாதம் என முத்திரை குத்தப்பட்டது. இருப்பினும் ஒரு தவிர்க்க முடியாத நிலையிலேயே தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தினார்கள் என்பதை தென்னிலங்கையில் அனைத்துத் தரப்பினருமே ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

இதுவரை அறுபதினாயிரத்துக்கும் அதிகமானவர்களை பலி கொண்டதாக இலங்கையின் உள்நாட்டு யுத்தம் காணப்படுகின்றது.

இத்தொகையில் வடக்கு-கிழக்கின் தமிழ்ப்போராளிகளும், அரச படைகளைச் சேர்ந்தவர்களும் மட்டும் அடங்கவில்லை. ஆயிரமாயிரம் அப்பாவிப் பொதுமக்களும் அடங்கியே இருக்கின்றனர்.

எண்ணிலடங்காதளவு தொகையில் சொத்துக்களுக்கும் சேதங்கள் ஏற்பட்டதாகவே இருக்கின்றது.

'இலங்கையின் சிரசு' என்றிருந்த யாழ்ப்பாணக் குடாநாடு ஒரு குணமடையாத புற்று நோயாளி போல போர் அனர்த்தங்களினால் சிதைவுற்றுள்ளது.

ஆயிர்ங்காலத்துப் பயிராக இலங்கையில் தளைத்திருக்க வேண்டி சமாதான-சகவாழ்வு.இனவாதக் கெடுபிடிகளினால் குன்றிக்குறுகிப் போயுள்ளது.

இந்நிலையில் இத்தடவை பொதுத்தேர்தலுக்கான பிரசாரங்கள் சூடுபிடித்திருந்த தருணத்தில் வெளியாகியிருந்த எல்.ரி.ரி.ஈ. தலைவர் வே.பிரபாகரனின் உரை, இலங்கையில் அரசியல் மற்றும் இராணுவ ரீதியாக முக்கியத்துவம் பெற்றுள்ள அதேசமயம், சர்வதேச சமூகத்திடமும் புலிகளது நிலைப்பாட்டை அறிய வைப்பதாக இருக்கின்றது.

சர்வதேச நிலபரத்தை எடுத்து நோக்கும் பட்சத்தில் ஒரு நாட்டின் உள்நாட்டுப் பிரச்சனை அந்நாட்டுக்குரியதாக மட்டும் இருக்கவில்லை.

கடல் கடந்து, ஆகாய எல்லைகளையும் தாண்டியதாகவே ஒவ்வொரு நாடுகளிலும் தோன்றும் உள்நாட்டுப் பிரச்சனைகள் விளங்குகின்றன.

1983ம் ஆண்டில் இலங்கையின் இனப்பிரச்சனை பூதாகரமாக மாற்றடையத் தொடங்கியது. பிராந்திய ரீதியாக இந்தியாவையும் சம்பந்தப்படுத்தியதாக இலங்கை இனப்பிரச்சனை ஒரு புதிய வடிவத்தைப் பெற்றது.

எல்.ரி.ரி.ஈ தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனாக இருக்கலாம். அல்லது ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவாக இருக்கலாம். இந்தியாவையே தமது நடவடிக்கைகளுக்குரிய தளமாக இலங்கையின் அரசியல், போராட்டத் தலைவர்கள் வடிவமைத்துக்கொண்டனர்.

இந்திய மத்திய அரசின் ஆதரவு மட்டுமல்ல. தமிழக மாநில அரசின் ஆதரவும் இலங்கைத் தமிழர்களின் மீது பதிந்திருந்தது. அரசியல் ரீதியாக மட்டுமல்லாது, மனிதாபிமான ரீதியிலும் இந்தியா இலங்கைத் தமிழர்களுக்கு உதவிக்கரம் நீட்டியிருந்தது. லட்சோப லட்சம் வடக்கு-கிழக்குத் தமிழ் அகதிகள் இந்தியாவின் அரவணைப்புக்குள்ளாகியிருந்தனர்.

அயல்நாடான இந்தியாவில் மட்டுமல்ல. ஆயிரமாயிரம் மைல்களைக் கடந்து ஐரோப்பிய நாடுகளையும் தொட்டு விட்டதாகவே இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரச்சனை விளங்குகின்றது.

உலகில் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்ததாகவே இலங்கையின் இனப்பிரச்சனை காணப்படுகிறது. பூகோளத்தின் மூலை முடுக்குகள் அனைத்திலுமே இப்பிரச்சனை புலம்பெயர்ந்து வாழுகின்ற தமிழர்கள் ஊடகப் பிரதிபலித்துள்ளது.

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு வரை ஒரு முற்றுமுழுதான அரசியல் பிரச்சனையாக இலங்கைக்குள்ளேயே இருந்து வந்த வடக்கு-கிழக்கு விவகாரம், தற்போது சர்வதேச சமூகத்தைப் பெரிதும் ஈர்த்ததாகவே இருக்கின்றது.



இலங்கையின் இனப்பிரச்சனையை அறிந்து வைத்துள்ள நாடுகள் இராணுவ ரீதியாகவன்றி, அரசியல் ரீதியாகவே அப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்பதை வலியுறுத்தி இருந்துவருகின்றன.

இலங்கையின் வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெற்று வருகின்ற ஆயுதப்போராட்டம் எவ்விதத்திலும் ஒரு முடிவுக்கு வராதிருக்கின்றது.

அரச படையினரால் தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாக முறியடித்து இராணுவரீதியான வெற்றிகளை ஈட்டமுடியாதுள்ளது.

மறுபுறத்தே தமிழீழ விடுதலைப் புலிகள் தமது தரப்பில் பதினேழாயிரத்துக்குமதிகமான போராளிகளைப் பலிகொடுத்துள்ள போதிலும் இராணுவ ரீதியாக எவ்விதத்திலும் தளர்வடையாதவர்களாக இருந்துவருகின்றனர்.

வடக்கு-கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இராணுவ ரீதியாக பின்டைவுகள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அவர்கள் பெற்ற வெற்றிகள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாகவே இருக்கின்றன. இதன்காரணமாகவே தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்த்து இலங்கை இனப்பிரச்சனையை அரசியல் ரீதியாகவோ அல்லது இராணுவ ரீதியாகவோ அணுக முடியாதுள்ளது.

எல்.ரி.ரி.ஈ தலைவர் இத்தடவை நிகழ்த்திய மாவீரர் வார உரையை நோக்கும் போது, அவரது நிலைப்பாடுகள் ஒரு தனித்துவமான போக்கைக் கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

இலங்கையின் பன்னிரெண்டாவது பாராளுமன்றத் தேர்தலில் குதித்துள்ள வடக்கு-கிழக்கைச் சேர்ந்த நான்கு தமிழ்க் கட்சிக்கூட்டணி, எல்.ரி.ரி.ஈ. அமைப்பையே முதன்மைப்படுத்தி தனது பிரசாரத்தை நடத்தியுள்ளது.

இதுதவிர தென்னிலங்கையிலும் எல்.ரி.ரி.ஈ அமைப்புக் குறித்தே எதிரும், புதிருமான கருத்துக் கண்ணோட்டங்கள் தேர்தல் அரங்குகளில் வெளிப்பட்டுமிருந்தன.

இருந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் திரு.வே. பிரபாகரன் வடக்கு-கிழக்கு அரசியல் கட்சிகளிடமோ அல்லது தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடமோ பிடிகொடாத விதத்தில் தமது கொள்கை விளக்கத்தை 'மாவீரர் வார' உரையில் ஆணித்தரமான முறையில் வெளியிட்டுள்ளார்.

இலங்கையின் கடந்த கால அரசியல் வரலாற்றை எடுத்து நோக்குகையில் தமிழீழ விடுதலைப் புலிகளை தமது சொந்த அரசியல் லாபங்களுக்கேற்றாற் போல அணுகுவதிலேயே அரசியல் கட்சிகள் இருந்து வந்துள்ளதை அவதானிக்க முடியும்.

1994ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசுவதன்மூலமே வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காண முடியுமென பொதுஜன ஐக்கிய முன்னணி முழக்கமிட்டிருந்தது.

இதனை வடக்கு-கிழக்கு மக்கள் மட்டுமல்ல. தென்னிலங்கை மக்களும் பெருமளவு நம்பினர். இந்த நம்பிக்கையின் வெளிப்பாடாகவே ஜனாதிபதி சந்திரிக்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு தேர்தல் வெற்றிகளும் கிட்டியிருந்தன.

ஆனால் மக்கள் எதிர்பார்த்தவற்றுக்கு எதிர்மாறான விதத்திலேயே பொதுஜன ஐக்கிய முன்னணியினால் இனப்பிரச்சனை குறித்த விவகாரம் கையாளப்பட்டிருந்தது.

இன்று நேற்றல்ல; வடக்கு-கிழக்குப் பிரச்சனை ஓர் ஆயுதப் பேராட்டமாக மாறிய காலந்தொட்டு அப்பிரச்சனையைத் தீர்ப்பதில் குறுகிய அரசியல் லாபங்களுக்கு அப்பாற்பட்ட விதத்திலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் கடந்த இரு தசாப்தகாலங்களில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள், இராணுவ ரீதியான செயற்பாடுகள், என்பவற்றுக்கு முகங்கொடுத்த அனுபவஸ்தர் ஒருவரது நிலையிலிருந்தே திரு.பிரபாகரனின் இத்தடவை மாவீரர் வார உரை அமைந்திருந்தது.

தமது தரப்புக்குச் சாதகமான முறையில் இருக்குமென அந்த உரையை எந்தவொரு அரசியல் சக்தியும் எதிர்பார்த்திருந்தால், அது ஏமாற்ற மானதாகவே அமைந்திருக்கும்.

தென்னிலங்கையின் அரசியல் நிலபரத்தைக் கருத்திற் கொண்டதாகவோ, அல்லது வடக்கு-கிழக்கின் அரசியல் சக்திகளைக் கவனத்திலெடுத்ததாகவோ எல்.ரி.ரி.ஈ. தலைவரது உரை அமைந்திருக்கவில்லை.

வடக்கு-கிழக்குப் பிரச்சனையின் இன்றைய நிலை, தமிழீழ விடுதலைப்புலிகள் அப்பிரச்சனை தொடர்பாகக் கொண்டுள்ள அரசியல் மற்றும் இராணுவ ரீதியான நிலைப்பாடு, சர்வதேச சமூகத்தின் அணுகுமுறை, மூன்றாந்தரப்பு மத்தியஸ்தம், சமரசப் பேச்சுவார்த்தைகள் என்பவை பற்றியே திரு.பிரபாகரன் தனது உரையில் விரிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

இந்த உரையின் மூலம் வடக்கு-கிழக்குப் பிரச்சனை, குறுகிய அரசியல் கண்ணோட்டங்களுக்குட்படுத்தப்பட முடியாதது என்பதையே அறிய முடிகிறது.

அத்துடன் ஓர் இனம், அதன் தனித்துவம், பிரதேசப்பரம்பல், ஆகிவற்றைக் கருத்திற்கொண்ட விதத்திலேயே திரு.பிரபாகரனின் உரை விளங்கியிருந்தது.

எனவே ஆயிரம் தேர்தல்கள் வரலாம்; ஆட்சியதிகாரங்களுக்கு வருவோரும் புதியவர்களாக இருக்கலாம்.

ஆனால் தேர்தல் வெற்றி-தோல்விகள் என்பவற்றுக்கப்பாற்பட்ட விதத்தில் இலங்கைத் தமிழினத்தின் தன்மானம், தனித்துவம் என்பவற்றைக் கருத்திற்கொண்டதாகவே மாவீரர் வார உரை விளங்குகின்றது.

எனவே அரசியல் சாயங்கள் பூசப்படாது அப்பழுக்கற்ற விதத்தில் வடக்கு-கிழக்குப் பிரச்சனை அணுகப்படும் பட்சத்திலேயே, இலங்கையின் எதிர்கால அரசியல், சமூக, பொருளாதார விடயங்களிலும் உறுதிப்பாட்டை எதிர்பார்க்க முடியும்.

## அதிரடி அய்யாத்துரை



***நாரந்தன்னையில*** நடந்த சம்பவம் கண்டிக்கத்தக்கது. மட்டக்களப்பு ஜனநாயக் கட்சிக் காரியாலயத்தில நடந்த குண்டு வெடிப்பும் அதே அளவு கண்டணத்துக்குரியது. ஆனால் முன்னையதை படத்தோடு வெளியிட்டு தமிழ்க் கட்சிக் கூட்டமைப்புக்கு அனுதாபம் தேடித்தர பத்திரிகைகள் எடுத்த முயற்சி பண்ணியதில் பத்து சதவீதம் கூட நிகழவில்லை. இதிலுள்ள மிகப் பெரிய சோகம் என்னவெனில் நாரந்தன்னை சம்பவத்தில அடிவாங்கியவர்கள் கத்தி பொல்லுகளுடன் தீவுப்பகுதிகளுக்கு குண்டர்களை எதிர்பார்த்துப் போன இன்னொரு காடையர் கூட்டம். மட்டக்களப்புல காயப்பட்டதுல இரண்டு பேர் தவிர அத்தனையும் அப்பாவிப் பொது மக்கள்.

***தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பு*** தேசியப் பட்டியலுக்கு சண்டை பிடிக்கத் தொடங்கியிருக்கினம். ஏற்கனவே செய்து கொண்ட உடன்பாட்டையெல்லாம் காற்றுல பறக்கவிட்டுட்டு தங்கட ஆக்களின்ரை பெயர்களை சொல்லிக் கொண்டு திரியினமாம் கூட்டணிக் காரர். விநாயகர் கடுப்புல இருக்கிறார். தேர்தல் முடிந்த கையோடு ஆசனங்களுக்கு அடிபட்டுக்கொள்ளுவினம் என்று உந்தக் கூட்டமைபினை உருவாக்கப்பாடுபட்ட தலைநகரப் பிரமுகர் ஒருத்தர் சோகத்தோடு சொல்லுறார்.

***தேர்தல் ஆணையாளர்*** மேல ஆளுந்தரப்புக்கு திடீரென்று நம்பிக்கையில்லாமப் போச்சு பார்த்தியளே... மனுஷனை விலக்கி வீட்டுக்கனுப்பனுமெண்டு அதிகார அம்மணிக்கு கடிதம் கடிதமா எழுதியனுப்பிக் கொண்டிருக்கினம். உவர் பச்சை அணிக்கு சார்பா செயற்பட்டதற்குத்தான் உப்பிடி குதிச்சு விழுகினம் என்று காரணம் சொன்னாலும் உதை விட ஆழமான விஷயமிருக்குதுதெண்டு தான் நான் நினைக்கிறேன். பச்சைக்கு சார்பானவரென்று இப்போதே சொல்லி வச்சிட்டால் பிறகு தங்களுக்கு சார்பா தீர்ப்பளிச்சுப்போட்டார் என்ற பிரச்சனை வராதல்லோ... அதனால முன்கூட்டியே... இப்படி ஒரு போடுபோட்டுவச்சிருக்கினம்.. கடந்த தேர்தலில் இரகசிய ஸ்டிக்கர் பிரச்சனை ஒண்டைக் கிளப்பி ஆணையாளரை சந்தேகக் கண்ணோடு பார்தினம். ஆனால் அவரை ஆளுந்தரப்புக்கு 'எதிரானவர்' என்று சந்தேகப் பட வைக்கத்தான் உந்த ஸ்ரிக்கர் நாடகம் என்று பிறகு அரசியல் வட்டாரங்களில பேசப்பட்டது.


***பச்சை அணியோடு*** கூட்டுச் சேர்ந்த விடயத்துல கிழக்கின்ர தனித்துவ கட்சித் தலைவரின்ர ஆதரவாளர்கள் பலருக்கும் மனவருத்தம். கிழக்குல ஊறிப்போன பச்சை அணிக்காரர் சிலருக்கும் மனவருத்தம் எங்களின் வோட்டால மற்றைய தரப்புக்கு இலாபம் என்று யானைக்காரர் சொல்லுகினம். மரத்தின்ர வாக்குகளாலே யானைக்கு இலாபம் என்று மற்றத்தரப்பு சொல்லுகினம். உந்தப் போட்டியால் சுயேட்சையா களத்தில நிற்கிற ஒருத்தருக்கு இலாபம் என்று சனம் கதைக்குது. உவைகளின்ர ஒற்றுமையைபாராட்டாமல் இருக்க முடியாதல்லோ.. முடிவு வெளிவரும்போது ரணில் தலையில கைவைக்காதபடி இருந்தால் சரி....

***குடாநாட்டில யூ.பி.*** வெறிபிடித்த மாதிரி அலைஞ்சு திறியுறார். தோல்வி நிச்சயம் என்று தெரிஞ்சு போனதில இனிமேல் வேறு வழியில்ல என்று எதிரணியை சீண்டி விட்டு அதுமூலமா ஏதும் இலாபம் தேடலாமா என்று கடைசி நேர முயற்சியில இறங்கியிருக்கிறார். இனிமேல் வியாபாரமே துணை!

**தூ**ங்கிக்கொண்டிருந்த ஈவா பிரௌனின் அருகில் சென்று அவளது தூக்கம் கலையாமல் மெதுவாக முத்தமிட்டான் ஹிட்லர். அவள் விழித்துக் கொண்டாள். "இரவு முழுவதும் பாடாய் படுத்தினாய் போதாதா..." என்று செல்லமாக சிணுங்கிக் கொண்டே கேட்டாள் ஈவா. எதுவும் பேசாமல் இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்டான். அவளுக்கு உடல் சோர்வாக இருந்தது. அதனையும் பொருட்படுத்தாமல் பக்கத்தில் இருந்தவனை தன்மீது இழுத்துப் போட்டுக் கொண்டாள். ஜெர்மனிக்கே உரித்தான குளிரும், பனித்துளிகளும் காலைப்பொழுதில் கண்சிமிட்டிக்கொண்டிருந்தன. ஆவி பறக்கும் தேநீர் அருகில் உள்ள மேசையில் ஆறிக்கொண்டிருந்தது. ஹிட்லரின் உதடுகள் அவளது முகத்தில் இருந்து கழுத்துக்குத்தாவி அங்கிருந்து மெதுவாக கீழ் நோக்கி நகர ஆரம்பித்தது. முந்திய இரவில் கழற்றப்பட்டு மீண்டும் பூட்டப்படாத இரவு உடை அவனுக்கு வசதியாக வழி செய்து கொடுத்து. அவளது இளகிய மார்புகளை மென்மையாக முத்தமிட்டான் ஹிட்லர். அவளுக்கு அந்த நேரத்திலும் அது வேண்டும் போல் இருந்தது. செல்லமாக சிணுங்கியவள் பல வித சப்தங்களில் முணகத் தொடங்கினாள். தனது மொத்தப் பலத்தையும் ஒன்று சேர்த்து அவளை ஆக்கிரமித்தான் ஹிட்லர்... ஆட்டத்தில் யார் சென்றார்கள் என்றில்லை. இருவரும் கணிசமாகக் கலைத்துப் போனார்கள்.

# உண்மைத் தொடர் 34

# உலகை உலுக்கிய சர்வாதிகாரி அடோல்ஃப் ஹிட்லர்



★★★

**ஹி**ட்லரைப் பொறுத்தவரையில் அவனது அடுத்த குறி பிரான்ஸைக் கைப்பற்றுவதாகத்தான் இருந்தது. ஆனால் இதற்கு முன்னைய ஆக்கிரமிப்புக்களைப் போன்று அது அத்தனை இலகுவானதல்ல என்பதை அவன் அறிந்திருந்தான் என்றாலும் பிரான்ஸ், ஹொலேன்ட், பெல்ஜியம் என்று மேற்கு நோக்கி தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்கும் திட்டத்தை அவன் கைவிடவில்லை.

ஹொலேன்ட் மற்றும், பிரான்ஸ் படைகளிடம் சக்தி வாய்ந்த கனரக ஆயுதங்கள் இருந்தன. பிரிட்டனின் முழு அளவிலான ஒத்துழைப்பும் கிடைத்து வந்தது. இதனாலேயே பிரான்ஸுக்குள் படைகளை அனுப்பும் விடயத்தில் ஹிட்லர் சற்று சிந்தித்தான்.

தாக்குதலுக்கான தயாரிப்புக்களில் ஈடுபட்டு வந்த ஜெர்மன் படைகளுக்கு பல்வேறு ஏமாற்றுத் திட்டங்கள் குறித்து ஹிட்லரும், கோயபல்சும் எடுத்துரைத்தனர். தொடர்ச்சியான உருமாற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வடக்குத் திசையில் பாஸிஸ படைகள் தாக்கலாம் என்று எதிரி நாட்டு உளவுப் பிரிவுகளை நம்ப வைத்து எதிர்பாராத திசையில் தாக்கும் ஏற்பாடுகள் மிகவும் இரகசியமாக மேற்கொள்ளப்பட்டன. ஹிட்லரின் இந்த திசை திருப்பும் முயற்சி இதற்கு முன்னரும் வெற்றியளித்திருந்ததால் பிரான்ஸ் மீதான தாக்குதலிலும் அதே காரியத்தை கையாள உத்தரவிட்டிருந்தான்.

கூடிய விரைவில் ஹிட்லரின் படைகள் மேற்கே தாக்குதல் நடத்த தயாராகின்றன என்ற தகவல் நேசநாட்டு உளவு நிறுவனங்களுக்குக் கிடைத்திருந்தது. ஆனால் ஜெர்மனியின் தாக்குதல் எவரும் எதிர்பாராத விதத்தில் அமைந்தது. 1940ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி அதிகாலை ஜெர்மன் படைகளுக்கு ஹிட்லரின் அரைகூவல் வாசிக்கப்பட்டது. அதில் பிரிட்டன். பிரான்ஸ் மீது பெருவாரியான வசைமொழி பாடப்பட்டிருந்தது. இவ்விரு நாடுகளும் துரோகம் செய்து விட்டதாக ஓர் அர்த்தமற்ற குற்றச்சாட்டை தனது இராணுவத்தின் முன்னிலையில் ஹிட்லர் எடுத்துரைத்தான்.

"என் உயிரிலும் மேலான ஜெர்மன் வீரர்களே நமது தாய் நாட்டின் பரம எதிரிகள் மீது இன்று நீங்கள் தாக்கப் போகிறீர்கள். இன்று நாம் ஆரம்பிக்கும் இந்த யுத்தம் அடுத்த ஆயிரம் ஆண்டுகளுக்கு ஜெர்மனியர்களின் தலைவிதியை நிர்ணயிக்கப் போகின்றது. வெற்றி எங்களுடையதே.." என்று ஹிட்லர் படை வீரர்களை வெறியூட்டி அனுப்பினான்.

**ஷாஹு**

அதிகாலை 5.30 மணியளவில் பிரான்ஸ் ஹொலேன்ட், பெல்ஜியம் ஆகியவற்றின் மீது குண்டு வீசும் உத்தரவில் ஹிட்லர் கைச்சாத்திட்டான். ஒரே நேரத்தில் 3 நாடுகளின் மீதும்ஜெர்மன் விமானப் படை குண்டு மாறி பொழிந்தது.

தனது விமானங்கள் சிலவற்றை பயன்படுத்தி ஜெர்மன் நகரான ஃப்ரைபுர்கின் மீதும் சில குண்டுகளை வீச உத்தரவிட்டான் ஹிட்லர். அவை பெல்ஜியம் நாட்டு விமானப்படையால் மேற்கொள்ளப்பட்டதென பிரசாரம் செய்யப்பட்டது. முதலில் ஹேக் நகரில் 4 ஆயிரம் ஜெர்மன் படைகள் பரசூட் மூலம் இறக்கப்பட்டனர். இவர்கள் மேலதிக படைகளை ஹொலேன்டுக்குள் வரவழி செய்ததுடன் முக்கிய பாலங்கள் பலவற்றைக் கைப்பற்றி பாரிய தாங்கிகளை நகர்த்தி வரவும் வழிசெய்து கொடுத்தன.

இரண்டு நாட்களுக்கு மேல் ஜெர்மன் படைகளை எதிர்க்கும் திறன் ஹொலேன்டுக்கு இல்லை என்பதை அந்நாட்டு அரசாங்கம் உணர்ந்து கொண்டது. அதன் இராணுவம் எதிர்ப்பை நிறுத்தி சரணடைவதாக ஹிட்லருக்கு தகவல் அனுப்பியது. அப்படியிருந்தும் சரணடைந்த ஆயிரக் கணக்கான படைகளை கொன்று குவிக்குமாறு ஹிட்லர் உத்தரவிட்டான்.

ஹொலேன்டை ஆட்சி செய்த வில்ஹெல்மினா அரசியும் அந்நாட்டு அரசாங்கமும் இரவோடு இரவாக பிரிட்டனுக்கு தப்பிச் சென்றனர்.

பிரான்ஸ் மீது ஹிட்லரின் முழுக் கவனமும் திரும்பியது.

முழு வேகத்தையும் பயன்படுத்தி பிரான்ஸ் மீது தாக்குதல் நடத்த தீர்மானித்தான். அதன்படி பிரான்ஸுக்கும் ஹிட்லரின் படைகளுக்கும் இடையில் உக்கிர மோதல் நடந்து. ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் ஒரு தடைவை தனது இராணுவ கட்டுபாட்டு மையத்துடன் தொடர்பு கொண்டு நிலமைகளை கேட்டறிந்தான். உண்மையில் பிரான்ஸ் துருப்புக்களின் நெசயலின்மயே ஹிட்லரின் வெற்றிக்கு காரணம் என்று பின்னாளில் தெரிவிக்கப்பட்டது. யுத்தம் முடிவுற்ற தன் பின்னர் நடைபெற்ற விசாரணையின் போது ஹிட்லரின் பீல்ட் மாஷலாக கடமையாற்றிய நோம்மல் என்பவர் சாட்சியமளிக்கையில் "1940ம் ஆண்டு பிரான்ஸில் எங்கள் 10 கவச டாங்கிகளால் மாத்திரம் தாக்குதலை முடிக்கக்கூடியதாக இருந்தது. பிரிட்டிஷ், பிரெஞ்சு படைத்தலைமைகளின் செயலின்மையே எமது வெற்றியை இலகுவாக்கியது." என்று கூறினார்.

நிலமையை கணக்குப் போட்டுப் பார்த்த பிரிட்டன் தனது படைகளை பிரான்ஸில் இருந்து வாபஸ்பெறுவது எனத் தீர்மானித்தது. டியூன்கொக் துறை முகம் வழியாக பிரிட்டிஷ் படை பின் வாங்கும் செய்தி ஜெர்மன் வானொலியில் அறிவிக்கப்பட்ட சமயம் ஹிட்லர் ஈவாவின் மடியில் சாய்ந்து கொண்டிருந்தான். தனது வீட்டில் உள்ள வானொலியின் சத்தத்தை அதிகரித்து அந்த செய்தியை காது குளிரக் கேட்டன். தன் காதலனின் நெறிப்படுத்தலால் ஜெர்மன் படைகள் புரியும் வீர பராக்கிரமங்களைக் கேட்டு மெய்சிலிர்த்துப்போயிருந்த ஈவா ஹிட்லரை அணைத்து அழுத்தமாக முத்தமிட்டாள். மகிழ்ச்சிப் பெருக்கில் ஹிட்லரின் கைகள் ஈவாவின் உடலில் இடம் வலம் தெரியாமல் விளையாடின. **வருவான்...**

# "செக்ஸில் பெண்களிடம் விழிப்புணர்வு இருந்தாலொழிய கணவன் மனைவி உறவினில் நெருக்கம் வராது"

**தா**ம்பத்ய வாழ்வின் அன்யோன்யமான நெருக்கத்திற்கும் சரி, விடுபடும் அளவு விஸ்வரூபம் எடுக்கும் சண்டை, சச்சரவுகளுக்கும் சரி! மூலகாரணம் முக்கிய காரணம் செக்ஸில் ஏற்படும் திருப்தியும் அதிருப்தியுமே என்பதுதான் நிதர்சனமான உண்மை.

ஆணைவிட பெண் அதைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்வது தாம்பத்தியத்தின் இறுக்கத்தை அதிகப்படுத்தும். செக்ஸில் முழுமை பெறும் கணவன் மனைவி இருவரதும் மற்ற குற்றம், குறைகள் மறக்கடிக்கப்படுகின்றன. மறைந்து போகின்றன. ஆணுக்கு செக்ஸ் கல்வி என்பதைவிட, பெண்ணுக்கு செக்ஸ் கல்வி என்பதே அத்தியாவசியம் எனவே அத குறித்த பல ஆய்வுகளுக்குப்பின் நிர்ணயிக்கப்பட்ட சில உடலுறவு செயல் முறைகள் பற்றி இங்கே தெளிவு பெறுவோம்.


1. உடல் உறவில் மிகமிக முக்கியமான ஒன்று, பெண்கள் தங்களது கணவனின் விருப்பத்தைப் புரிந்து கொள்வதாகும். அப்படிப் புரிந்து கொள்வதால் கணவனை பரிபூரண சுகத்தை அனுபவிக்கச் செய்ய முடிவதோடு, அதன் தாக்கம் அவள் மீது அவனுக்கு பகல், இரவு எந்நேரமும் எல்லா விஷயங்களிலும் அன்பு கலந்த ஒரு மயக்கத்தைக் கொடுக்கும். ஆக, மனைவி கையில் குடும்பத்தின் ரிமோட் கன்டரோல் (மாமியார் சொத்தாக நினைப்பது) வந்து விடும்.

2. உடல் உறவின்போது கணவனும், மனைவியும் ஒரே நேரத்தில் உச்சக்கட்டத்தை அடைவார்கள் என்று சொல்ல முடியாது. ஆணுக்கோ பெண்ணுக்கோ சீக்கிரமாகவோ அல்லது தாமதமாகவோ அது நிகழலாம். ஆணைப் பொறுத்தவரை அது நிகழும்போது அதாவது அவன் உச்சக்கட்டத்தை அடைவதை எளிதில் பெண்ணால் உணரமுடியும். ஆனால் பெண்ணுக்கு அவ்வாறு நிகழ்வதை ஆணால் உணரமுடியாது. எனவே, பெண்கள் தங்களுக்கு இன்னும் அதற்கான அறிகுறி தோன்றாவிட்டாலும் தோன்றப்போவது போன்ற உணர்வை வெளிப்படுத்துங்கள். அது ஆணுக்கு உற்சாகத்தைக் கொடுக்கும். முழு ஈடுபாட்டுடன் செயல்படத் தூண்டும். அப்படி இல்லாமல் நீங்கள் கூச்சப்பட்டோ அல்லது உண்மையில் அதற்கான அறிகுறி இல்லையென்பதாலோ அல்லது உச்சகட்டத்தை நீங்கள் முதலில் அடைந்து விட்டதாலோ எந்த உணர்வுமின்றி இருந்தால் அது ஆணுக்கு அவன் மேலேயே ஒரு சந்தேகத்தையும், தன்னிடம் ஏதோ ஒரு குறை உள்ளது போன்ற தாழ்வு மனப்பான்மையையும் ஏற்படுத்திவிடும். எனவே நீங்கள் அவரிடம் முழு சுகம் அனுபவிப்பதாய் அவர் மனதில் பதியும்படி ரியாக்ட் செய்வது மிக முக்கியம்.

3. உடல் உறவின்போது கணவனிடம், தான் பூரண சுகம் பெறுவதாக காட்டிக் கொள்ளும் அதே வேளையில், தன் கணவனிடம் மட்டும்தான் தனக்கு அதில் அப்படி ஒரு சுகம் என்ற அளவில்.. உங்கள் உணர்ச்சியின் வெளிப்பாடு இருக்க வேண்டுமே தவிர.. எந்தக் காரணம் கொண்டும் செக்ஸ் என்றாலே உங்களுக்கு அபரிதமான ஈடுபாடு என்று, உங்கள் கணவர் நினைக்கும் எல்லைக்கு நீங்கள் போய்விடக்கூடாது. காரணம்... அது உங்கள் கணவருக்கு உங்கள் மீது ஒரு அதிருப்தியை ஏற்படுத்திவிடும். அளவோடு என்றால் மட்டுமே அமிர்தம் என்பதை அந்த நேரத்தில் நினைவு கொள்ள வேண்டும்.

4. ஆண், பெண்ணிடம் தன் தேவைகளைத் தானே தேடி எடுத்துக் கொள்வான். அதில் அவனுக்கு கூச்சமோ பயமோ இருக்காது. ஆனால்... பெண் தனக்கு என்ன வேண்டுமென்பதை ஆணிடம் கேட்டுப் பெற வேண்டும். அதாவது... நான் இப்படி இப்படி எதிர்பார்க்கிறேன் என்று நீங்கள் அவருக்கு தன்மையாகப் புரிய வைக்க வேண்டும். அல்லது, பூடகமாக வெட்கத்துடன் வார்த்தைகளாகவே வெளிப்படுத்தலாம். மொத்தத்தில் தேவைகளை மனதில் வைத்துப் புழுங்கி ஏமாற்றமடைவதை விட... உணர்த்திப் பெற்று மகிழ்வுறுவது அத்தியாவசியம்.

5. சில பெண்களின் உடலில் மருவோ, அல்லது எப்போதோ ஏற்பட்ட ஒரு மோசமான வடுவோ இருக்கலாம். அல்லது திடீரென உடல் நலக்குறைவால் ஏதாவது புண்கள் கூடத் தோன்றியிருக்கலாம். உடல் உறவின்போது அதை கணவனுக்கு காட்டாமல் முகவாட்டம் அடைந்து... அதை மறைத்து... கணவன் கண்ணில் படாத நிலையில் படுத்து... உடல் உறவை சமாளிக்க நினைப்பர். அது மிக மிகத் தவறான ஒன்று. காரணம்... உடலுறவில் கணவன், மனைவி இருவருக்கும் திருப்தியான பொசிஷன். அதாவது சின்ன அசௌகர்யம் கூட இல்லாத நிலையில்... இருவரும் தங்கள் உடலை நிலைநிறுத்தி உடல் உறவு கொள்ள வேண்டும் என்பது ஆரோக்கியத்துக்கும் மன அமைதிக்கும் மிக முக்கியம்.



6. உடல் உறவின்போது திடீரென சிரிப்பை உண்டாக்கும் வகையில் சில நிகழ்வுகள் அமையக்கூடும். உதாரணத்திற்கு... அந்த நேரத்தில் கை, கால்பட்டு செம்பு அல்லது வேறு பொருட்கள் கீழே விழுந்து உருண்டு... நீண்ட ஒலியை எழுப்பக்கூடும். அப்படி ஒரு சூழலில் உங்கள் கணவர் சிரித்தால் மட்டுமே... நீங்களும் சிரித்து... அதில் பங்கேற்கலாம். மாறாக... அவர் அப்போது சீரியஸாக இருக்கும் பட்சத்தில் நீங்களும் அதையே கடைப்பிடிப்பதே நல்லது.

7. கணவன், மனைவி காம சரசத்தில் ஈடுபடும்போது... அதில் இயற்கைக்கு விதிவிலக்கு அல்லது மாறானது என்று எதுவும் இல்லை. (பிள்ளை பேறுக்கு மட்டுமே இயற்கையான முறை தவிர வேறு வழியில்லை) மற்றபடி சந்தோஷத்திற்காக சர்வ சுதந்திரமாக அவரவர் விருப்பத்திற்கேற்ப எப்படி வேண்டுமானாலும் புணர்தலில் ஈடுபடலாம். உங்கள் உடல் அதற்கு ஒத்துழைக்காத பட்சத்தில் மட்டுமே சில விஷயங்களைத் தவிர்க்கலாம். அதேபோல் பெண்கள், காம சரசங்களை யாரிடமும் கற்க முடியாது. தங்களுக்குத் தாங்களே அனுபவத்தில் தேர்ச்சி பெற்றுக் கொண்டு கணவனை உற்சாகப்படுத்த வேண்டும்.

8. காம உணர்வுகள் குறைந்திருப்பதும் அதிகமாய் இருப்பதும் அவரவர் உடற்கூறு சம்பந்தப்பட்டது. இதில் குறைவான ஈடுபாடு உள்ளவர்கள் போகப்போக அதன் சுவை அறிந்து.. கூடுதல் ஈடுபாட்டை அடைவர். ஆனால் கூடுதல் ஈடுபாடுள்ளவர்கள் அதில் மிக மிக கவனமாக இருக்க வேண்டும். அதாவது திருமணமான புதிதிலேயே தங்களுக்குள்ள அதிகமான வேட்கையை உடனே வெளிப்படுத்தினால்.. அதை ஆண், ஜீரணிப்பதில் குழப்பம் நேரிடும். எனவே உங்கள் வேட்கையை நீங்களே கட்டுப்படுத்தி.. குறைந்த வேகத்துடன் உங்கள் உள்ளக்கிளர்ச்சியை வெளிப்படுத்தி... நாளாக நாளாக அதில் லயிப்பு ஏற்பட்டதுபோல் பின்னாளில் உங்கள் முழு வேட்கைக்கு வடிகால் தேடுங்கள். பிறகு அதனால் எந்தக் குழப்பமும் தோன்றாது.

குறிப்பாக... கணவனுக்கு உங்கள் வேகம் கொஞ்சம் கொஞ்சமாக கூடுவது அவரது பராக்கிரமமாக எண்ணத் தோன்றி.. உற்சாகம் ஊட்டும்.

9. காம இச்சையைத் தூண்டும் சில உணவு வகைகளைப் பற்றி தெரிந்து கொண்டு... தேவைப்படும்போது அவைகளை உட்கொண்டு... உங்கள் வேட்கையைத் தூண்டச்செய்யலாம்.

உதாரணத்திற்கு எள்-பசலைக்கீரை, செக்ஸ் ஆர்வத்தை அதிகப்படுத்தும். க்ரீம்- அதாவது கேக்-ஐஸ்க்ரீம், சாக்லெட்டில் உள்ள க்ரீம்கள் உல்லாசத்திற்கான உணர்வுகளைத் தூண்டிவிடும். விட்டமின் சி, கல்சியம், இரும்புச்சத்துள்ள கீரை வகைகளும்... மேற்படி உணர்வுகளைத் தூண்டக் கூடியவையே.

இவையெல்லாம் உட்கொண்டும்... உங்களிடம் மாறுதல் தெரியவில்லையெனில்... நீங்கள் உடனடியாக உங்கள் குடும்ப டாக்டரை அணுகி... உடலை சோதித்துக் கொள்வது நல்லது. இந்தக் குறை மிகமிக சொற்ப அளவு மனிதர்களுக்கே வரும் குறையாகும். ஓ.கே. ஆல்த பெஸ்ட்! என்ஜாய்!

# தகவல் பெட்டி


## அடுக்கு மாடி பஸ்

தட்டு தட்டாக அடுக்கு மாடிகளாக இருக்கும் பஸ்சை பார்த்ததும் போக்குவரத்துப் பிரச்சனைக்கான ஒட்டு மொத்தமான தீர்வு கிடைத்து விட்டது என்று சிந்தித்து ஏமாந்து போகாதீர்கள். இந்த பஸ்சில் பயணம் செய்ய முடியாது. ஜப்பானிய விளம்பர நிறுவனம் ஒன்று வாடிக்கையாளர்களை கவருவதற்கு அமைத்திருக்கும் பல மாடி பஸ்தான் இது. அருகில் சிறிதாகக் காணப்படுகிறது பாருங்கள் அதில் வேண்டுமென்றால் ஏறிச் செல்லலாம்.




## சுருள் முடி அழகு

சிகை அலங்காரம் செய்து பார்த்து இதற்கு மேல் என்னதான் செய்வது என்று சிந்தித்த பிரான்ஸ் நாட்டு அழகியல் கலை வடிவமைப்பாளர் ஒருவர் சணல் சுருள்களாக ஒரு ஆணின் தலை முடியை பின்னிவிட்டிருக்கிறார். பாரிஸ் நகரில் நடைபெற்ற பாஷன் ஷோ ஒன்றில் க்ளிக் செய்யப்பட்ட படம் இது.



## தற்காலிக தம்பதிகள்

பார்த்த பார்வையில் ஜப்பானியத் தம்பதிகள் என்று புரிந்துகொண்டிருப்பீர்கள். ஜப்பான் நாட்டில் வருடந்தோறும் நடைபெறும் பண்டிகை 'ரயுக்யூ' அரசனாகவும் அரசியாகவும் பாத்திரம் வகிப்பதற்கு நாடு முழுவதிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரப் படுவதுண்டு. 'ஷுரி கரையோர கலைவிழா' என்ற இந்தப் பண்டிகையில் இராஜபாத்திரத்திற்கு தெரிவாவது கௌரவமாக கருதப்பட்டு வருகின்றது.



கடந்த ஆண்டுக்கான தெரிவில் அதிஷ்டசாலியான ஹிகா டொஷி சகா என்ற ஆசிரியரையும், தனியார் நிறுவன ஊழியரான நினா சதுரியையுமே இங்கு காண்கிறீர்கள். இவர்கள் உண்மையில் கணவன் மனைவி அல்ல. ஆனால் பண்டிகை நாட்களில் அரசனாகவும், மகாராணியாகவும் விளங்குவார்கள்.

## நீளமான கூந்தல்

கூந்தலை பாதுகாத்து மெருகேற்ற பெண்கள் காட்டும் அக்கறை அலாதியானது. இந்தப் பெண்ணுக்கு இயற்கை கொடுத்த கூந்தல் வரத்தினால் கின்னஸ் புத்தகம் வரையில் புகழ்பெற்றார். அலிசியா என்ற இவரது கூந்தல்தான் உலகிலேயே மிக நீளமான கூந்தல் என்ற பெருமையைப் பெற்றது. 12 அடி. 8 அங்குலம் நீளமான தனது சிகையை மிகக் கவனமாக பராமரித்து வருகிறார் அலிசியா. இவரது மகளுக்கும் சாதாரண பெண்களை விட நீளமான கூந்தல் காணப்படுகிறதாம். தாயின் சாதனையை மகள் முறியடிப்பார் என்கிறார்கள் இவரது தோழிகள்.



# மினி சினி

* 'மிட்டா மிராசு' படத்திற்கு இசை யமைத்த அஸ்லம் முஸ்தபா, ஏ.ஆர். ரகுமானின் நெருங்கிய நண்பர். சந்தோஷ் சிவனின் 'மல்லி' படத்திற்காக பிரான்ஸ் நாட்டின் சர்வதேச இசையமைப்பாளர் விருது பெற்றவர்.

* கமல்ஹாசன்-சிம்ரன் ஜோடியாக நடிக்கும் 'பம்மல் கே.சம்பந்தம்' படத்தில் அப்பாஸுக்கு ஜோடியாக சிநேகா நடிக்கிறார்.

* பின்னணிப் பாடகர் ஹரிகரன் 'பவர் ஆப் வுமன்' படத்தில் நடிப்பது தெரிந்த சமாச்சாரம். பின்னணி பாடகர்களில் எஸ்.பி. பாலசுப்பிரமணியனுக்குப் பிறகு நடிப்பதற்கு அதிக வாய்ப்பு வருவது ஹரிகரனுக்குத்தான்.

* கோடம்பாக்க வட்டாரத்தில் மும்தாஜை சின்ன சில்க் என்றே அழைக்கிறார்கள். ஆனால் அவரது காது பட யாராவது 'சின்ன சில்க்' என்றால் மும்தாஜ் மூட் அவுட் ஆகிவிடுகிறார்.

* விஜயகாந்தின் சம்பளம் ஆறுகோடி என்பது வெறும் வதந்தி. அவரது உண்மையான சம்பளம் மூன்றரைக் கோடி. (இது இந்திய பணப்பெறுமதி)

* அப்பு-பிரசாந்தை அவரது பெற்றோர் செல்லமாக அழைக்கும் பெயர்.

* 'அழகி' படத்தின் அழைப்பிதழில் தெரியாவிக்கை என இயக்கத்திற்கு மற்றொரு பெயர் கொடுத்து தனது தமிழ்ப்புலமையை பறை சாற்றியிருக்கிறார் சங்கர்பச்சன்.

* நடிகையான எனக்கு நிஜத்தில் அஜித்தை கட்டிப்பிடித்து நடிக்க ஆசை என்கிறார் மும்தாஜ்.

* இயக்குநர் சங்கர் தனது அண்ணனுக்கும் தங்கைக்கும் சேர்த்து தி.நகரில் ரீராஜேந்தரின் வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு மாளிகை வாங்கிக் கொடுத்திருக்கிறார்.

* விக்ரம் நடிப்பதாக இருந்த 'யூனிவர்சிட்டி' படத்தில் புது நாயகன் விக்கியும் நாயகியாக மும்பை அழகி கஜாலாவும் நடிக்கிறார்கள்.

* இது வரை வந்த போலீஸ் கதைகளில் 'சர்வதிகாரி' வித்தியாசமாக இருக்கும் என்று சொல்கிறார் அர்ஜுன். அரசாட்சி, அசோகா, சர்வாதிகாரி, ஏழுமலை என நான்கு படங்களும ... ஒன்றை ஒன்று மிஞ்சம் கதா பாத்திரத்தில் நடிப்பதால் சந்தோஷத்தில் மிதக்கிறார்.

* அஜித் இரட்டை வேடத்தில் நடிப்பதாக இருந்த 'வாலண்டா' படத்தின் பெயர் மாற்றப்பட்டுள்ளது. ஜோதிகா, சிநேகா ஆகியோரிடம் கால்ஷீட் கேட்டுள்ளனர்.

* 'டும் டும் டும்' பட இயக்குநர் ஸ் அழகப் பெருமாளின் திருமணம் கடந்த 22ஆம் திகதி நாகர் கோவிலில் இனிது நடை பெற்றது.

## புயலாய் வருகிறார் ரம்பா

ரம்பாவின் அண்ணன் வாசுவும் தாயார் உஷாராணியும் சேர்ந்து தயாரிக்கும் படம் 'த்ரீ ரோஸஸ்'. இதில் ரம்பா, லைலா, ஜோதிகா என மூன்று கதா நாயகிகள். ரம்பா வுக்கு புயலைப் போல் முரட்டுத்தன மான பாத்திரம். அண்ணனும் அம்மாவும் தயாரிக்கும் படம் என்றாலும் இன்றைய மார்க்கெட் நிலவரப்படி அவர்களிடமிருந்து சம்பளம் வாங்கியிருக்கிறார் இந்தப் 'புயல்'. இதற்கு அவர் கூறும் காரணம் 'தொழில் வேறு குடும்ப பாசம் வேறு'.



கார்த்திக்-ரம்பா
படம்: அழகான நாட்கள்

# காதல் உண்மை கல்யாணம் மாயை

2000 ஆண்டின் உலக அழகிக்கு இப்போது 19 வயது. விஜய்யுடன் 'தமிழன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். ஐஸ்வர்யாராய், சுஷ்மிதா சென், யுக்தா முகி, லாராதத்தா வரிசையில் நடிக்க வந்துவிட்ட பிரியங்கா சோப்ராவுக்குப் பிடித்த நடிகர்கள் குரு தத்தும் ஷாருக்கானும். தமிழில் விஜய்யும் அஜித்தும்.

அப்போ சல்மான்கான் என்னவானார் என்று கேட்டால், "அவருக்கும் எனக்குமிடையில் கசமுசா என்பதெல்லாம் பொய் மூட்டை. இப்போ அவர் டியா மிர்சாவோடுதான் சுற்றிக் கொண்டிருக்கிறார்." என்று பொருமுகிறார். நீங்கள் யாரையாவது காதலிக்கிறீர்களா? என்று கேட்டால், "ஆமாம்! அஸீம் மெர்ச்சண்ட் என்பவர்தான் என் காதலர். மும்பையில் ஒரு பிரபலமான ஹோட்டல் விடுதியின் சொந்தக்காரர். நான் பத்தாம் வகுப்புப் படிக்க ஆரம்பித்ததிலிருந்தே அவரைக் காதலித்து வருகிறேன்" என்கிறார்.

எப்போ கல்யாணம் என்று கேட்டால், "இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின்தான்" என்று சொல்பவர், "அஸீமைத்தான் நிச்சயம் கல்யாணம் செய்துகொள்ளுவேன் என்று சொல்ல முடியாது." என்றும் சர்வ அலட்சியமாகச் சொல்கிறார். மும்பை நடிகைகள் என்றாலே தெனவெட்டாகப் பேசுவதில் யாரும் சளைத்தவர்களில்லை என்பதை பிரியங்காவும் நிரூபிக்கிறார். அதொரு புறமிருக்க, எல்லா இந்திய அழகிகளுடனும் கிசுகிசுக்கப்படும் வாய்ப்பைப் பெற்றவர் என்ற பெருமையை விரைவில் பெறப்போகிறார் சல்மான்கான்.

## முகப்பில்

பிரசாந்த்
குஷ்பு



மும்தாஜ்



ஸ்ரீகாந்த்-பூமிகா
படம்: ரோஜாக்கூட்டம்

# விஜய்...

'தமிழ்', 'தமிழன' ... பசைமையை உருவா... இளம் கதாநாயகர்... தலைப்பை மாற்று... சாருக தாப்பிலோ... என்ற தலைப்பை... செய்யவிட்டனரா...

இதை அறிந்த ... தான் 'தமிழா' இ... எங்கள் தலைப்பிலா... என்று, மார்தட்டி... ஆனால், விட்டுக்... 'தமிழ்' என்று தலை... யில்லாமல், விஜய... என்று கேட்டது... பொங்குகிறார்கள்.

'எம்.ஜி.ஆர்.க... தமிழ்நாட்டுக்கு ... ரான ரஜினியாக இ... தமிழரும் தானுக... லையா? அதுபோல... வரே தமிழில் அறி... பிடித்திருப்பவர். அ... கொடுத்து விஜய ... கொள்ள வேண்ட... ரசிகர்கள்.

ரசிகர்களின் ... தான் பிரசாந்த் நடி... துரைராஜ் என்ற... பெயர் ஆட்டப்பட... தது. அடுத்த சிந்... விடுவது என்று ... மீது ஆர்வம் கொ... செயல்களைச் செ...

# கிளாமர் குயின் மும்தாஜுக்கு மறக்க முடியவில்...

☛ மும்பை மவுண்ட் மேரீஸ் பள்ளியில் எட்டாம் வகுப்பு படிக்கும்பொழுது, பரீட்சை எழுதப்ப பேப்பருக்கு அடியில் எனது அபிமான நடிகை ஸ்ரீதேவி போட்டோ இருந்ததைப் பார்த்த எனது டீச்சர் என்னை ஆறு மணி நேரம் முழங்கால் போடவைத்தது.

☛ சென்னையிலிருந்து மும்பை செல்லும் பொழுது, விமானத்தில் அன்று நான் ரசித்த அபிமான தாரகை ஸ்ரீதேவியின் அருகிலேயே அமர்ந்து பயணம் செய்து, அவருக்காக நான் ஆறு மணி நேரம் முழங்கால் போட்டதை சொன்னபோது அவர் வாய்விட்டு சிரித்தது.

☛ கோயம்புத்தூர் ஜி.ஆர்.டி.கல்லூரி விழாவுக்குச் சென்றபோது மூன்று கிலோ மீட்டர் தூரத்திற்கு பட்டாசு முழங்க... எனக்கு முன்னே பத்து கார், பின்னே பத்து கார் அணிவகுத்து வர... என்னை ஒரு இளவரசியைப் போல் அழைத்துச் சென்றது.

☛ 2001, ஜூலை ஐந்தாம் தேதி எனது பிறந்த நாளை, கிளாமர் குயின் என்ற பட்டத்தோடு எனது ரசிகர் மன்றங்கள் கொண்டாடியது.

☛ 'குஷி' படத்தில் வரும் 'கட்டிப்புடி கட்டிப்புடிடா' பாடல் காட்சியில் நான் நடித்துக் கொண்டிருந்த பொழுது எனது அம்மாவுக்கு உடல்நிலை சரி இல்லை யென்று செய்தி வந்தது. படப்பிடி... யைக் கூட கலைக்காமல்... சென்... சென்றேன். அங்கு எனக்காக ... நேரம் காத்திருந்தது.

☛ சென்னையில் இன்றுவரை ... யாக இருக்கும் திருமதி ... மணக்க சமைத்துக் கொடுத்...

☛ முதன் முதலாக நான் ... மோனலிசா' படத்தில் என்னை ...

☛ மலேசியாவுக்கு 'ஸ்டார் ... பொழுது நடிகர் விவேக்கின் ... நிகழ்ச்சியில், முதல் பாட்டுக்கு ... டும் என்று வற்புறுத்திச் சொ...

☛ எனது அபிமான நடிகை... ரைப் போல் என் போஸ்டரும் ... காணப்படுவது.

☛ 'கடந்த பதினைந்தாம ... லைன்ஸ் கிரவுண்டில் நடந்த ... நிகழ்ச்சியில், திறந்தவெளி ... ஆட வந்தபோது... மழை பெய்... சென்றார்கள். உடனே நான் ... மழையில் நனைந்து 'கொண்டு ... றால், தான் ஆடத்தயார்' என்று ... அப்படியே நின்றுகொண்டு... குடையாக பிடித்துக் கொண்டு ... பாடலுக்கு மழையில் நனைந்து ...

## -பிரசாந்த் தகராறு

...ரசிகர்களில் தமிழர்களிடையே ...டிருக்கிறார்கள் இரண்டு ...வின் 'தமிழன்' என்ற படத் ...டுக் கொண்டவராம் பிர ...ஆனால் உங்கள் 'தமிழ்' ...க் கொள்ளுங்கள் என்று ...ராப்பினர்.
...ர்கள், "எங்கள் தலைவர் ...பிறந்து இங்கேயே வளர்ந்து ...திருக்கிறார். அவர் 'தமிழன்' ...தில் அர்த்தம் இருக்கிறது. ...பேசும் பிரசாந்த், தான் ...வைத்துக் கொண்டது மட்டு ...'தமிழன்' என்று வைக்கலாம் ...மாக இருக்கிறது" என்று

...னிதான். ஆனால் அவர் ...லையா? கன்னட சிவாஜி ...து நிறத்தால் குணத்தால் ...று தலைவராகி வீட்டில் ...ஹீரோவும் விஜய்க்கு முன் ...தனக்கென ஒரு இடத்தைப் ...ஸ்டார் என்ற மரியாதையைக் ...பையை மாற்றி வைத்துக் ...று கேட்கின்றனர் பிரசாந்த

...க் காரணமான கதை இது ...' என்ற புதியவர் இயக்கத்தில் ...படத்திற்கு 'தமிழ்' என்று ...டந்த ஏப்ரல் மாதம் நடத் ...ண்டுக்கு படத்தை வெளி ...வேலைகள் நடந்தன. 'தமிழ் ...இளைஞனின் விரதீரச் ...படம்'

என்று ஒருவரிக்கதை கூறப்பட்டது.

ஆனால், அதன் பிறகு தீவிதயாரிக்க விஜய், உலக அழகி பிரியங்கா நடிக்கும் படத்திற்கு 'தமிழன்' என்று பெயர் வைக்கப்பட்டு பிரம்மாண்டமாக விளம்பரங்கள் செய்யப்படுவதைப் பார்த்த பிரசாந்தும் அவரது அப்பா தியாகராஜனும் கோபமடைந்தார்கள்.

"இந்தப் பெயர்க் குழப்பம் நமது படத்தைப் பாதிக்கும், எனவே சேம்பரில் புகார் செய்யுங்கள்" என்று 'தமிழ்' படத் தயாரிப்பாளரைக் கேட்டுக் கொண்டார் தியாகராஜன். ஆனால் சேம்பர் இதில் தாங்கள் தலையிட முடியாது என்று கைவிரித்து விட்டது.

தலைப்பு மட்டும் ஒரே மாதிரியாக அமைந்ததோடல்லாமல் விஜய்யின் படமும் வரும் சித்திரை வருஷப்பிறப்பன்றே வெளிவரும் என்று அறிவித்தார்கள்.

தமிழும், தமிழனும் ஒரே நாளில் போட்டி போட்டுக் கொள்வதில் உள்ள சிக்கலை உணர்ந்து, பிரசாந்த் விஜயை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இந்தச் சிக்கலைத் தவிர்த்துக் கொள்ளலாமே என்று கேட்டிருக்கிறார்.

"அதெல்லாம் டைரக்டர், தயாரிப்பாளர் முடிவு செய்த விஷயம். அதில் நான் தலையிட முடியாது" என்று விலகிக் கொண்டார் விஜய். அவரது பதிலால் ஆத்திரமடைந்த பிரசாந்த், அப்பாவிடம் நடந்ததைக் கூறினார்.

தியாகராஜன் தீவிரத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "நாங்கள் 'தமிழ்' என்று படமெடுக்கும் போது, நீங்கள் 'தமிழன்' என்று பெயர் வைக்கிறது சரியா?" என்று கேட்க, தீவிரோ ரொம்பக் கூலாக, "இது நாங்கள் வைத்த பெயரில்லை.

விஜய் ரசிகர்களிடம் படத்திற்கு ஒரு தலைப்பு வைக்கும்படி 'விஜய் ரசிகன்' பத்திரிகையில் அறிவித்திருந்தோம். அதில் அதிக ரசிகர்கள் இந்தத் 'தமிழன்' என்ற பெயரைத்தான் சொல்லியிருந்தார்கள். அதனால்தான் அதைத் தேர்வு செய்தோம்" என்று விளக்கமளித்திருக்கிறார்.

இந்த விளக்கத்தில் சமாதானமடையாத தியாகராஜன், தன் மகன் நடிக்கும் படத்திற்கு தன் சொந்தச் செலவில் பிரம்மாண்ட விளம்பரங்கள் செய்வதென்று முடிவெடுத்திருக்கிறாராம். தமிழா தமிழனா என்று ஒரு கை பார்த்துவிடுவது என்று இரு தரப்பும் மல்லுக்கு இறங்கியிருக்கிறது.

படத்தில் வில்லன்களோடு மோதுகிற ஹீரோக்கள் நிஜ வாழ்க்கையில் தங்களுக்குள்ளேயே ஒருவருக்கொருவர் வில்லனாக மாறி விருப்பது தமிழ் சினிமாவின் துரதிஷ்டம் தான்!

## காதல் வலையில் விழுந்த ரிச்சா

'அல்லி அர்ஜுனா'வில் மனோஜ் கே.பாரதியின் ஜோடியாகவும், சூப்பர் குட்டின் 'ஷாஜகான்' படத்தில் விஜய்யின் ஜோடியாகவும் நடித்து வரும் நடிகை ரிச்சா பலோட். இவர் தெலுங்கில் 'நுவ்வே காவாலி'யில் நடித்தும் புகழ் பெற்றவர். ரிச்சாவின் தாயார் மகளின் எதிர்காலம் பற்றி மிகவும் நம்பிக்கையுடன் இருக்க-திடீரென்று வந்துவிட்டது ரிச்சாவுக்கு காதல். மும்பை தொழிலதிபர் ஒருவர் ரிச்சாவை அடிக்கடி வந்து சந்திக்கிறாராம். அவருக்கும் ரிச்சாவுக்கும் நெருக்கமான காதல்' என்று பட உலகில் பரவிவிட, ரிச்சாவை தங்கள் படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப் போன தயாரிப்பாளர்கள் வந்த வேகத்தில் 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று திரும்பி வந்து விட்டார்களாம்! ரிச்சாவின் பெற்றோர் என்ன செய்வது என்று தெரியாமல் தவிக்கிறார்களாம்!



ரிச்சா பலோட்
படம்: ஷாஜகான்

## "எனக்கென்று ஒரு பாணி உண்டு"

### விவேக்

விவேக்கின் ரசிகர் மன்றங்களின் எண்ணிக்கை பல கதாநாயகர்களுக்கு இருப்பதை விட அதிகரித்து வருகிறது. தமிழ்நாடு முழுவதும் இரு நூறுக்கு மேற்பட்ட மன்றங்கள் இதுவரை வந்துவிட்டன. ஒரு நகைச்சுவை நடிகருக்கு ரசிகர் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டது இப்போது தான் முதல் தடவை நடந்திருக்கிறது.

விவேக் சட்டத்துறையில் பட்டம் வாங்கியவர். பாலசந்தரின் 'புதுப்புது அர்த்தங்களில்' நடிப்பதற்காக வேலையை உதறி விட்டு வந்தவர். ஆர்மோனியம் நன்றாக வாசிப்பார். இளையராஜாவின் தீவிர ரசிகன். விவேக்கின் பெண் குழந்தைக்குப் பெயர் வைத்ததே இளையராஜாதான்.

கையில் ஒரு பெட்டி கொண்டு திரிகிறார். அவ்வப்போது வருகிற ஐடியாக்களை, வசனங்களை எழுதி வைத்துக் கொள்வதற்காக.

சில கேள்விகளும் விவேக்கின் பதில்களும்:

**கேள்வி: ஒரு நடிகனாக வேண்டும் என்ற கனவு இருந்ததால்தான் நடிப்புத் துறைக்கு வந்தீர்களா?**

விவேக்: எனக்கு கனவெல்லாம் எதுவும் கிடையாது. நான் செக்ரட்டரியேட்ல செக்ஷன் அலுவலரா இருந்தேன். நான் சினிமாவுக்கு வந்ததே ஓர் ஆக்ஸிடெண்ட்தான்! அது எனக்கா மக்களுக்கான்னு தெரியலை.

**கேள்வி: உங்கள் நகைச்சுவைக் காட்சிகளில் மதத்தைக் கிண்டலடிப்பது மாதிரியான காட்சிகள் வருகின்றனவே..?**

விவேக்: நான் இந்து மதத்தைத் தீவிரமாகப் பின்பற்றுபவன். அதில் இருக்கிற மூட நம்பிக்கைகளைத்தான் எதிர்க்கிறேன். குழந்தைக்கு உடம்பு சரியில்லைன்னா புறுக்கு பாலும் முட்டையும் வாங்குறியே. அதை அந்தக் குழந்தைக்குக் கொடுத்தாலே உடம்பு சரியாப் போகும்னு நான் சொல்றேன். மஞ்சள் காமாலைக்கு மந்திரம் போட்டால் எப்படி சரியாகும்?

இப்பக்கூட ஒரு படத்துல, ஒரு பொண்ணு முருகன் டாலர் போட்டிருக்கிறதைப் பார்த்துட்டு, "குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்னு" சொல்லச் சொன்னாங்க. முடியாதுன்னு சொல்லிட்டேன். நான் வணங்கற தெய்வத்தை எப்படி வல்கரா பேச முடியும்?

**கேள்வி: ஒவ்வொரு படத்திலும் ஒருத்தரை இமிடேட் பண்ணி நடிக்கிறீங்க. உங்களுக்கென்று ஒரு பாணி இல்லையா?**

விவேக்: பொதுவா இன்னிக்கு காமெடியன்கள் கிட்ட உனக்கு என்ன பாணின்னு கேட்டீங்கன்னா யாராலயும் சொல்ல முடியும்! ஆனால் என்கிட்ட அதுக்கு பதில் இருக்கு. "படித்த இளைஞனின் பார்வையில் சமுதாயம்" இதுதான் என்னோட பாணி.

## வேலாயுதம்

சூப்பர் குட் பிலிம்ஸ் தயாரித்த கண்ணுபடப் போகுதய்யா' படத்தை இயக்கிய பாரதிகணேசன் அடுத்து இயக்கும் படம் 'லவ் சேனல்' படத்தை தயாரித்த ஜெஸ்லியான் புரொடக்ஷன் சாரின் படமான 'வேலாயுதம்'. இதில் மம்முட்டி கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக நடிப்பவர் காயத்ரி ஜெயராம். இன்னொரு கதாநாயகன் பல்லவ். அவருக்கு ஜோடி பிரதியுஷா. விவேக், கலாபவன்மணி, ஜெயபாரத், வையாபுரி ஆகியோரும் நடிக்கிறார்கள். இசை: தேவா. கதை, வசனம் ராதி மதி. திரைக்கதை-இயக்கம்: பாரதி கணேசன். மம்முட்டி தமிழில் நடிக்கும் மற்றொரு படம் 'ஜூனியர் சீனியர்'.



## மம்முட்டி-பார்த்திபன் இணையும் 'விழா'

மறுமலர்ச்சி, கள்ளழகர் போன்ற வெற்றிப்படங்களைத் தயாரித்த ஹென்றி தயாரிக்கும் புதிய படத்தில் மம்முட்டியும் பார்த்திபனும் நடிக்கிறார்கள். படத்திற்கு 'விழா' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. படத்தில் ஒரு கதாநாயகியாக தேவயானி நடிக்கிறார். மற்றொரு கதாநாயகியை மும்பையிலிருந்து புதிதாக இறக்குவதற்கு முயற்சி நடக்கிறது. கதாநாயகர்கள் இருவருமே ஆடிப்பாடும் பருவத்தைக் கடந்துவிட்டவர்கள் என்பதால் இளஞ் ஜோடிகளாக கிருஷ்ணா, வீணா என்ற புது முகங்கள் நடிக்கின்றனர். இவர்களுள் கிருஷ்ணா முன்னாள் நடிகை நாட்டியப் பேரொளி பத்மினியின் பேரன். வீணா மலேசியாவில் வாழும் தமிழ்ப் பெண். படத்தை இயக்குகிறார் அறிமுக இயக்குனர் விஜய (அட மற்றுமொரு விஜய்) இவர் பாக்கியராஜிடம் ஏழுபடங்களுக்கு மேல் இணை இயக்குநராகப் பணிபுரிந்தவர்.

## கைலாயமலை வடிவில் 'செட்'

கமல்ஹாசனின் மிகப் பிரம்மாண்டமான 'ஆளவந்தான்' படம் தீபாவளி வெளியீடு. அவரது அடுத்த படமான 'பம்மல் கே.சம்பந்தம்' படப்பிடிப்பு தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஏவிஎம் ஸ்டுடியோவில் "பம்மல் கே.சம்பந்த"த்திற்காக கைலாயமலை போன்ற பிரம்மாண்டமான செட் போடப்பட்டுள்ளது. அந்த கைலாய மலையில் ஒரு காளை மாடு அங்குமிங்கும் ஓடி விளையாடுகிறது. இதனால் தேவர்களும், முனிவர்களும் பதற்றமடைந்து அங்குமிங்கும் ஓட சிவபெருமான் அந்த மாட்டைத் துரத்திப் பிடிக்கிறார். இக்காட்சியை டைரக்டர் மௌலி படமாக்கினார். சிவ பெருமானாக நடித்தவர் கமல்ஹாசன். படத்தில் இது கமல்ஹாசனின் கனவுக் காட்சியாக அமையும்.

கமல்ஹாசன், சிம்ரன், சார்லி, ஸ்நேகா, அப்பாஸ், வையாபுரி, ரமேஷ் கண்ணா, எம்.என்.ராஜம் மற்றும் பலர் நடிக்கிறார்கள். கமல்ஹாசன் சிவபெருமானாக-புராணக் கதாபாத்திரத்தில் நீண்ட காலத்திற்குப் பிறகு நடிக்கிறார்.

பி.எல்.தேனப்பன் தயாரிக்கும் இப்படத்தின் கதை, வசனங்களை கிரேஸிமோகன் எழுத, திரைக்கதை, டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றுள்ளவர் மௌலி. ஒளிப்பதிவு எம்.சரவணன். இசை: தேவா. ஸ்டண்ட்: விக்ரம் தர்மா.

## சினிவிசிட்

...யாம்...!

...த்து... மேக்கப் ...ரோன நிலையம் ...அரைமணி

...நல்ல நன்பி ...மனைக்க. ...துரை சாதம்.

...ஷோனிஷா என் ...பார்த்து.

...சிக்கு சென்ற ...விவேக்கிடமே ...தான் ஆடவேன்

...வின் போன்ட ...கவர்களிலும்

...சென்னை ஏர் ...ரவி கின்னஸ் ...மேடையில் நான ...ர்கள் கலைந்து ...பிடித்து. நீங்கள ...த்த தனார் என் ...தேன் ரசிகர்கள் ...தலைக்கு மேல் ...ான் 'மறு தலைவை' ...பட ஆடியது



சூர்யா-லைலா
படம்: நந்தா

## அழகை ஆராதியுங்கள்

பச்சைத் துகிலுடுத்து
பவனியிலே நீ நடந்தால்...!
நெகிழ்ந்து நழுவுகிறது
என் இதயம்.
தெரியுமா..? உனக்கு...!
எனக்குப் பிடித்தது அந்த பச்சை நிறம்.
***
ஒற்றை ஜடை எடுத்து-அதில்
மேவும் முடி தொடுத்து..! சுட்டுவிரலாலே..!
கோலம் போடுகிற ஜாலம் பிடித்திருக்கு
ஏன்..!
எனக்குப் பிடித்தது-அந்த
ஒற்றை ஜடை.
***
கருகிய வானவில் போல்
நெற்றியோரச்சிறுகூந்தல்
அவிழ்ந்த சாமரமாய்
படபடக்கும் படர் ஒதுக்கி
கோதுகின்ற விதம்
அந்த பாவம் எனக்குப் பிடித்தது தான்
***
சின்னச்சின்ன கோபங்களும்-அவள்
ஊடல் செய்கின்ற பாவங்களும்-என்
வெழுத்த வானத்தில
பழுத்த கதிர் பாய்ந்தது போல்
பசுமையாய் பதிந்து கிடக்கிறது..!
***
சிரிப்பதை விட முகம்
சுழிப்பதில்தான் அழகு-ஏன்
நகைப்பதைவிட-நகம்
கடிப்பதிதான் அழகு
அழகை ரசிப்பவர்களில்
நானும் ஒருவன் நீங்களுமா..?

எஸ். றதன்-சம்பூர்-07.

## கண்ணீர்...

சோகங்களின் ஒட்டுமொத்த வரிவடிவம்
**
கன்னப் பாறைகளில் சறுக்கும்
இரட்டை நயகரா...
**
பெண்களின் பிரம்மாஷ்திரம்
அநேக ஆண்களின்
இரகசிய காதலி
**
சோகங்களிலே சிநேகிக்கும்
ஆருயிர் திரவ நண்பன்....
**
கடைசிவரை கைவிட்டுப் போகாத
உப்புச் சொத்து....

நிர்மலன், பேசாலை.

## உயிர்பூக்கள்

உள்ளத்தால் உள்ளம் தேடும் நேரம்
உணர்வுகள் ஊமையாகி
இமைகளும் கீழ் இறங்கும்
கண்ணீர் மழையால் வழிந்தோடும்-என்
தேக நதிக்கு உன் நினைவுகள்
அணையாகும்.
உந்தன் நினைவுகள் இறக்கை
கட்டிய பறவைகளாய்-என்னைச்
சுற்றி மௌன ஊர்வலம் வரும்.
வாசனை வீசும் என் அவிழ்ந்த கூந்தல்
உன் கரம்பட்ட மல்லிகைக்காய்
காத்து கிடக்கும்.
கனவுகளும், கற்பனைகளும்
கை கொடுப்பதால் ஒரு துறவியின்
தவத்தை விட என் பெண்மையின்
காதற் தவம் பலமிக்கது-என்
கை பேசும் யாஷிகபாஷா
உனக்காக உதிரும் உயிர்ப்பூக்கள்

க.தர்மினி, யாழ்ப்பாணம்.

## விடை கொடு விடை கொடு உயிரே!

குளிர்காயும்
உன் நினைவுகள்
என்னுயிரெரித்து...!
***
மனதுடன் சேர்ந்து
மரத்தினாலான
என் கட்டிலும்
எரிந்து சாம்பலாகும்.
என்னுடன்...!
***
காதலுக்குள் மட்டும்
அப்படி என்னதானொரு
காந்த சக்தி...!
***
விழிகளை வருத்தி
உள்ளத்தை உலுக்கி
நரம்புகளில்
நச்சுக்கலக்குமளவிற்கு!
***
தேவி...!
என் இராத்திரிகளையாவது
நின் நினைவுகளிடமிருந்து
மீட்டுக்கொடு...!
***
நிம்மதியாய் சற்றே
நித்திரைக்கொள்ள!
***
நாற்பொழுதுகள்தான்
நடைப்பிணமாக
இராப்பொழுதுகளுமா நரகத்துடன்..!
***
வேண்டாம் தேவி
வேதனையம்புகள் குத்தி
என் உயிரெலாம்
காயம்!
***
வா...!
வந்து என்
இதயத்தை
இரண்டாகக் கிழித்து
தெறித்துக் குமுறும்
குருதிச் சொட்டுக்களின்
குறு குறுப்பையும்
குரைப்பையும் கேட்டுப்பார்!
உன்
நினைவுகளின்
எதிரொலிகளையே
எழுப்பும்!
தேவி...!
நிர்வாணமான
என் இதயம்
***
உன் நினைவுகளை
உடுத்துக் கொண்டு
ஊர்கோலம் போனதென்னவோ
உண்மைதான்!
***
அதற்காக
என்னுயிரையா
எடுத்துக் கொள்ள
வேண்டும்!
***
தேவி...!
உன் உதடுகளின்
உயர்ந்த விரதத்தினை
விடுத்து..!
ஓர்
ஊமை விடையாவது
தந்துவிட்டுப் போ!
***
தணல்களுக்குள்
அகப்பட்டுத் துடிக்கும்
என்னுள்ளத்திற்கு
தண்ணீராகிப் போகட்டும்!
***

"மலைக்குயில்"-
து.பிரபாஹர்-
ஹப்புத்தளையூர்.

## பழகிப்பிரிந்து பார்....

பழகிப்பிரிந்து பார்....
தனிமை உன்னைத் துரத்தும்
தன்னம்பிக்கை கூட தவிடு
பொடியாகும்.
தனக்குத்தானே பேசத்தோன்றும்.
கட்டெறும்பு கூட உன்னை
சிந்திக்க வைக்கும்.
சினன்தாய் இதயத்தின் ஓரத்தில்
ஓர் வலி எடுக்கும்.
••
கடந்த காலங்கள்
நெஞ்சில் நடந்து வரும்.
கடந்ததிலே நெஞ்சம்
கிடந்து விடும்.
தபால்காரன் தகவல் தேடும்!
••
ஞாபகம் வந்து வந்தே
உன் மனக்கண்ணாடி சிதைந்து விடும்.
சிறகொடிந்தது போல்
நெஞ்சம் சிதைக்கும்.
உன்னையே உலகம் சுற்றி வரும்.
ஆனால் உயிரே உன்னைச்
சுற்றாதது போல் இருக்கும்.
உன்னைச் சுற்றி இருள் குடியிருக்கும்.
பழகிப்பிரிந்து பார்!
••
தனிமை உன்னைத் துரத்த
புதுமை உன்னுள் பிறக்க
பழகிப்பிரிந்துபார்!!

எஸ்.எம்.ஜிப்ரி, கல்முனை.

## தேன் கிண்ணம்

## அத்தனையும் பொய்!

கோலமயில் என்றதுவும் கொவ்வையிதழ் என்றதுவும்
குவலயத்தில் உண்மையல்ல, பொய்யே!- என்னை
சீலமுள்ள மங்கையென்றும் சிற்றின் பத்து ஆழியென்றும்
செப்புமொழி அத்தனையும் பொய்யே!
***
அன்னப் பெடை வெட்கிட நீ அழகுநடை பயில்வதென்று
அரிவையெனைக் கூறியதும் பொய்யே!-என்றன்
கன்னமது மாங்கனியை ஒத்தனவே என்று நித்தம்
கவிதைதனில் தீட்டியதும் பொய்யே!
***
மாமலைகள் போல் முலைகள் மயக்குகின்ற விழிகளென்று
மாநிலத்தில் சொன்னதெல்லாம் பொய்யே!-காதல்
கூந்தலினைக் கார்முகிலாய் குறித்ததெலாம் உண்மையல்ல
குவலயத்தில் அத்தனையும் பொய்யே!
***
பொன்னைவிட நீ உயர்ந்த பூவையென்று மடல்களிலே
பொறித்தவைகள் அத்தனையும் பொய்யே!-காதல்
மன்மதனை ஈர்த்தெடுக்கும் மங்கை ரதி என்று எனை
மனங்கனியப் பாடியதும் பொய்யே!
***
காமம்கொண்ட வேளையிலே கட்டழகி என்றெனையே,
காலமெல்லாம் பாடியதும்பொய்யே!- என்றன்
பூமுகத்தை நிலவு எனப் புத்திதெளி வற்றுலகில்
புகழ்ந்தவைகள் "அத்தனையும் பொய்"யே!

கவிமணி: அ.கௌரிதாசன்- ஆலங்கேணி கிழக்கு.

## ஒரு மரணம் சாகிறது


நீயாக வந்து கூடுகட்டிவிட்டு
நீயாகவே
கலைந்து போகிறாய்
உனக்கு இடம் தந்த
என் செயலுக்கு இதுவொரு
செருப்பு அடி!
***
அவன் உனக்கென்ன உறவோ!
உன் பெற்றோர் செய்த
யாகத்தில்
யாருக்கும் தெரியாமல்-நீ
என்னைத் தூக்கிப் பலியிட்டாய்!
ஆ...!
உன் பெயரை உச்சரித்தபடி
எரிந்துகொண்டிருந்த என்னை
பார்க்கவும்
உனக்கொரு விழிகூட
இல்லாமல் போயிற்றோ?
***
உண்மைதான்- நீ ஒரு
சுயநலச் சூரியனாகிவிட்டாய்!
நான் தான் பாவம்
வெளிச்சப் பிச்சை கேட்கும்
ஒரு அப்பாவி நட்சத்திரம் போல...
***
இப்படி
புலம்பிப் புலம்பியே
புலரும் என்பொழுதுகள்
ஒவ்வொன்றும்
இருண்டுவிட்டன!!!
***
இனியாவது
நான் நானாக வேண்டும்
என்னை எடுத்து
நானே உடுத்திக்கொண்டு
என்மேல் ஒட்டியிருந்த-உன்
நினைவுத் தூசிகளை
தட்டிக் கொண்டு
ஒரு உந்தலில் உன்
உறவைவிட்டு பறக்கிறேன்!
***
இனி இடையில் வந்துவிடாதே
எனக்கும் வானம் இருக்கிறது!
***
ஆம்! இதோடு ஒரு
மரணம் சாகிறது என்று
சாந்தி கொள்கிறேன்
ஆமாம்..
"காதல் என்பது
மரணத்தின் மறுவடிவம்"

என்.தனுசுஜன்,
யாழ்.சண்டிலிப்பாய்.

## பேனா நண்பர்கள்



பெயர்: எம்.எச்.எம். பிறிம்ஸாத்
வயது: 19
முகவரி: 332ஏ, மார்க்கட் வீதி, சாய்ந்தமருது-07.
பொழுது போக்கு: ரி.வி., பத்திரிகை.



பெயர்: ஜி.விக்னேஸ்வரன்
வயது: 19
முகவரி: 05, குருந்தல்பத, குளியாபிடிய.
பொழுது போக்கு: வானொலி, கிரிக்கெட்.



பெயர்: ஏ.எஸ். இஸ்ஹாக் பர்ஷாத்
வயது: 21
முகவரி: அன்னல் வீதி, கிண்ணியா-03.
பொழுது போக்கு: வழமையானவை.




## நாளை என்பது கனவு

சந்தோஷம் எதிர்காலத்தில் தானாகவே உங்களைத் தேடிக்கொண்டு வரப்போகிறது என்ற கனவுலகிலேயே வாழ்ந்து வராதீர்கள்.

ஒருவனுடைய வாழ்க்கையிலேயே மிக முக்கியமான நேரம் அவன் வாழ்ந்து வரும் நிகழ்காலம்தான்.

ஒருவன் தன் நிகழ்காலத்தை எப்படிப் பயன்படுத்திக் கொள்ளுகிறான் என்பதைப் பொறுத்துத்தான் அவனுக்கு எதிர் காலத்தில் கிடைக்கும் புகழ், செல்வம், சந்தோஷம் போன்றவைகள் அமையும்.

நேற்று என்பது செத்துப் போனவைகளின் பட்டியலிலே சேர்க்கப்பட்டு விட்டது. அதைக் குழித் தோண்டி புதைத்தாகிவிட்டது. அது இப்போது உயிரற்ற ஜடப் பொருள்தான்.

கடந்த காலம் கடினமானதாக இருந்திருக்கலாம். கசப்பான சம்பவங்கள் கொண்டிருக்கிறது. தான் வாழ்ந்து வரும் இந்த வினாடியை ஏற்கனவே திட்டமிட்டபடி நன்கு பயன்படுத்திக் கொள்ளுபவன்தான் நிறையச் சாதனைகளைப் புரிந்துதான் ஆசைப்பட்ட அனைத்தையும் பெற்று சந்தோஷமாக வாழ்ந்து வர முடியும்.

இன்றைய நாளில் சந்தோஷமாக வாழ்ந்து வருவதாக சபதம் எடுத்துக் கொண்டு அதை நடைமுறையில் செய்து காட்ட வேண்டும். தானும் சந்தோஷமாக வாழ்ந்து தான் சந்திக்கும் அனைவருக்கும் சந்தோஷத்தை கொடுக்க முயற்சி செய்ய வேண்டும்.

இப்படித் தினமும் சந்தோஷமாக வாழ்ந்து வருபவன் தன் வாழ்க்கையை மாபெரும் வெற்றியாக மாற்றி விட்ட மாபெரும் சாதனையைப் படைத்தவனாக உருவெடுப்பான்.

சந்தோஷம் அனைவருடைய கைகளுக்கு எட்டும் தூரத்திலேயே இருப்பதை பெரும்பாலானவர்கள் தெரிந்து கொள்ளாமல் வாழ்ந்து வருகிறார்கள்.

தான் வாழ்ந்து வரும் இடத்திலேயே சந்தோஷத்தை அனுபவிக்கத் தவறியவன் நிறைந்ததாக இருந்திருக்கக்கூடும்.

நீங்கள் நிறைய அநியாயங்களையும் அவமானங்களையும் சந்தித்திருக்கக்கூடும். உங்களுடைய உழைப்பிற்குத் தகுந்த பலன் கிடைக்காமல் இருந்திருக்கக்கூடும்.

கடந்த காலத்தில்தான் கண்ட துயரங்களை அனைத்து நேரமும் நினைத்து வந்து தன் நிகழ்காலத்தை வீணாக்கிக் கொள்ளுபவனுக்கு மகிழ்ச்சி நிறைந்த எதிர்காலம் இல்லாமலேயே போய்விடும்.

நாளை என்பது வெறும் கனவு. அது இன்னும் பிறக்காத குழந்தை. அது இன்னும் எழுதப்படாத கதை. அது இப்போது வெறும் கற்பனை தான்.

ஆனால் நிகழ்காலம் உயிர்த்துடிப்புடன் நம்முடன் நடைபோட்டுச் சுவர்க்கத்திற்கே சென்றால்கூட நரகத்தைத் தான் காண்பான்.

ஒருவன் சந்தோஷத்தைத் தன் உள்ளத்திலேயே உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

நிலத்தை நன்கு கொத்தி, ரோஜா, புதியன்களை நட்டு, சரியான நேரங்களில் சரியான அளவில் உரமிட்டு தினமும் போதுமான அளவில் தண்ணீர் ஊற்றி அவைகளை மிகவும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தால், அங்கு சில மாதங்களுக்குப் பிறகு வண்ண வண்ண ரோஜா மலர்கள் மலர்ந்து மணம் வீசுவதை நாம் காணமுடியும்.

உழைப்பும் கவனிப்பும் இல்லாத நிலத்தில் முட்புதர்களும் எருக்கஞ் செடிகளும் தான் மண்டிக்கிடக்கும்.

'சந்தோஷம்' என்ற செடியின் விதையை மனதில் நட்டு அதை நன்கு பாதுகாத்து வந்தால் 'சந்தோஷம்' என்ற மலர்கள் அவன் உள்ளத்தில் மலர்ந்து அவனுக்கு நிறையச் சந்தோஷத்தை கொடுக்கும்.

கட்டுப்பாட்டுடன் இயங்காத மனம் பாழ்பட்ட கோவிலைப் போன்று காட்சி தரும்.

## இந்தவாரம் உங்கள் பலன்

09.12.2001 தொடங்கி 15.12.2001வரை

### மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) எடுத்த கருமங்களில் சிறுதடை ஏற்படும். பொருள் வரவு பாதிப்படையும். பெரியோர்களை பகைத்துக் கொள்ள நேரிடும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளுடன் இணைந்து நடப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### இடபம்:
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) தொழில் நிலையிலும், குடும்பத்திலும் சிறிது பிரச்சனைகள் தோன்றி மறையும். பொருள்வரவில் மந்த நிலையுண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வீண் சிரமங்கள் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சி நிலையுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

### மிதுனம்:
(மிதுகசீரிடத்து பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன்முக்கால்) மனதில் பயமும், குடும்பத்தில் எதிர்பாரா பிரச்சனைகளுக்கும் இடமுண்டு. பொருள்வரவு சுமாராக அமையும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த நன்மைகள் வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். வியாபாரிகள் எதிலும் கவனமுடன் இருப்பது நல்லது.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம், ஆயிலியம்) தொழில் நிலையில் முன்னேற்றமும், குடும்பத்தில் மகிழ்ச்சியும் உண்டாகும். வார இறுதியில் வீண் பிரச்சனைகளுக்கு இடமளிக்கும். உத்தியோகத்தில் உள்ளோர். எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### சிங்கம்:
மகம், பூரம், உத்தரத்து முதற்கால், தொழிலில் ஏற்பட்டிருந்த கஷ்டநிலை மாறும். குடும்பத்தில் மகிழ்ச்சியுண்டாகும். பொருள்வரவு சிறந்து விளங்கும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளின் பாராட்டுதலுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 07.

### கன்னி:
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்ரை,) தொழில் கஷ்டங்கள் மறையும். எதிர்பார்த்த பொருள்வரவு வந்து சேரும். உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளை பகைத்துக் கொள்ளாமலிருப்பது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: சொவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 04.

## சோதிட மாமணி தில்லை

### துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) புதிய முயற்சிகளில் நன்மையுண்டாகும். குடும்பத்தில் வார இறுதியில் துக்க சம்பவம் ஒன்று நடந்தேறும். பொருட் செலவுக்கு இடமளிக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் சீற்றத்துக்கு ஆளாகுவர். விவசாயிகள் வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 03.

### விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை) தொழிலிலும், குடும்பத்திலும், வீண் பிரச்சனைகள் ஏற்பட்டு மறையும். பொருள்வரவில் தடைகள் உண்டாகும். உத்தியோக ரீதியாக இருந்து வந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 06.

### கிரக நிலை

| | |
|---|---|
| விருட்சிகம் | - சூரியன், வெள்ளி |
| தனு | - புதன், கேது |
| கும்பம் | - செவ்வாய் |
| இடபம் | - சனி |
| மிதுனம் | - வியாழன், இராகு. |

சந்திரன்: கன்னி, துலாம், விருட்சிகம், தனு இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) பொருள்வரவு, குடும்ப சுகம், தொழில் நிலை என்பவற்றில் முன்னேற்றம் ஏற்படும். வெளியிட பிரயாணங்களை தவித்துக் கொள்வது நல்லது. உத்தியோக ரீதியாக இருந்துவந்த கஷ்டங்கள் தீரும். மாணவர்களுக்கு கல்வி உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

### மகரம்:
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) தொழில்நிலையில் மாற்றமும் பொருள் வரவு திருப்திகரமாகவும் அமையும். குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். உத்தியோகஸ்தர்கள் தமது பதவி நிலையில் மாற்றங்களை எதிர்நோக்குவர். மாணவர்களுக்கு கல்வியில் ஏற்பட்டிருந்த தடைகள் விலகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

### கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்) எதிர்பார்த்த கருமங்களில் வெற்றியும், தொழில் சிறப்பும் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உத்தியோகஸ்தர்கள் எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது. மாணவர்களுக்கு கல்விச் சிறப்பளிக்கும் விவசாயிகள், வியாபாரிகள் இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

### மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) எதிலும் விழிப்புடன் நடந்து கொள்வது நல்லது. வீண் பிரச்சனைகளுக்கு இடமுண்டு. உத்தியோகத்தில் உள்ளோர் மேலதிகாரிகளைப் பகைத்துக் கொள்வர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டாகும். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 01.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## பெண் முன்னேற்றத்தைத் தடுப்பவர்கள் மூடர்கள்

**பெ**ண் என்பவள் ஓர் அதிசயப் பிறவி. பெற்றோருக்கு மகளாக , வெளியுலகத்தோருக்கு தோழியாக, கணவனுக்கு மனைவியாக, பிள்ளைக்குத் தாயாக, புகுந்த வீடு வரும் மருமகன்/ மகளுக்கு மாமியாராக பேரப்பிள்ளைகளுக்குப் பாட்டியாக, கொள்ளுப்பாட்டியாகப் பாசமழை பொழிவதோடல்லாமல் தன் உயிரையும் உடலையும் கூட தியாகம் செய்யத் துணிபவள் பெண். அப்பாசத்தால் கட்டுண்ட பின் எந்தத் தியாகத்தையும் செய்யும் மனத்துணிவு, சிறந்த அறிவும் ஒழுக்கமும் கொண்டு இயங்குவதில் பெண்ணுக்குப் பெண் நிகரேதான்.

ஆக, பெண் அருமையானவளாக இருப்பதாலும் பெண் விடுதலையை அனைவரும் ஆதரிப்பதாலும், அவ்வப்போது உலகில் ஆங்காங்கே நடந்து வரும் பெண் உரிமை மீறல் நெஞ்சில் ஒரு கீறலை ஏற்படுத்தவே செய்கிறது. ஆண்டவன் படைப்பில் ஆண் பெண் இருவரும் சரிசமமாகவே படைக்கப் பட்டுள்ளனர். பெண் உரிமை மீறல் என்பது மிகவும் கண்டனத்துக்குரியது. கடவுளுக்கே அடுக்காத இச்செயலை உலகில் உள்ள அத்தனை ஆண்களும் சர்வசாதாரணமாகச் செய்து வருகின்றனர் என்பது வேதனைக் குரியது.

இது சர்வ சாதாரணமாகக் கீழை நாடுகளில் நடைபெறுவதன் காரணமே தன்னம்பிக்கையின்மைதான். இது ஆண், பெண் இரு பாலருக்கும் பொருந்தும். தன் மேல் நம்பிக்கை இல்லாததால்தான் தன் மனைவி தன்னைப் போல் வெளியில் சென்று அனைவருடனும் பழகிச் சம்பாதிக்கக்கூடாது என்று ஆணை எண்ண வைக்கிறது. ஏனெனில் வீட்டினுள் இருப்பவளைக் காட்டிலும் வெளியில் சென்று வருபவளுக்குத் தைரியம் அதிகம் என்பது ஆண்களுக்குத் தெரியும். ஆகையால் தன் மரியாதையைக் காப்பற்றிக் கொள்ள குடும்பக் காரணங்களைக் கூறியே மனைவியின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் அவர்களை வீட்டில் அமர வைத்து விடுவர். வெளியே செல்லும் பெண்ணால் தன் மரியாதை கெடும். தன் சம்பளத்தைவிட மனைவியின் சம்பளம் அதிகமாக இருப்பது மானப்பிரச்சனை என்றும், பெண்(மனைவி) எதிர்த்துப் பேசுவது தனது ஆண்மைக்கே இழுக்கு என்றும் இப்படியே மற்ற பல காரணங்களால் ஆண்களின் தன்னம்பிக்கை காணாமல் போகிறது. இதற்குப் பலிகடா ஆவது பெண்களே.

பெண்களும்கூடத் தன்னம்பிக்கை கொண்டவளாக இருந்தால் இந்நிலை நடப்பதைத் தவிர்த்திருக்கலாம். ஏனெனில் தன்னம்பிக்கை கொண்ட பெண்மலை போன்ற தடையே ஒரு சேர வந்தாலும் அதை அழகாகத் தகர்த்தெறிந்து புன்னகை பூக்கும் வலிமை பெற்றவள். ஆனால் தடை வந்த பின் அது வந்ததற்கான காரணத்தை ஆராய்ந்தறிந்து நிவர்த்தி செய்ய நினைக்காத பெண்கள் தங்கள் கணவன்தான் வேலைக்குப் போக விடவில்லை என்று பழியைத் தூக்கி கணவனின் மேல் போட்டு விட்டு ஒளிந்து கொள்ளும் வேடதாரிகள் ஆவர். தன்னம்பிக்கை இல்லாத பெண் இப்படித்தான் இருப்பாள். பெண் நினைத்தால் முடியாதது எதுவுமே இல்லை. ஆணோடு தானும் சரிநிகராக வேண்டும், குடும்ப பாரத்தை இருவருமே சுமக்க வேண்டும். வெளியுலகத்துடன் பழகி நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இப்பெண்கள் என்னாததனால்தான் இக்குறைபாடு நிகழ்கின்றது. இந்த எண்ணம் வராததன் முக்கியக் காரணமே தன்னம்பிக்கையின்மைதான்.

ஆக, பெண்கள் வேலைக்குச் செல்வதை ஆண் வர்க்கத்தினர் ஒரு மாதிரியாக நோக்குவதற்கும், மனைவி கல்வி பெறாதவளாக வீட்டினுள் முடங்கிக் கிடப்பதற்கும் தன்னம்பிக்கையும் எண்ணங்களும்தான் காரணம். ஏனெனில் பெண் முன்னேற்றத்துக்கு முக்கியமான காரணங்களாக் கருதப்படுவது கல்வியும் வேலை வாய்ப்பும் மட்டும்தான். இவற்றைத் தங்களதாக்கிக் கொண்டவர்கள் என்றுமே ஏமாந்ததில்லை. கல்வி பயில வயது என்றுமே தடையாக இருந்ததில்லை; நாடு முழுவதும் பல நிறுவனங்கள் கல்விப் பயிற்சி வழங்கியும் வருகிறது. வேலை வாய்ப்பென்பது ஆண் பெண் இரு பாலாருக்கும் சரிசமமான அளவில் வழங்கப்படுகிறது. ஆக, முன்னேற நினைக்கும் பெண்களும் ஆண்களின் முரட்டுக் கட்டுக்குள் இருந்து விடுபட நினைக்கும் பெண்களும் சிறந்த முறையில் முன்னேறுவதற்கான வாய்ப்புகள் என்றுமே பரந்து காணப்படுகிறது. தன்னம்பிக்கை எனும் கையை மட்டும் மூலதனமாகக் கொண்டு செயல்படுவதன் மூலம் ஆணாதிக்கத்தையும் அதனால் வரும் தடைகளையும் பெண்களால் தகர்த்தெறிய முடியும். சமுதாய ஆண்கள் மட்டுமின்றி குடும்பத்தில் உள்ள கணவன் என்ற ஆணையும் இதன் மூலம் ஒரு வழிக்குக் கொண்டு வர முடியும். பெண் சாதிக்கப் பிறந்தவள் என்பதையும் நிரூபிக்க முடியும். அதோடு, எவ்வளவு பெரிய கல்வித் தகுதிகளைக் கொண்டிருந்தாலும், எத்தகைய உயர் பதவியில் இருந்தாலும் குடும்பம் என்று வரும்போது அதன் தலைவனாகத் தன் கணவனாக ஆண் இருப்பதால் அவனுக்கு அடங்கி நடப்பவளும் பெண் என்பதையும் நிரூபிக்க முடியும்.


## பட்டுச் சேலை பரிசுப் போட்டி



**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** KN

பெயர்:...................

முகவரி:...................

...................

தொழில்:...................

கையொப்பம்:...................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 15-12-2001**


அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? குருநாகல் வாசகிக்கு அதிஷ்டம்!

**இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்**

V.நளினி
இல:26, கெட்டுவானை ரோட், கொடகந்த, குருணாகல்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.




சுஜாதா

**“இ**து வேற!" மது அதை எடுத்து “என்ன பேர் வெச்சிருக்கே?" என்றாள்.

“இன்னும் பேர் வைக்கலை."

“வைருன்னு வை... வைரு... வைஜ... ரூ!"

“சும்மாரு; அம்மா காதில கேட்டா கொன்னுடுவா என்னை."

“நீ வளர்க்காட்டி போ... நான் எடுத்துட்டுப் போறேன் இதை... என்னிக்குக் கல்யாணம் தெரியுமா?"

“தெரியாது."

“எனக்குத் தெரியும். ஏப்ரல் பதினெட்டு. எனக்கு ரிசப்ஷன் கமிட்டி, ப்ரஸ், வீடியோ இவையெல்லாம் பொறுப்பு கொடுத்திருக்கு சீத்து."

“சீத்து யாரு?"

“அதான் சீதள்."

“எங்கயாவது ஓடிப் போய்டலாமானு தோணுது."

“உன்னைப் போல பைத்தியம் கிடையாது அனி. சந்தோஷம் பிச்சுக்கிட்டு உன்னைத் தேடிக்கிட்டு வருது. அதை அப்படியே எடுத்துக் கட்டிக்காம வெறுப்படிக்கிறே பாரு. என்ன குறை உனக்கு? அனி... ஒரு ஆளு பணக்காரனோ, ஏழையோ, எப்படி வேணும்னாலும் இருக்கட்டும். ஒரு ஆளு உன்னை இத்தனை ஃபீலிங்கோட இத்தனை தீவிரமா காதல் பண்றான்னா அதுவே ரொம்ப பெரிய விஷயமில்லையா... பெரிய அதிர்ஷ்டமில்லையா?"

“இதான் காதலா?"

“மைகாட்... வேற என்ன?"

“எனக்கு எல்லாமே செயற்கையா இருக்கு மது... போஸ்டர் ஒட்டறது, போன் பண்றது, பத்து நிமிஷத்துக்கு ஒருமுறை லவ் யு...லவ் யுன்னு சொல்றது.. எல்லாமே..."

“பின்ன காதல்னா உன் ‘கல்லி'ல என்ன சொல்லு?"

“அது என்னவோ... ஆனா ஒண்ணு மட்டும் நிச்சயம்..."

“என்ன?"

“நான் இன்னும் காதல் பண்ணலை... யாரையும்... எதையும்! அதனால அது என்னன்னு தெரியலை."

“காதல்ங்கறதும் உயிரினங்களோட அத்தியாவசியத் தேவைகள்ல ஒண்ணுன்னு படிச்சேன். அது இல்லைன்னா ஆம்பளைங்கள்லாம் முதல் இரவோட வேற பொண்ணு பார்க்கப் போயிருவாங்களாம். ‘பெண்ணுக்கு ஆதிகாலத்திலருந்து வீட்டு வேலையும் பார்த்துக்கிட்டு குழந்தைங்களையும் பார்த்துக்க ரெண்டு கை பத்தலை. அதனால காதல்னு ஒண்ணை உண்டுபண்ணி புருசனை விசுவாசமா அஞ்சு வருசமாவது அந்தண்டை இந்தண்டை நகராம அதாவது குழந்தை சுதந்திரமா பிரிஞ்சு போகிறவரைக்குமாவது வளைச்சுப் போடறதுக்கு-இயற்கை கண்டு பிடிச்ச ட்ரிக், ‘காதல்'னு ‘டைம்' பத்திரிகைல போட்டிருந்தான்."

“அதான் இத்தனை கவிதை எழுதறாங்களாக்கும்!"

அப்போது பாஸ்போர்ட் மனுவக்குக் காகிதங்கள் வந்தன. அனிதா கையெழுத்து போட்டபோது, “சுரேஷைப் பார்த்தேன்" என்றாள் மது.

“நானும் பாத்தேன். வைரவன் அறிமுகப்படுத்தினார்.

“அந்தாளு ரொம்ப வருத்தப்பட்டான். உங்கிட்ட வந்து மன்னிப்பு கேக்கணும்னான். அவனை நீ தப்பா எண்ணிக்கக் கூடாதுன்னு சொல்லச் சொன்னான்" என்றாள் மது.

“அப்படியா.. எனக்கு அதில ஆச்சரியமே இல்லை... எங்கப்பாவே மாறிட்டார். சுரேஷ் மார்றதுக்கு என்ன?" என்றாள் அனிதா.

அனிதா கனவு கண்டாள். கையில் குழந்தை இருப்பதாகவும்... அதைப் பாம்பு கடித்து பல் பட்டிருப்பதாகவும்... யாரோ. ‘அதை தூங்கவிடாமல் பார்த்துக்கொள்' என்று சொல்லச் சொல்ல... அது தூங்கித் தூங்கி வழிவதாகவும் கண்டு, சட்டென்று விழித்துக் கொண்டாள்.

ஒருகணம் எங்கே இருக்கிறோம் என்று தடுமாற்றமாக இருந்தது. ‘ஹாஸ்டலா... வீடா?'

ஹாஸ்டல்தான் மதுவின் அறை.

அவளிடம் அந்த அபத்தமான கனவைச் சொல்லி,

“மது, இந்த கனாவக்கு என்ன அர்த்தம்?" என்றாள்.

“ஒரு அர்த்தமும் இல்லை. ராத்திரி பாத்ரூம் போகாம படுத்து இருப்பே. பாத்ரூம் போக எழுப்பத்தான் கனவு வந்திருக்கும்..." என்று சொல்லிவிட்டு, தலையணையைக் கட்டிக்கொண்டு, “ஸல்மான்கான் எப்படி இருக்கார் பாரு!" என்று ஒரு சினிமா பத்திரிகையைப் பார்த்து பெருமூச்சுவிட்டாள் மது.

“உன்னோட அதிர்ஷ்டம் எனக்கும் கொஞ்சம் ஒட்டிக் கிச்சு அனி... நான் வைரவன் கம்பெனியில வேலைக்குச் சேரப்போறேன். கல்யாணத்தை மட்டும் வேண்டாம்னு சொல்லிராதே என்ன?" என்றாள் மது.

அனிதா, பாடப் புத்தகத்தை எடுத்துப் படித்தாள்.

“அனி... உனக்கு எதுக்கு இனிமே படிப்பு? வைரவன் கைல சொன்னா டிகிரி சாட்டிபிகேட்டைச் சுருட்டி உன் கைல கொண்டு வந்து கொடுத்துருவாரு, பரீட்சை கூட தேவையில்லாம!"

“மது... உனக்குப் பிடிக்கிறதா?"

“கேலி பண்றியா" என்று அனிதாவின் முதுகில் குத்தினாள் மது.

மதியம் வீட்டுக்குப் போனபோது, “என்ன இது... வீடு தினம் தினம் மாறுது! இந்தக் கட்டில் எல்லாம் எதுக்கு?" என்றாள் அனிதா.

“அப்பா தரைல படுத்துக்கறதைப்பார்த்த ‘வைரவனுக்குப் பொறுக்கலை. ‘வைரவனோட மாமனார் தரைல படுத்துக்கறதாவது... என்ன அநியாயம்'னு கேட்கறாரு..." என்றாள் கமலம்.

“கல்யாணக் கடுதாசி வந்துருத்து.. பார்க்கறயா? நம்ம பக்கத்துக்கு மட்டும் சம்பிரதாயப்படி ஆயிரம் காப்பி போட்டிருக்கோம்" என்றபடி பத்திரிகையை கமலம் நீட்டினாள்.

வெளியே ரோஸ் கலரும் உள்ளே மஞ்சளுமாக இருந்த அந்தக் காகிதத்தை அசுவாரஸ்யமாகப் பார்த்தாள் அனிதா. ஜிம்புவின் பெயர்கூட இருந்தது.

‘எப்போது ரத்து செய்ய முடியும்? இப்போதும் லேட் இல்லை'.

“எது?"

“இந்த மாதிரி எந்த முயற்சியும் இல்லாம எல்லாம் கிடைக்கிறது. எதையாவது அடையணும்னா கொஞ்சமாவது பாடுபட வேண்டாமா?"

“பாடுபட வேண்டியவங்க பாடுபடணும். நீ இப்ப அந்த வகையைச் சேர்ந்தவ இல்லையே!"

“என்ன மது.. இப்படி மாறிட்ட?"

“மாறலை... என் நேச்சரே அப்படித்தான். குறுக்கு வழி கிடைச்சா வடமாட்டேன்" என்றாள் மது.

“எதுவுமே உனக்குப் புனிதம் இல்லையா?"

“புனிதம்னா...?" மது கேட்க,

“ஃபர்கெட் இட்" என்று சொல்லி விட்டு, பென்சில்களை சேகரித்து, புத்தகத்தை மூடிவிட்டு, “என்னை வீட்ல கொண்டு விட்டுரு. அங்க போனா எனக்கு மூச்சு முட்டுது. என்ன செய்யறது... போய்த்தான் ஆகணும்!" என்றாள் அனிதா.

**நவீன எழுத்துலக வேந்தன் சுஜாதா**

“என்ன பிரச்சனை வீட்டுல?"-மது கேட்க,

“எல்லாரும் வைரவன் ரசிகர் மன்ற மெம்பர்ங்க" என்றாள் அனிதா.

“நீ"

“எனக்கு அந்த ஆளை சைஸ் பண்ண முடியலை" என்று அனிதா சொல்ல,

“கல்யாணம் ஆனதும் நிறையவே சான்ஸ் கெடைக்கும்... சைஸ் பண்ணிக்க என்ன... நான் கடைக்குப் போகணும்... கல்யாணத்துக்கு டிரெஸ் எடுக்கணும்... சீதள் வரச்சொல்லிருக்கு!" என்ற மது, கண்ணாடியில் பார்த்துக்கொண்டு, “செலவோடு செலவா ப்ளாஸ்டிக் சர்ஜரி பண்ணிக்கலாமான்னு பார்க்கிறேன். மூக்கு சரியில்லை எனக்கு" என்றாள்.

“உன் மூக்குத்தான் மது, உன் முகத்திலேயே அழகான விஷயம்!"

“அம்மா... இந்தக் கல்யாணம் எனக்கு வேண்டாம்."

“ஏன் அனி...?"

“எனக்கு என்னவோ இஷ்டமில்லை."

“எதுனால.. காரணம் சொல்லு"

“எல்லாத்துக்கும் காரணம் இருந்தாகணுமா? எனக்கு இஷ்டமில்லை..."

“இப்ப வந்து சொல்றியே! அத்தனை பெரிசா நிச்சயதார்த்தம் எல்லாம் நடந்தப்புறம்."

“அதனால் என்ன? அதுக்கு ஆன செலவைக் கொடுத்துடறதா சொல்லலாம்மா!"

அனிதாவுக்கே சிரிப்பாக வந்தது.

“என்னடி உனக்குள்ள சிரிச்சுக்கறே? அப்பா ஸூட் போடறதைப்பார்த்தா?"

“அப்பா ஸூட் போட்டுக்கறாரா?"

“ஆமா... எல்லாம் ட்ரையல் பார்த்து தெச்சு வந்தாச்சு. கல்யாணத்தன்னிக்கு அவாளுக்குச் சமானமா நாம இருக்க வேண்டாமா?"

“அவாளுக்குச் சமானமா நாம ஆகவே முடியாதும்மா."

“ரேமண்ட்ஸிலிருந்து ஒஸ்தி துணி அனி" என்றான் ஜிம்பு.

“உனக்கு?"

“எனக்கும் தான்."

“வளையல் செட்டு அனுப்பிருக்கா பாரு. போட்டுண்டா முழங்கை வரைக்கும் வரும். ஒவ்வொரு வளையலும் ஒரோரு கல் வெச்சிருக்கு அதோட ஒவ்வொண்ணுலயும் குட்டியா ஒரு தங்கச் சங்கிலி தொங்கறது. இப்ப அதான் பேஷனாம்"

வாசலில் கார் கதவு மூடும் சத்தம். அப்பா உள்ளே வந்தார்... “ஸ்ஸ்... என்ன வெயில்... ஏ.ஸி.போடு அனி... நீ வந்திருக்கியா?" என்று அவளைப் பார்த்து முகமலர்ந்தார்.

அனிதா பேசாமல் தன் அறைக்குச் செல்ல, “இடம் போறாதுன்னு விசுவநாதராவை காலி பண்ணச் சொல்லிட்டார் வைரவன். அவர் எங்கிட்ட அழாக்குறையா சொல்றார். ‘கல்யாணத்துக்கு யார் வந்தாலும் தங்கறதுக்கு இடவசதி பண்றேன்... என்னை மட்டும் விரட்டிராதீங்கோ'ன்னு!"

“நீங்க என்ன சொன்னேள்? மாமிகூட என்னை வந்து கெஞ்சினா..." என்றாள் கமலம்.

[அனிதா வருவாள்...]

# என்கிட்ட மோதாதே!

முன்னொரு காலத்தில் கறிகடைகாரன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் சொக்கலிங்கம். இவன் கடையில் எப்போதும் கறி வியாபாரம் பிச்சிக் கொண்டு ஓடும். இவன் மிகவும் திறமைசாலி. எல்லாரையும் தன் வாய்பேச்சால் கவிழ்த்து விடுவான்.



இவனிடம் மாட்டினவர்கள் எதையாவது வாங்காமல் போக மாட்டார்கள். அதையும், இதையும் பேசி தலையில் கட்டிவிடுவான்.

கொஞ்சம் ஏமாந்தவங்க என்றால், பழைய கறி மற்றும் தேவை இல்லாத பாகங்களை தலையில் கட்டிவிடுவான்.

இவன் கடைக்கு வந்தவர்கள் கண்களில் விளக்கெண்ணை ஊற்றிக் கொண்டுதான் பார்க்க வேண்டும். அத்தனை அசகாய சூரன்.

சில பேர் ஆத்திரம் தாங்க முடியாமல் சபிப்பார்கள். 'சொக்கா! உனக்கு பிள்ளையா குட்டியா? யாருக்காக இப்படி காசு சேர்க்கிற,' என்று ஆனால், இதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ள மாட்டான். 'நாளைக்கு நான் முடியாமல் படுத்துட்டா காசு இருந்தா தான் எந்த நாயும் என்னை பார்க்கும். இல்லன்னா ஒரு மனிதனும் மதிக்க மாட்டான்,' என்பான்.

ஒருநாள் பக்கத்து தெருவில் உள்ள வக்கீல் ராமசாமி வீட்டுக்கு சென்றான் சொக்கன்.

"ஐயா! ஒரு ஆலோசனை தேவை. அதான் உங்களைத் தேடி வந்தேன்,"என்றான்.

"உட்காருப்பா. என்ன பிரச்சனை. விளக்கமா சொல்லு," என்றார் ராமசாமி.

"என்னுடைய கறி கடையில தொங்கிட்டு இருந்த கறியை, நான் இப்படி பக்கத்து கடைக்கு போயிட்டு வருவதற்குள் ஒரு நாள் தின்னுட்டு போயிடிச்சி. இதனால எனக்கு நஷ்டமாகிடுச்சி. இப்போ என்னுடைய சந்தேகம் எல்லாம் நாய்க்கு சொந்தக்காரரிடம் நான் நஷ்டப்பட்ட தொகைக்கு ஈடாக நஷ்டஈடு கேட்கலாமா? அதுக்கு சட்டத்துல இடம் உண்டா?" என்றான்.

"ஓ! தாராளமா கேட்கலாமே. சட்டப்படி நாயின் சொந்தக்காரர், நாய் தின்னதற்கான நஷ்டஈட்டுத் தொகையை கொடுத்துத் தான் ஆகவேண்டும். நீ தாராளமாக நாய்க்கு சொந்தக்காரனிடம் பார்த்து கேள்," என்றார் வக்கீல்.

"அப்படின்னா... எடுங்க ஐயா! நூறு ரூபாய். நாயின் சொந்தக்காரர் நீங்கள்தான். நீங்களோ வக்கீல். எங்கே என்னை ஏமாற்றி விடுவீர்களோ என்று தான், உங்கள் வாயாலேயே சட்டத்தைக் கேட்டேன். இனி நீங்க என்னை ஏமாற்ற முடியாது பாருங்க," என்றான் சொக்கன்.

"அப்படியா? பலே கில்லாடிதான் நீ. வக்கீலிடமே உன் திறமையை காட்டுறியே. இந்தா நூறு ரூபாய்," என்றார் வக்கீல்.

"ஆஹா... இவ்ளோ சீக்கிரம் காரியம் ஜெயமாகுன்னு அவன் நினைக்கவே இல்லை. "வக்கீல் இத்தனை ஏமாந்தவர்ன்னு தெரிஞ்சிருந்தா இன்னும்கூட பணம் கேட்டிருப்பேனே," என்று நினைத்து மகிழ்ந்தான் உள்ளுக்குள்.


பணத்தை பெற்றுக் கொண்டு சந்தோஷமாக நடந்த சொக்கனை, வக்கீலின் குரல் தடுத்து நிறுத்தியது.


"என்னப்பா சொக்கா.. வக்கீலிடம் சட்ட ஆலோசனை கேட்டுட்டு பீஸ் கொடுக்காம சும்மா போறியே. என்னோட பீஸ் இருநூறு ரூபாய். அதை கொடுத்து விட்டு போ," என்றார் வக்கீல்.

"என்னது... இருநூறு ரூபாயா?" என்றான் சொக்கன்.

"என்ன வக்கீலையே ஏமாத்த பாக்குறியா? இப்ப பணத்தை கொடுக்குறியா இல்ல போலீசை கூப்பிடவா?" என்றார் வக்கீலும்.

பயந்துபோன சொக்கன், பணத்தை கொடுத்து விட்டு நொந்து போய் வீட்டுக்குச் சென்றான்.





புள்ளியிடப்பட்ட இடங்களுக்கு வர்ணம் தீட்டி மறைந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடியுங்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **15.12.2001.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **424**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 422

**பரிசுக்குரியவர்:**
நா. நித்தியா,
விஜயரத்தினம் இந்துக் கல்லூரி, நீர்கொழும்பு.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| த.தட்ஷாயினி<br>புனித அன்னம்மாள் மகளிர் ம.வி.,கொழும்பு-13. | சி.ஹரிஹரசுதன்,<br>சங்கமித்த மாவத்தை, கொழும்பு-13. |
| என். சாக்ஷிகன்<br>பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி,கொழும்பு-04. | அசானா இல்மா அம்சீக்,<br>புனித தோமையார் பெண்கள் பா., மாத்தளை. |
| எஸ். தற்பரன்,<br>புதிய சோனகத்தெரு, கொழும்பு-12. | ஸ்ரீ.லங்கீர்த்தன்,<br>இந்துக்கல்லூரி, கொழும்பு-04. |
| சு. சத்யதர்ஷன்,<br>சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயம், பதுளை. | அமீட் சொஹைல் ஸாயிட்,<br>கிடிஸ் கிங்டொம் முன்பள்ளி,உடதலவின்ன. |
| ஏ.ரெஜினா,<br>க/கலாபொக்க தமிழ் வித்தியாலயம், மடுல்கலை. | எஸ். ஸ்ரீஹரீஸ்,<br>புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |

## அறிந்து கொள்ளுங்கள்

### கடிகாரத்திற்கு மூன்று முள் ஏன்?

கடிகாரத்தில் 3 முள் இருக்கிறது எதற்காக?

முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் இதற்கு ஒரு முத்தான காரணம் கூறினார். 'ஒரு வேலையை இந்தியர்கள் மணிக்கணக்கிலும் அமெரிக்கர்கள் நிமிடக் கணக்கிலும், ஜப்பானியர் நொடிக்கணக்கிலும் செய்து முடிக்கக் கூடியவர்கள்! இதை உணர்த்தவே கடிகாரத்தில் மூன்று முள்கள்!'

### குரங்கிற்கு சம்பளம் ரூ.5000!


டில்லியின் நிர்மாண் பவன் என்று அழைக்கப்படும் அமைச்சக வளாகத்தில் ஒரு குரங்குப் பட்டாளம் கோப்புகளைத் துவம்சம் செய்து, கண்ணாடிகளை உடைத்து, பெண்களை மிரட்டி காட்டு தர்பார் நடத்தி வந்தது. கையைப் பிசைந்த அதிகாரிகளுக்கு கை கொடுத்தவர் ஷ்யாம். இவரிடம் இருந்தது ராஜீ என்ற மரியாதையான பெயர் கொண்ட பெரிய குரங்கு! டில்லியின் நிர்மாண்பவனில் ஒழுங்கை நிலை நாட்டுவது இந்த குரங்கு தான். ராஜீவின் பூத உருவம் கண்டு சாதாரண குரங்குகள் மிரண்டு 2 மாதத்தில் பேட்டையைக் காலி செய்தன. இந்த சேவைக்கு ராஜீ, ஷ்யாமுக்கு மாதம் ரூ.5000 சம்பளம்.

### அதிக வயது!

லெபனான் நாட்டில் உள்ள கீவினை என்ற சிறிய கிராமத்தில் வாழ்கிற பெரியவர் அலி முகமது உசைன். அடுப்பு எரிக்க உதவும் கரிக்கட்டைகளை தயார் செய்து அனுப்பும் வேலையில் இருந்தவர். லெபனான் அரசின் அலுவலக ரீதியான சான்றிதழ்படி 1862 ஆம் ஆண்டு பிறந்தவர்.

இதற்கான சான்றிதழை ஆதாரமாக கொண்டு கின்னஸ் புத்தகமும் இவர் பெயரை பதிவு செய்ய முன்வந்துள்ளது. 135 வயதாகும் இவர், ஊன்றுகோலின் உதவியுடன் நடக்கிறார். ஆனால், இவருடைய பேச்சை புரிந்து கொள்வது கஷ்டமாக உள்ளது. பேசவும், பார்க்கவும் காது கொடுத்து கேட்கவும் இவருக்கு கஷ்டமாக உள்ளதாம். அலிமுகமது உசைன் தனது 85 வயதான இரண்டாவது மனைவியுடன் வாழ்கிறார்.

## துணுக்குகள்



நாஷிலஸ் எனப்படும் கடல் பிராணி இந்துமா சமுத்திரத்தில் வசிக்கிறது. இதன் ஓடு முப்பது அறைகளைக் கொண்டது. ஒவ்வொரு அறையிலும் இவ்வாயுக்களின் அளவை கூட்டி குறைப்பதன் மூலம் இதனால் நீரில் மிதக்கவும், நீந்தவும், மூழ்கவும் முடியும். ஆனால் இந்த நாஷிலஸ் ஒட்டின் வெளிப்புற அறையில் தான் வகிக்கும். இந்த அறை வானவில் போன்ற நிறத்தை உடைய 'நாக்ரி' எனப்படும் பொருளால் சுருள் சுருளாகவும் அழகாகவும் அலங்காரம் பண்ணப்பட்டிருக்கும்! அப்பா... எத்தனை கலையுணர்வு பாருங்க!

இந்து மகா சமுத்திரத்தில் இருக்கும் செஷெல்ஸ் என்ற தீவுக் கூட்டம் மொத்தம் 10 லட்சத்து, 35 ஆயிரத்து 995 ச.கி.மீ., பரப்பு கொண்டது. இது ஒரே தீவாக இல்லாமல் 90 குட்டி குட்டி தீவுகளாக அருகருகே பிரிந்துள்ளது. ஒரே ஒரு தீவின் பரப்பு எவ்வளவு தெரியுமா? 455 ச.கி.மீ., தான்!





நமது உடலில் சிறி தளவு தங்கம் உள்ளது. அதிலும் கால் விரல் நகங்களில் தங்கம் அதிகமாக உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

பரத்பூரில் உள்ள கலடியோ கானா பறவைகள் சரணாயலம் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில், மிகப்பெரிய பறவைகளின் சரணாலயமாக புகழ்பெற்று



விளங்கியது. ஆங்கிலேய பிரபுக்கள் இங்கு அடிக்கடி வந்து வேட்டை யாடுவர். 1938ம் ஆண்டு லிங்லித்கோ வைஸ்ராய் என்பவர் வேட்டையாடி நான்காயிரத்து இருநூற்று எழுபத்து மூன்று பறவைகளை கொன்றார்.

### 'கிரீன்விச்' நேரம்!

லண்டனுக்கு அருகில் 'கிரீன் விச்' என்ற சிற்றூர் இருக்கிறது. அந்த ஊரின் நேரமே உலக நேரமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. சூரியன் உதயமாவது ஜப்பானில். ஜப்பான் நேரத்தைத் தான் உலக நேரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், இங்கிலாந்து உலக வல்லரசாக விளங்கியதால், 'கிரீன் விச்' நேரம் திணிக்கப்பட்டது. 1884 முதல் கிரீன்விச் நேரம் பயன் பாட்டில் வந்துவிட்டது.

### பனிகட்டிக்கு அடியில் ஒரு பயணம்!

'தி நாட்டிலஸ்' என்ற அணுசக்தி நீர்மூழ்கி கப்பல் ஆர்டிக் பெருங் கடலில் பயணித்தது. பனிக்கட்டிக்கு அடியிலேயே பயணம் செய்து வடமுனையை அடைந்த முதல் கப்பல் இதுதான். சப்பல் சென்றடைந்த இடம் அமெரிக்கா; ஆண்டு 1958.

# பதமறு

எனது வீட்டுக்கு முன்னால்தான் அந்த வீடும் இருந்தது. தவறு... அதை வீடு என்பதைவிட "பங்களா" என்று சொல்வார்களே! அதுதான் அந்த வீட்டுக்கும் பொருந்தும். என்னென்ன நவீன வசதிகள் உண்டோ அத்தனையும் அந்த பங்களாவில் இருந்தன. எங்க பார்ப்பினும் ஆடம்பரத்தின் வெளிப்பாடு தாராள மாகவே காட்டப்பட்டிருந்தது. எனது அயல் பகுதி கிராமியத் தன்மை மிகுந்ததால், இவ்வாறான பெரிய வீடுகளைக் காணவே முடியாதிருந்தன. இதனால் அந்த பங்களா எனது அயலவர்களுக்கு "ஷாஜஹான் கட்டாத தாஜ்மஹால்" போன்று தென்பட்டதில் ஆச்சரியமில்லைதானே!?

எனக்குத் தெரிந்தவரை அந்த வீட்டில் பெற்றோருடன் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் உட்பட நான்குபேர் மாத்திரமே இருந்தனர். ஆனால், அவ்வீட்டின் அறைகளோ பதின்னான்கு அல்லது பதினைந்திற்கும் மேலிருக்கும்.

இவற்றையெல்லாம்விட அங்குள்ளவர்களின் பேச்சோ அயலவர்களுக்கு வயிற்றெரிச்சலையும், மனவேதனையையும் ஏற்படுத்தக்கூடியவாறே அமைந்திருந்தது. "கவிதா! கவனம்.. அந்தப் பளிங்குக் கோப்பையைக் கெட்டியாகப் பிடித்துக்



கொண்டு வா..."; "டே...ய்...ரமேஷ்! சாப்பாட்டை அந்த ஏ.சி. அறைக்குள்ளே ஏண்டா கொண்டு போறே..? அப்புறம் சாப்பாட்டு மணம் முழுக்க அறைக்குள்ளேதான் நிறைஞ்சிருக்கும்" அந்த வீட்டு அம்மாவின் இதுபோன்ற ஆராவாரம், தான் பேசுவது வெளியார்களுக்கும் கேட்கட்டும் என்பதைப் போல எண்ணத் தோன்றும். இது தினந்தோறும் நடைபெறும் ஒரு சமாச்சாரம்.

இது ஒரு புறமிருக்க சில நாட்களுக்கு முன்னால் பரபரப்பான செய்தியொன்று தொலைக்காட்சியிலே ஒளிபரப்பாவதைக் கேள்விப்பட்டு அதனைப் பார்க்கலாமென்ற ஆர்வத்தோடு அந்த வீட்டுக்குச் சென்றிருந்தேன். அப்போது, அவ்வீட்டின் எஜமானியம்மா "தம்பி...! கொஞ்சம் நில்லுப்பா...! வெளியில தண்ணி வெச்சிருக்கோம். அங்கபோய் கால அலம்பிக் கொண்டு வா... ஏனெண்டா இந்த சலவைக்கல் தரையில் அழுக்குப் பட்டுட்டா உடனே அந்த அழுக்கெல்லாம் வெளியில தெரிஞ்சிடும்..." என்றாரே பார்க்கலாம்! அவ்வளவுதான் "ஐயோ!! இது போதும்டா... சாமி...!!!" என நினைத்து வெளியில் வந்தவன்தான் இதுவரைக்கும் அந்த வீட்டுப் படியை மிதிக்கவேயில்லை. இப்படியாக அந்த வீட்டுக்குச் சென்ற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நிகழ்வுகள், எங்கள் அயலவர்களின் அனுபவத்தில்.

அன்று எனது அறையில் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருந்தேன். அப்போது எனது தங்கை யாருடனோ கதைக்கும் சப்தம் கேட்டதால் எழுந்து வெளியே எட்டிப்பார்த்தேன். "ஐயோ...! இவளா...? இன்று என்ன குண்டைத் தூக்கிப்போட வந்திருக்கிறாளோ..? அதிலும் என் தங்கைதானா இவளிடம் அகப்பட்டுக்கொண்டாள்?" என மனதிற்குள் சலித்துக்கொண்டேன். வந்திருந்தவள் பக்கத்து பங்களாவின் இளவரசி கவிதாவேதான். மேற்கொண்டு அங்கு என்ன நடக்கிறது? என்பதனை அவதானிக்கலானேன். அந்த கவிதா என்பவள் தான் கொண்டுவந்திருந்த ஒரு வர்ணப் பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்து ஒரு அழகான நெக்லஸை வெளியில் எடுத்தாள். இன்றைக்கு அவள் என் தங்கையின் தலையில் போடப்போகும் குண்டு இதுதான் என்பதை நான் உணர்ந்துகொண்டேன். எடுத்தவள் அதை எனது தங்கையிடம் காட்டி "இது எங்க அப்பா எனக்கு இண்டைக்கு வாங்கிக் கொண்டு வந்தது. நல்லாயிருக்கா...? இந்த மொடல் நேத்துத்தான் சந்தைக்கு வந்ததாம். உடனே அதை எனக்காக வாங்கிகிட்டு வந்திட்டார். எப்படி என் கழுத்துக்குக் கச்சிதமா இருக்குதா? இதைப்போல இன்னும் ரெண்டு எங்க வீட்டுல இருக்குது" எனக் கூறியவாறே தனது கழுத்தில் அந்த நெக்லஸை வைத்து எனது தங்கையைப் பார்க்கச் சொன்னாள். "ஏழைக்கேற்ற எள்ளுருண்டை" என்பதைப்போல் ஒரு மெல்லிய தங்கச் செயினை மட்டுமே அணிந்திருந்த எனது தங்கையின் கண்கள் முதலில் அகல விரிந்து பின்பு சோகத்தில் ஆழ்ந்த அந்த உணர்ச்சி மாற்றத்தினைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு அவளின் அண்ணனான நான் முட்டாள் அல்லவே! எனக்கு வந்த ஆத்திரத்திற்கு ...ம்...ஹ்....ம்... என்னதான் செய்வது? அதனால் எதுவுமே செய்ய முடியாத நிலையில் நானிருந்தேன்.

அன்றிரவு நன்றாக உறக்கத்தில் ஆழ்ந்திருந்தேன். திடீரென குழப்பம் நிறைந்ததொரு கனவு காண்பதைப் போன்றதொரு உணர்வு. எங்கும் கூக்குரலும், ஆரவாரமுமாக இருந்தது. என்ன நடக்கிறது? என்பதே புரியாத முறையில் அது அமைந்திருந்தது. அப்போது "அண்ணா...! அண்ணா.. எழும்புங்கள்... சீக்கிரமாய் எழும்புங்கள்..." என எனது தங்கை என்னை உலுக்கி உலுக்கி எழுப்பினாள். "என்னடா... இந்த வேளையில் என்னை எழுப்புகிறாள்?" என எரிச்சல் பட்டுக்கொண்டே கண்விழித்தபோதும், அந்தக் கூச்சலும், ஆரவாரமும் அடங்கின பாடில்லை. "அப்படியானால்...!? நான் கண்டது கனவல்ல; நிஜமேதான்" என எண்ணியவனாக, "எ..என்ன...என்ன நடந்தது?" எனக் கேட்கவே "அண்ணா! நமது கவிதா அக்காவின் வீடு இல்லையா..? அது தீப்பிடிச்சு எரியுது... எல்லோரும் தீயை அணைச்சிக்கிட்டு இருக்காங்க.. நீங்களும் போங்கண்ணா பாவம் அவங்க...!" அந்த நேரத்திலும் என் தங்கையின் நடவடிக்கையால் நான்பெருமிதம் கொள்ளவே செய்தேன்.

என் கண்களைக் கவ்வியிருந்த தூக்கம் தூரமாகவே உடனடியாகவே வெளியில் சென்று அங்கு தீயை அணைத்துக் கொண்டிருந்தவர்களுடன் சேர்ந்து கொண்டேன். நிச்சயமாக அது பெரிய தீ விபத்துத்தான். அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்குள் வீட்டின் முக்கால்வாசிப் பகுதியில் தீயின் கொடூரம் பரவிவிட்டிருந்தது. "அடப் பாவமே...! சில மணி நேரத்திற்கு முன்புதானே எனது தங்கையிடம் அவ்வீட்டுப் பெண் தனது புதிய நெக்லஸைக் காட்டிக்காட்டி சந்தோஷப்பட்டுக்கொண்டாள். அதற்குள் இப்படியொரு நிலையா? இதுதான் நிலையற்ற இவ்வுலகில் நிகழ்கின்ற நிலையான அனர்த்தம் போலும்..?" என எனக்குள் எண்ணி, அவர்களுக்காக வருந்தியவனாக தீயின் காரணத்தை அறியமுற்பட்டபோது, அது அவ்வீட்டில் காணப்பட்ட அளவுக்கதிகமான மின்சார இணைப்புக்களின் அழுத்தத்தினால் ஏற்பட்ட மின்னொழுக்குத்தானாம் இத்தீவிபத்துக்குக் காரணமாம். அவர்களுக்கோ மிகப்பெரும் சேதம் ஏற்பட்டுவிட்டது. காலைக் கழுவிக்கொண்டு உள்ளே செல்லவேண்டிய அந்த பங்களா இப்போது சாம்பலும் தூசும் நிறைந்து கிடக்க நாதியற்றுக் காணப்பட்டது.

தற்போதோ... பதின்னான்கு, பதினைந்து அறைகளுக்கு மேலே சுதந்திரமாய் வாசம் செய்துவந்த் அந்த குடும்ப அங்கத்தவர்கள் நால்வரும், எங்கள் வீட்டில், அவர்களுக்கென ஒழுங்குபடுத்திக் கொடுக்கப்பட்டிருந்த ஒரு சிறிய அறைக்குள் கஷ்டப்பட்டுச் சீவியம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.. அவர்களது சேதமான பங்களா திருத்தி முடிக்கப்படும்வரையில்...

**அமானுல்லாஹ் ஏ.மஜீத்-மருதமுனை-03**

# சொன்னால்தான் காதல் ஜெயிக்கும்



**பி.யேசுதாஸ்-களுதாவளை-03**

வரவேற்பறையில் கிடந்த ஒரு நாற்காலியில் வாயில் கை வைத்தபடி கவலை தோய்ந்த சிந்தனையுடன் வசந்த் அமர்ந்திருந்தான். அவனுக்கு பக்கத்தில் எதிரே இருந்த நாற்காலியில் வசந்தை கோபத்துடன் பார்த்துக்கொண்டிருந்தான் சிவா. இருவருக்கும் நடுவில் இருந்த சிறிய மேசையில் அந்த திருமண அழைப்பிதழ் கிடந்தது. வசந்தின் பார்வை முழுவதும் அந்த அழைப்பிதழ் மேலேயே படிந்திருந்தது. இப்போது சிவாவும் அந்த அழைப்பிதழையே பார்த்தான். சில விநாடி மௌனத்தின்பின் சிவா பேச ஆரம்பித்தான்.

"டேய் உன்கிட்ட நான் எத்தனை தடவை சொல்லியிருப்பன். போய் அவக்கிட்ட உன் காதலை சொல்லச்சொல்லி கேட்டியா? இப்பபாரு திருமண அழைப்பிதழ் அதில பெரிசா நிரோஜா அன்ட் சந்திரன் எண்ணு பேரு, குடும்பத்தோட வந்து ஆசீர்வாதம் பண்ணட்டாம் போய் ஆசீர்வாதம் பண்ணிட்டுவா!" இவ்வாறு சொன்னதும் வசந்த் சிவாவை பார்த்தான். "என்ன பார்க்கிற ஒரு பொண்ணுகிட்ட போய் தன்னோட காதல சொல்லிக்க வக்கில்ல பெரிசா ஒரு பார்வை மட்டும் வந்திடும்". என சிவா தன் ஆத்திரத்தை அடக்க முடியாமல் வசந்தை திட்டிக்கொண்டிருந்த சமயத்தில் வசந்தின் அம்மா கையில் இரு ரீ கப்போடு வந்தாள். "என்ன சிவா கோபமா பேசின மாதிரி கேட்டுது என்ன விஷயம்" என வினா தொடுத்தாள் அதில் லேசான புன்னகையும் படர்ந்திருந்தது. "அது ஒண்ணுமில்ல ஆன்ரி சும்மாதான்..." என சிவா இழுக்க ஆரம்பித்தான். "ஏதோ ஒண்ணு இருக்க என்கிட்ட மறைக்கிறீங்க" என வசந்தின் அம்மா சிரித்தபடி கூறிவிட்டு, "நீங்க இளசுகள் என்ன என்னத்த கதைக்கிறியளோ ம்ம்.. கதைங்க உங்கட விஷயத்தில ஏன்தான் நான் வீணா தலையை நுழைக்க" என்று ஒரு பெருமூச்சு விட்டபடி குசினி பக்கம் போனாள்.

எப்படியோ சமாளிச்சாச்சு என்ற நிம்மதியுடன் சிவா தொடர்ந்தான். "நீ ஏ/எல் படிக்கும்போது அவள காதலிக்க ஆரம்பிச்ச அப்ப அவகிட்ட நீ உன் காதல சொல்ல படிப்புல கவனத்த செலுத்தின ஓ.கே. ஆனா இப்போ ஒரு நல்ல வேலையில் இருக்க அட்லிஸ் இப்பவாவது சொல்லியிருக்கலாமில்ல. எல்லாத்தையும் கோட்டவிட்டுட்டு இப்ப இருந்து முழிக்கிறா இனிமேல் எங்களால என்ன பண்ண முடியும். அவனவன் ஜோடியா கையை கோர்த்துக்கிட்டு பீச், பார்க்ன்னு அலையிறானுங்க உனக்கு அவள்ட்ட 'நான் உன்ன காதலிக்கிறன்' அப்பிடின்னு சொல்ல பயம். நீ சொல்லல நானாவது போய் சொல்றன் எண்டா அதுக்கும் நீ விடல்ல ஏன் எண்டு கேட்டா 'சொன்னால் தானாடா காதல் மனசுக்குள்ளேயே அந்த உணர்வு ஏற்பட்டா அது கூட காதல்தான்டா' என்பாய் டேய் வசந்த் சொல்லாமலேயே மனசுக்குள்ள இருக்கிறது காதல்தான் அதை நான் ஒத்துக்கிறன் ஆனா அது ஜெயிக்கணும்னா சொல்லித் தாண்டா ஆகணும்." இப்படி தன் எண்ணத்தில் தோன்றியதெல்லாம் அப்படியே சிவா திட்டிதீர்த்தான்.

"இவ்வளவு நேரமா கத்திக்கிட்டு இருக்கன் உன் காதுல விழாத மாதிரி இருக்கேயடா உன்ன நினச்சா அழுறதா சிரிக்கிறதா எண்டே தெரியல்ல" என மனம் வெதும்பியபடி சொன்னான். இப்போது வசந்த் வாய் திறந்தான். "சிவா நான் அவள பார்க்கிறப்பெல்லாம் அவளும் என்ன ஒரு பார்வை பார்ப்பா அந்த பார்வை அவ என்ன காதலிக்கிறா என்றதற்கு அறிகுறியா இருந்திச்சுடா. இப்ப இந்த திருமண அழைப்பிதழ பார்த்தா அவள்ற சம்மதம் இல்லாம இந்த திருமணம் நடக்கப்போகுது போலடா அதுவும் கொழும்புல." என வசந்த் சந்தேதகத்துடன் சங்கடத்துடன் பேசினான்.

இதைக்கேட்ட சிவா 'இப்ப என்ன பண்ணப்போற' என கேள்வியொன்றை எடுத்துவிட்டான்.

"அவள எப்படியாவது ஒரு தடவ பார்க்கணும்டா. அப்ப எல்லா உண்மையும் தெரியும்டா ப்ளீஸ்டா ஏற்பாடு பண்ணுடா" என அழாத குறையாக வசந்த் கெஞ்சினான். சிவா சற்றுநேரம் சிந்தித்து விட்டு "சரி புறப்படு" என்றான் இப்பவேயா? ஓம் சீக்கிரம் கிளம்பு என்றான். இருவரும் புறப்பட்டார்கள்.

★★★

பிள்ளையார் ஆலயத்துக்கு முன்னால் இருக்கின்ற ஆலமரத்தடிக்கு இருவரும் வந்தார்கள். அங்கே தேவதை போல நிரோஜா நின்று கொண்டிருந்தாள். "வசந்த் போய் லவ் பண்ணுடா" என்றான் சிவா மிகுந்த சந்தோஷத்துடன். "சிவா நீ என்ன சொல்ற ஒண்ணும் புரியல்ல?" என குழம்பிப் போய் வசந்த் கேட்டான். எல்லாம் வெறும் நாடகம்தான் உன் காதல நிரோஜாக்கிட்ட உனக்கு தெரியாம சொன்னன் அப்பதான் அவளும் உன்ன காதலிக்கிற விஷயம் தெரிஞ்சிச்சு. உடனே நிரோஜாட அப்பாட ப்ரண்டோட மகள் நிரோஜாவுக்கு கொழும்புல நடக்கவிருக்கிற திருமணத்துக்கான அழைப்பிதழ் உன்கிட்ட காட்டினன். நீயும் நம்பிட்ட.. இந்த காதல் கதையில கிக் இருக்கணும்தானே அதான் இப்பிடி ஒருநாடகம் என" ஒரே மூச்சில் அனைத்தையும் சொல்லி முடித்தான்.

நிரோஜாவும் வசந்தும் சிவாவை நன்றி பெருக்குடன் பார்த்துவிட்டு காதல் வானில்பறக்க ஆரம்பித்தார்கள். ●

# வந்தது ஒரு அந்திரெக்ஸ்



**கஜமதி சண்முகராஜன்-கொழும்பு-03**

"என்னடா ராகுல் இப்படி வாற எல்லாத்தையும் தூக்கிப் போட்டுக் கொண்டிருந்தால்... என்ன அர்த்தம். அம்மா சொன்ன மாதிரி இனி உனக்கு மாபிளாலதான் சிலைசெய்து அனுப்ப வேணும்."

"பின்ன என்னடா சிவா... நான் எவ்வளவு கனவுகளோட வாழுறன் எண்டு உனக்குத் தெரியும்தானே என்னோட சாகும் வரைக்கும் வாழ்க்கையை ஓட்டுறவள்... இப்படி இருக்கவேணும் அப்படி இருக்கவேணும் என்று நினைக்கிறதிலை... என்ன தப்பிருக்கு... நீயே சொல்லுடா பாப்பம்."

"சரி... சரி நீ சொல்லுறதிலையும் நியாயம் இருக்குத்தான். ஆனா... அதுக்கு உங்க அம்மா என்னடா செய்வா... புறோக்கர்மார் குடுக்கிறதுதானே அவாவும் அனுப்பிவைக்கறா. எத்தின புறோக்கர் மாரிற்ற திரிஞ்சு, பேசி அனுப்பி வைக்கேக்க நீ இப்பிடி சுலபமா தூக்கி எறியிறாய். "நானா இருக்க வேணும் உங்க அம்மா படுற கஸ்ரத்தப் பார்த்தே ஓமண்டு சொல்லிப்போடுவன்." எனக்கூறிக்கொண்டு சிவா விரயவும்.. ஓம்... ஓம் இப்ப அப்படித்தான் சொல்லுவாய்... உனக்கும் இப்படி ஒரு நிலம வரேக்கதான் தெரியும்." என கூறியபடி ராகுல் தன் வேலையில் ஈடுபட்டான்.

ராகுலும், சிவாவும் இப்பொழுது லண்டனில்... ஒரு ரூமில் வசித்து வரும் ஒரு இணைபிரியா நண்பர்கள் என்று கூறலாம்.

ராகுலுக்கு திருமண வயது எட்டவும் தாய் கொழும்பிலிருந்து பல வரன்களை பேசி போட்டோ அனுப்பியிருந்தால்.. அதில் எதுவுமே ராகுலுக்கு பிடிப்பதாக இல்லை.

இவ்வாறு நாட்கள் வெகு வேகமாக நகரத் தொடங்கியது.

★★★

"என்ன மச்சான் கையில லெட்டரோட வாறாய்... அம்மாட்ட இருந்தா" என வினவினான் சிவா.

"ஓமடா சிவா. அம்மாதான்... எனக்கு அனுப்பியிருக்கிறா அடுத்த அந்ரெக்ஸ் கிருமிடா.." எனசிரித்துக்கொண்டு கவரைப் பிரிக்கத் தொடங்கினான் ராகுல். இதனை ஆவலோடு எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தான் சிவா.

"நான்.. நான் சொன்னன். இது அந்ரெக்ஸ் கிருமியில்லடா. இது அதவிட பெரிய கிருமிடா...

"பாப்பம் காட்டு என எட்டிப் பறித்தான் சிவர்..."

"இந்தா நீயே வைச்சுக்கோ... உக்குத்தான் நல்ல பொருத்தம்." என அவனுடைய கையில் திணித்துவிட்டு சென்றான் ராகுல்.

"என்னடா ராகுல் யோசிச்சுக்கொண்டு கிடக்கிறாய்... அந்த போட்டோ விஷயம்தான.. சரி.. சரி அதவிடுடா பொறுத்தவன் பூமியாள்வான். நீ ஒண்டுக்கும் யோசிக்காம படுத்து தூங்கு விடிய எல்லாத்தையும் பேசிப்பம்" எனக் கூறவும்.

சலிப்போடு.. "இல்லடா சிவா... எனக்கு கல்யாணமே வெறுத்துப்போச்சு... ஊர் உலகத்தில சொத்தி, சப்பாணிகளுக்கெல்லாம் நல்ல வடிவான பொம்பிளையல் வந்து இறங்குது... நமக்கு மட்டும் ஏனடா இப்படி...." உனக்கு தெரியும் தானே இவன் பரணிக்கு வந்த பொம்பிளய... அந்தக் குடிகார, பொம்பளயலோட சகவாசம் வைச்சிருக்கிற அவனுக்கே இந்த வடிவான பொம்பிள வந்திறங்கேக்க... எங்களுக்கு என்னடா குறைச்சல்".

"டேய் ராகுல்... உனக்கு ஒரு விஷயம் தெரியுமா... அந்தப் பரணியோட பொம்பிள சாதி குறைஞ்சவளாம்.. அதைவிட அதுகளின்ர குடும்பம் கஸ்ரப்பட்டதுகளாம். அதுகளும் பாவங்கள் கஸ்ரத்தின்ர நிமித்தம் அத கட்டி குடுத்திற்றினமாம் எண்டு அவையின்ர ஊர் பெடியன் என்ர பிரெண்ட்... அவன் சொல்லித்தான் எனக்கு இந்த விஷயம் தெரியும்..."

"இப்படி அம்மா அனுப்பிற பொம்பிளயல பாக்கேக்க அப்படி ஏண்ட கட்டிட்டாலும் பிரச்சன இல்லப் போல இருக்கிடா சிவா."

"உனக்கென்ன பைத்தியமா பிடிச்சுப் போயிருக்கு நீ அப்படி ஒண்ட கட்டிட்டா உன்ன யாரடா மதிப்பாங்கள்.. உன்ர உறவுகள் உன்ன அண்டுமா... ஏன்டா இப்படி வடிவு.. வடிவு என்று சாகிறாய்..."

"இல்லடா சிவா நான் சும்மா ஒரு பேச்சுக்கு சொன்னன். அப்படி செய்திற்று என்ர அம்மான்ர முகத்தில நான் முழிக்கேலுமா?.."

"சரிடா ராகுல் விடிய அம்மாவோட கதைப்பம் இப்ப நித்திரைக்கொள்..."

★★★

டிறிங்.. டிறிங்...ஹலோ...

"அம்மா நான் ராகுல் லண்டனில இருந்து பேசிறன் அம்மா..."

"ஆ சொல்லு ராசா... எப்படி சுகமே... அது சரியப்பன் நான் உனக்கு பொம்பிள ஒண்டு பேசி போட்டோ அனுப்பினனான் கிடைச்சதாப்பன்..."

"ஓம் அம்மா... நேற்றுதான் கிடைச்சது... எனக்கு... பெரிசா பொம்பிளய பிடிக்கேல்லம்மா..."

"என்னப்பன் உன்னால என்னோட புறோக்கர்மார் கதைக்கறாங்கள் இல்ல. வேற ஏதாவது இருந்தா தாங்க எண்டு கேட்டா... உங்க பிள்ளைக்கு ஒண்ணும் பேசேலாது நீங்க வேற யாரையும் பாருங்க என்றாங்கள். நான் என்னப்பன் செய்ய."

"அம்மா... நீங்கள் புறோக்கர்மார விட்டுட்டு தெரிஞ்ச, சொந்தங்களுக்கு பாருங்கம்மா..."

"ஆ... உனக்கு தெரியுமா இவள்.. வாணிய உன்ன விட ஒரு வயசுதான் குறைவு..."

"ஓம்... அம்மா... நல்ல வடிவானபெட்ட, கொஞ்சம் வாயாடிதான்... ஆனா நல்லவள்."

"ஓமடா தம்பி. அவையிட தாய், தகப்பன் என்னட்டா ஒருக்கா கேட்டதுகள் நான் தம்பியோட கதைச்சுப்போட்டு சொல்றன் எண்டனான். உனக்கு சம்மதம் எண்டால் சொல்லு..."

சரி அம்மா அதையே பேசுங்கோ.. எண்டாலும் அப்ப பார்த்தது... ஒருக்கா போட்டோ வேண்டி அனுப்பிவிடுங்கோவன்..

"இப்பவும் அப்படியேதான் இருக்கிறான். என்னத்திற்கும் நான் வேண்டி அனுப்பிவிடுறன். ஆனா நீ எனக்கு நல்ல முடிவாச் சொல்லவேணும்."

"சரியம்மா எனக்கு வேலைக்கு நேரமாச்சு நான் போட்டோ கிடைச்சோன எடுக்கிறன்." என கூறிவிட்டு போனை துண்டித்தான் ராகுல்.

●●●

"சிவா அம்மா அனுப்பின போட்டோ இண்டைக்கு வந்தாலும் வரும் அவள் வடிவோ வடிவில்லையோ? நான் அதைத்தான் செய்யப்போறன்டா... அதனால ... இந்த சந்தோஷமான விஷயத்த நீதான் அம்மாட்ட சொல்லவேணும்..."

"ஏன்டாராகுல் அத உன்ரவாயால சொன்னா அம்மா சந்தோஷப்படுவா.. அதனால நீயே சொல்லிடு."

"இல்லடா சிவா எனக்கு அம்மாட்ட சொல்ல ஒரு மாதிரி கூச்சமா இருக்கு... நீதான் அம்மாவுக்கு சப்போட் பண்ணி பேசிறனி... அதனால நீயே சொல்லிடு நான் போட்டோ வந்திருக்கா எண்டு பார்த்திற்று வாறன்..."

போனவன் கையில் காகிதத்தோடு வந்தான்....

"என்ன ராகுல் உன்ர கனவுதேவதையோ..."

"ஓம்போல இருக்குடா அம்மாதான் அனுப்பியிருக்கிறா..." என கவரைப் பிரித்தான் ராகுல். இதை ஆவலோடு பார்த்துக்கொண்டிருந்தான் சிவா.

கவரைப் பிரித்த மறுகணத்தில் சுருண்டு விழுந்தான் ராகுல்?

★★★

"ராகுல் அந்திரெக்ஸ் கிருமியினால் தாக்கப்பட்டுள்ளான்" என அந்த சிறு துண்டோடு தந்தியடிக்க, விரைந்து கொண்டிருந்தான் சிவா...

# கண்ணாமூச்சி ரே... ரே... 2

பட்டுக்கோட்டை பிரபாகர்

சங்கரதாஸ் காரோட்டிக் கொண்டிருந்தான்.

கறுப்பு, வெள்ளை சட்டை, கறுப்பு பேண்ட். பேண்ட் பாக்கெட்டில் பவுடர் டப்பா மாதிரி ஒல்லியான டின் கண்ட்டைனரில் தீரத் தீர விஸ்கி வலது கை ஸ்டியரிங்கில். இடது கை பக்கத்து சீட்டில் சாய்ந்திருந்த அவள் தொடையில்.

"என்ன சொன்னா தாஸ்?"

கேள்வி பிறந்தது பின் சீட்டிலிருந்து, உதிர்த்தவன் உண்மையான விஸ்வாசி மற்றும் விஸ்கிவாசியான தோஸ்த் சுதிர்.

"மறுத்துட்டா சுதிர்."

அவள் ஒரு வளர்ப்பு பிராணி மாதிரி உட்கார்ந்திருந்தாள்- சம்பாஷனையோடு சம்பந்தப்பட்டுக் கொள்ளாமல். கார் ஜன்னல் வழியாய் பராக்கு பார்த்துக் கொண்டிருந்தாள்.

"வாட் எ இன்சல்ட!" என்றான் சுதிர். அதாவது இங்கிலீஷில் சுதி ஏற்றினான்.

பழி வாங்கணும் சுதிர்."

"என்ன விலையானாலும் வாங்கிடலாம் தாஸ். ம்ன்னு ஒரு வார்த்தை சொல்லு. நாளைய பேப்பர்ல நடிகை மதுலதா மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்ன்னு வர்ற மாதிரி நான் பார்த்துக்கறேன்."

"மரணம்ங்கிறது ஒரே நிமிஷ அவஸ்தைடா. அப்புறம் வலி இல்லை. தொல்லை இல்லை. கவலை இல்லை. நிம்மதியான உறக்கம். அது பத்தாது அவளுக்கு. சங்கரதாஸ் யாருன்னு காட்டணும்."

"காட்டிடலாம். என்ன செய்யணும்னு சொல்லு. செஞ்சிடுவோம். மூஞ்சி மேல பிளேடு வச்சி இப்படி, அப்படி நாலு கோடு போடச் சொல்லுவமா? காலம் பூரா கண்ணாடி பார்க்கிறப்பல்லாம் அழுவட்டும். எப்படி யோசனை?"

"அது கூட பத்தாது."

"பின்னே உன் ஐடியாதான் என்ன?"

"சொல்றேன்."

கார் வாட்ச்மேன் சல்யூட் அடித்து கேட் திறந்த பின், அந்த பங்களாவின் உள் பாதையில் ஓடி மறுமுனையில் நின்றது.

இறங்கி மூவரும் உள்ளே வர...

"அப்பா போன் செஞ்சார் தம்பி. நீங்க வந்ததும் பேசச் சொன்னாங்க."

"சரி. மூணு ஆப்பிள் ஜூஸ் போட்டு மேல எடுத்துட்டு வா."

மேலே சொர்க்கம் அமைக்கப்பட்டிருந்தது.

சுதிர் சிகரெட் கொளுத்திக் கொண்டு அவளுக்கு நீட்ட..

அவள், "வேணாம். சீக்கிரம், ப்ளீஸ். எனக்கு பத்து மணிக்கு டான்ஸ் இருக்கு" என்றாள்.

"ஒன் மினிட்" என்று சங்கரதாஸ் படுக்கையில் புரண்டு டெலிபோன் எடுத்து, எண்கள் ஒற்றி ஸாட்டிலைட் உபயத்தில் சிங்கப்பூரிலிருக்கும் அப்பாவை, "அப்பா!" என்றான். "என்னப்பா? கூப்டிங்களாமே.."

"சும்மாத்தான் கூப்ட்டேன். ஒண்ணும் விசேஷமில்லையே?"

> "ஏன்யா தயங்கறே? நீயும் கண்ட கண்ராவி போட்டோ எல்லாம் எடுத்து சம்பாரிக்க வேண்டிய அவசியமில்லை. கௌரவமா இருக்கலாம். ஆயிரம் ரூபா உனக்கு மாசம். என்ன சொல்றே?"

"இல்லைப்பா."

"ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ் வாங்கிட சொன்னேனே தாஸ்?"

"மானேஜர் பேசிக்கிட்டிருக்கார்ப்பா."

"எப்ப கல்யாணம் பண்ணிக்கிறே?"

"இதோ இப்பக்கூட."

"நாட்டி. உடம்பை கெடுத்துக்காதே. நீயே முடிவு பண்ணி சொன்னாலும் சரி, என்கிட்டே பொறுப்பைக் கொடுத்தாலும் சரி, கல்யாணம் அவசியம் தாஸ்."

சங்கரதாஸ் ரிசீவரை பொத்திக் கொண்டு, "ஏண்டா சுதிர், கல்யாணம் பண்ணிக்கணுமாமே... அவசியமா?" என்றுவிட்டு பிறகு அப்பாவிடம், "யோசனை செய்றேன்ப்பா.." என்று வைத்துவிட்டு..

மூன்று பேரும் ஆப்பிள் ஜூஸ் குடித்ததும்...

"வர்றேன் தாஸ்" என்று சுதிர் போனதும்...

சங்கரதாஸ் கைகளைத் தட்டி, "ம். இப்ப ஆடு" என்று ரெக்கார்ட் ப்ளேயரில் இசைத் தட்டைப் போட்டதும்...

அவள் ஆட ஆரம்பித்தாள்-சிரித்துக் கொண்டே, தன்னைப் பிரித்துக் கொண்டே.

★★★

சூட்கேசை எடுத்துக் கொண்டு ஆட்டோவை விட்டு இறங்கி ஹோட்டலின் உள்ளே நடந்தான் சேது.

"என்ன சார், சிங்கிள் ரூமா?"

"ஆமாம்."

சாவி பெற்றுக் கொண்டு அருகே இருந்த போனில்..

"ஹலோ சேது பேசறேன். அதே ஹோட்டல். ரூம் நம்பர்" சாவி வளையத்தில் இருந்த உலோக பட்டையில் பார்த்துக் கொண்டு, "செவன் நாட் செவன். கொஞ்சம் சீக்கிரம் வந்துடு" என்றான்.

லிஃப்ட் உபயோகித்து ஏழாவது மாடி வந்தான்.

அறையைத் திறந்து தண்ணீர் குடித்துவிட்டு சூட்கேசைத் திறந்தான். ஃபோல்டிங் ஸ்டாண்ட் எடுத்து விரித்து, பொருத்தி தரையில் நிறுத்திவிட்டு கேமிரா எடுத்து அதன்மேல் பொருத்தினான். ப்ளக்கில் வயர் செருகி ஃப்ளாஷில் சார்ஜ் ஏற்றிக் கொண்டான். காத்திருந்தான்.

முப்பது நிமிடங்கள் கழித்து கதவு தட்டப்பட்டு, திறக்கப்பட்டதும் முதலில் மல்லிகை வாடையும் அப்புறம் அவளும் உள்ளே வர...

கதவைச் சாத்தினான்.

"சீக்கிரம். கழுவி, பிரிண்ட் போட்டு சாயங்காலம் நான் கொடுத்தாகணும்."

"என்ன நீ இன்னைக்கு இவ்வளவு அவசரப் படுத்தறே? எனக்கும்தான் வேலையிருக்கு. ஆர்ட்ஸ் காலேஜ் போகணும்."

"படிக்கிறியா மாலா?"

" படிச்சிக் கிழிச்சேன். படம் வரையறதுக்கு மாடலா நிக்கிறதுக்கு!" என்றவள் சுறுசுறுப்பாக சேலையை அவிழ்த்து நாற்காலியில் போட்டு, ஜாக்கெட்டைக் கழற்றி, கழற்றி, கழற்றி... "ம். என் போசு?" என்றாள்.

சேது வெளிநாட்டு புத்தகம் புரட்டி அதில் வெள்ளைக்காரி இருந்த கஷ்ட கோணத்தில் இந்த கறுப்புக்காரியை அமைத்து... க்ளிக்!

ஏழெட்டு போஸ்களில் எடுத்துக் கொண்டான்.

"அவ்வளவுதான் மாலா. ட்ரெஸ் போட்டுக்க."

"நூறு ரூபா சேத்துக் கொடு சேது, செலவு இருக்கு" என்றாள் நிதானமாக ஒவ்வொன்றாய் உடுத்திக் கொண்டே.

"உன் பணத்தைக் கொடுக்கறதுக்கே கடன் வாங்கிட்டு வந்தேன் நான்."

"என்னாச்சி ஸ்டுடியோ வைக்கப் போறேன்னு சொன்னே?"

"வைக்கணும்."

சேது எல்லாவற்றையும் சூட்கேசிற்குள் எடுத்து வைத்தான். முதலில் பணம் கொடுத்து அவளை அனுப்பினான். பிறகு இவன் அறையைக் காலி செய்துவிட்டுப் புறப்பட்டு தனக்குப் பரிச்சயமான அசோக் ஸ்டுடியோ வந்தான்.



"வாய்யா சேது. உக்காரு. உன்னைப் பத்தித்தான் பேசிட்டிருந்தோம்."

"என்னைப் பத்தியா? என்ன?"

"பேப்பர்ல விளம்பரம் வந்திருக்கே கவனிச்சியா? தி.நகர் லட்சுமி ஸ்டுடியோ விற்பனைக்கு வருதுப்பா."

"அதான் அஞ்சி வருஷமா பூட்டியே கிடக்குதே."

"விவரம் என்னன்னா ரெண்டு பேரு பார்ட்னரா சேர்ந்து ஸ்டுடியோ வச்சானுங்க. ரெண்டு பேருக்குமே தொழில் தெரியும். ஒருத்தனுக்கு திடீர்னு துபாய்ல வேலை கிடைச்சது. இன்னொருத்தனை கவனிச்சுக்க சொல்லிட்டு அவன் துபாய் போய்ட்டான். இவன் டைஃபாய்டு வந்து படுத்தான். ஒரேயடியா போய்ட்டான். ஸ்டுடியோ பூட்டியாச்சி. செத்தவன் பங்கு பணத்தை அவன் குடும்பத்துல கொடுத்துட்டு இவன் துபாய்லயே இருந்தான்-கொஞ்சம் வருஷம் கழிச்சி இந்தியா வந்து நாமே நல்ல முதல் போட்டு சிறப்பா நடத்தலாம்னு. இப்ப காசு கொஞ்சம் மிதப்பா சேர்ந்து போச்சி. கலர் லேப் ஆரம்பிக்கிறானாம் பெரிய திட்டத்தில. அதனால இதைக் கொடுத்துடறானாம்."

"இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"பார்ட்டி இந்தியா திரும்பியாச்சுப்பா. இப்பதான் போன்ல பேசினேன். ரேட்டு கூட ஒரு மாதிரி பேசினேன். உன்னை அங்கே போட்டு ஒரு பிராஞ்ச் மாதிரி ஆரம்பிச்சிடலாம்னு நினைக்கிறேன். என்னய்யா சொல்றே சேது?"

"நல்ல யோசனைதான்."

"ஏன்யா தயங்கறே? நீயும் கண்ட கண்ராவி போட்டோ எல்லாம் எடுத்து சம்பாரிக்க வேண்டிய அவசியமில்லை. கௌரவமா இருக்கலாம். ஆயிரம் ரூபா உனக்கு மாசம். என்ன சொல்றே?"

சேது உடனே சம்மதம் என்று தலையசைத்தான்.

"குட்வில், அட்வான்ஸ், வாடகை இதெல்லாம் பேசிட்டேன். ஸ்டுடியோல இருக்கிற சாமான்களுக்கு இருபதாயிரம் சொல்றான். அவ்வளவு மதிப்பு இருக்கான்னு நீ ஒரு பார்வை பார்த்துவிட்டு வந்துடேன்."

அன்றிலிருந்து ஏழாவது நாள் லட்சுமி ஸ்டுடியோவின் பெயர் பலகை கழற்றப்பட்டு 'அசோக் ஸ்டுடியோ' மாட்டப்பட்டது.

*(கண்ணாமூச்சி தொடரும்)*

# இந்திய அணியினரின் தென்னாபிரிக்க சரசங்கள்



கும்ப்ளே

இந்திய கிரிக்கெட் வீரர்கள் பெண்கள் சமாச்சாரங்கள் தொடர்பான சர்ச்சைகளில் அடிக்கடி சிக்கிக் கொள்வது வழக்கமான விடயமாகிவிட்டது. அண்மையில் தென்னாபிரிக்காவுக்கு மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போது கிரிக்கெட்டை விடவும் வேறு விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டியதால்தான் இந்திய அணி போட்டிகளை கோட்டைவிட்டது என்று புதிய சர்ச்சை ஒன்று கிளப்பப்பட்டுள்ளது.

இந்த விஷயத்தில் முதலில் அடி கோலியவர் அனில் கும்ப்ளேதான். அவர் 2 வருடங்களுக்கு முன்பு தோள்பட்டை வலி காரணமாக கேப்டவுனில் உள்ள டாக்டர் பெர்கிஷனை சந்திக்க சென்றார். அங்கேதான் அவருக்கு காதல் வலி வந்தது. பெர்கிஷனுக்கு உதவியாளராக இருந்த டாக்டர் ஜெனிபர் மீது கும்ப்ளேயின் பார்வை பதிந்தது. இரு தரப்பிலும் காதல் பற்றிக் கொண்டது. பல இடங்களில் சுற்றி, ரொம்பவே நெருக்கமாகி விட்டார்கள்.



ஜெனிபர்

"நானும் அனிலும் கிட்டத்தட்ட கணவன் மனைவி மாதிரி. ஆனால், முறைப்படி திருமணம் செய்து கொள்ளவில்லை. இங்கே அதெல்லாம் அவசியமுமில்லை. உங்க ஊரில்தான் இந்த மாதிரி வெட்டிச் சடங்கெல்லாம் இருக்கும்" என சிரித்தபடியே ஒரு வெட்டு வெட்டிய ஜெனிபர், "நாங்க நண்பர்களாகத்தான் முதலில் பழகினோம். அப்புறம் அது கட்டில்வரை வந்துவிட்டது. பணத்திற்காக ஏற்பட்ட பழக்கமில்லை இது. அவர் பாப்புலர் கிரிக்கெட்டர். எனக்கு கிரிக்கெட் பிடிக்கும் ஜஸ்ட் லைக்தட், என்னை அவரிடம் வழங்கினேன். 100 ரூபா கடன் வழங்கியது போன்று என்னை வழங்கினேன் என்று சர்வசாதாரணமாக கூறுகிறார் ஜெனிபர்.



லான்சி

அனில் கும்ப்ளேவுக்கு ஏற்கனவே திருமணம் நடந்திருக்கும் விஷயத்தை ஜெனிபரிடம் சொன்னபோது, "ம்.. தெரியுமே! அதைப் பற்றி நான் கவலைப்படலை. நானும் அனிலும் திருமணம் செய்தால்தானே இது பற்றியெல்லாம் யோசிக்கணும். அதனால், நாங்க இரண்டு பேரும் எப்போதும் போல் பழகுறோம். இந்த டூரின்போதும் 4 முறை கும்ப்ளே இங்கு வந்தார். ஜாலியாக இருந்துவிட்டுப் போனார்" என்றார் ஜெனிபர். இது பற்றி கும்ப்ளேவிடம் நாம் கேட்டபோது, அவரது முகம் வெளிறிவிட்டது."இது... இது... உங்களுக்கு எப்படி தெரியும்?" "அதுதான் முதலில், "இல்லை" என மறுத்தவரிடம், கேப்டவுன் மருத்துவமனையிலிருந்து வீடு வரை நீடித்த உறவு பற்றி எடுத்துச் சொன்னதும், மெல்ல வாய் திறந்தார்.

"மற்றவங்க சொல்ற மாதிரி இல்லை. நாங்க நல்ல நண்பர்கள். நான் 99-ல் இங்கு வந்து ஆபரேஷன் செய்துகொண்டபோது ஜெனிபர் என்னை ரொம்ப கவனிச்சாங்க. அன்பா, பாசமா இருந்தாங்க. எனக்கு அப்ப அது தேவைப்பட்டது. அவ்வளவுதான். நான் வரம்பு மீறலை" என்று கம்பிய குரலில் சொன்னார் கும்ப்ளே மேலும், "என் அன்பான மனைவி ஜெயந்தி பெங்களூரில் இருக்கா. நான் ஜெயந்திக்கு துரோகம் செய்ய மாட்டேன்" என்ற கும்ப்ளேவின் கண்கள் கலங்கியிருந்தன.

ஜெயந்திக்கு கும்ப்ளேவை விட 6 வயது அதிகம். ஏற்கனவே, அஜித்குமார் என்ற தொழிலதிபரை மணந்து இரண்டு குழந்தைகளுக்குத் தாயானவர். அஜித்குமாரை விவாகரத்து செய்துவிட்டு கும்ப்ளேவை மணந்தார் ஜெயந்தி.

தென்னாபிரிக்காவில் காதல் வலையில் சிக்கிய மற்றொரு வீரர், சுழல்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங். 'பாஜூ' என செல்லமாக அழைக்கப்படும் ஹர்பஜனின் மனதை திருடிய தென்னாப்பிரிக்கப் பெண்ணின் பெயர் லான்சி. ஒரு பத்திரிகையின் விளையாட்டு நிருபராக உள்ள லான்சியுடன் மணிக்கணக்கில் விளையாடும் ஹர்பஜன் சிங்கிற்கு முழுமையான ஆங்கிலத்தில் பேச வராது. இந்தி கலந்துதான் பேசுவார். அமெரிக்ககாரர் ஒருவர் குதப்பி குதப்பி தமிழ் பேசினால் அதன் இனிமையை நாம் ரசிப்போமே, அதைப் போல் பாஜூவின் ஆங்கிலம், லான்சியை கவர்ந்து விட்டது. பந்தை சுழற்றாமலேயே லான்சி என்ற விக்கெட்டை வீழ்த்திய பாஜூ, அந்தப் பெண்ணை தினமும் சந்திப்பதை வாடிக்கையாக வைத்துள்ளார். ஆரம்பத்தில், ஒரு விளையாட்டு வீரருக்கும் நிருபருக்கு மிடையிலான வழக்கமான சந்திப்பு என்றுதான் கருதப்பட்டது.கோச் ஜான் ரைட்டும், அணித் தலைவர் கங்குலியும் பாஜூவை கூப்பிட்டு எச்சரித்த பின்தான் இருவருக்கு மிடையே காதல் ஆழமாக வேர் விட்டிருப்பதை அறிய முடிந்தது.

மற்ற வீரர்களும் இதைப்போல் புதுத் துணைகளுடன் டர்பன், கேப்டவுன், ஜோகன்னஸ்பர்க், கிழக்கு லண்டன் என பல நகரங்களிலும் சிறகடித்துக்கொண்டிருக்கும் வேளையில் மேலும் ஒரு அதிர்ச்சித் தகவல், கிழக்கு லண்டன் கடற்கரையில், ஒரு தனிமையான பிரதேசத்தில், இந்திய வீரர்கள் பலர் உடலில் ஒட்டுத் துணியில்லாமல் ஜாலியாக குளித்த காட்சி, ரொம்பவும் காஸ்ட்லியான கமெராவால் ரகசியமாக படம் பிடிக்கப்பட்டிருக்கிறது என்பது தான் அந்த தகவல்.

"களியாட்டங்களில் நமது வீரர்கள் கவனம்செலுத்துவதால் போட்டிகளில் கோட்டை விட்டு விடுகிறார்கள். டெஸ்ட் போட்டிக்கு முந்தைய தினங்களில் தென்னாபிரிக்க வீரர்கள் நாள் முழுவதும் நெட் பிராக்டீஸ் செய்தனர். இந்திய வீரர்களே மழையை காரணம் காட்டி பிராக்டீஸ் செய்யவில்லை. மழை பெய்தது உண்மைதான். ஆனால் தென்னாப்பிரிக்காவில் மழையால் பாதிப்படையாத இண்டோர் ஸ்டேடியங்கள் இருக்கின்றன. அங்கே பயிற்சி எடுத்திருக்கலாம். ஆனால், நமது வீரர்கள் அந்தப் பக்கம் தலைகாட்டவேயில்லை. தென்னாபிரிக்க வீரர்கள்தான் கடும் பயிற்சி செய்தார்கள்." என்கிறார் விளையாட்டு நிருபர் கௌசிக்.

# வயாக்ராவை வெல்லப்போகும் மற்றொரு மன்மத மருந்து யுப்ரிமா

செக்ஸ் மருத்துவ உலகின் அதி அற்புத கண்டுபிடிப்பாக சந்தைக்கு வரப் போகிறது யுப்ரிமா.

அது என்ன யுப்ரிமா? இதுவும் ஒரு வயாக்ரா சமாச்சாரம்தான். ஆனால் வாய்கராவை விடவும் பவர் அதிகம். யுப்ரிமாவால் உடம்பில் என்னென்ன விளையாட்டுகள் நடக்கப்போகின்றன என்பதை பார்ப்பதற்கு முன் அதன் ஜனன வரலாற்றைப் பார்க்கலாம்.

சீனாவில் கைதிகளுக்கு மருத்துவ ரீதியாக சித்ரவதை தர. ஒரு மருந்தை பயன்படுத்தினார்கள். அது செலுத்தப்பட்ட கைதிகளுக்கு குமட்டல் வரும். கொட்டாவி கொட்டாவியாய் வரும். தலைப்பாரம் இருக்கும். இப்படி உடம்புரீதியாக இந்த மருந்து அவஸ்தை தருவதால் இதை கண்டாலே அலறும் கைதிகள் "உண்மையை சொல்லிடுறேன் என இறங்கி வந்துவிடுவார்கள். அதே நேரத்தில் சிறையில் செக்ஸ் தொடர்பான குற்றங்கள் அதிகம் நிகழ குழம்பிப் போன சிறைத்துறை மருத்துவர்களை ஆலோசித்தது.

போலீஸ் கையில் சித்ரவதை ஆயுதமாய் இருந்த இந்த மருந்துதான் கைதிகள் சிலருக்கு பாலியல் உணர்வை ஏற்படுத்துவதை கண்டார்கள் மருத்துவர்கள்.

விடுவார்களா? அந்த மருந்தை மேலும் பரிசோதித்து, அதி அற்புத செக்ஸ் மேஜிக் மெடிசனாய் மாற்றிவிட்டார்கள்.

அமோமார்ஃபின் ஹைடிரோகுளோரைட் என்கிற இந்த மன்மத மருந்துக்கு 'யுப்ரிமா' என பெயர் சூட்டு நடத்தி விரைவில் சந்தைக்கு கொண்டு வருகிறது. அமெரிக்காவின் 'TAP'பார்மா சூட்டிக்கல்ஸ் கம்பெனி. இந்த மருந்தை 80 ஆயிரம் தடவை பரிசோதித்திருக்கிறார்கள். 3500 கொடுத்து வைத்த புண்ணியவான்கள் யுப்ரி மாவை எடுத்துக்கொண்டு கட்டில் களத்தில் ஜமாய்த்திருக்கிறார்கள். இதயநோயாளிகள், ரத்தக்கொதிப்புக்காரர்கள், சர்க்கரை நோயாளிகள், ஆண்மை சக்தியே அவுட்டானவர்கள் என பலருக்கும் கொடுத்ததில் எல்லோருமே யுப்ரிமாவுக்கு 'ஜே' போட்டிருக்கிறார்கள்.

இந்த யுப்ரிமாவில் எந்த பாதிப்புமே இல்லையா? என்றால்... இதிலும் சின்ன, சின்ன பாதிப்புகள் உண்டு என்பதே ஆராய்ச்சி சொல்லும் உண்மை. யுப்ரிமா மாத்திரைகளை விழுங்கக்கூடாது. நாக்கின் அடியில் வைத்துக்கொண்டால் 7-ல் இருந்து 10 நிமிடத்திற்குள் அதுவாகவே கரைந்துவிடும்.

கரைந்ததிலிருந்து 25 நிமிடத்திற்குள் ஆண்கள் அதற்குத் தயாராகி விடுவார்கள்.

இந்த மாத்திரையை பரிசோதித்தபோது 7.9% பேருக்கு கொட்டாவி கொட்டாவியாய் வந்தது.

5% பேர் "ஸ்... அப்பாடா... என்ன இப்படி திடீர்னு வேர்க்குது" என அதி வியர்வையில் நனைந்தார்கள்.

"என்ன சார்... லேசா தலை சுத்ற மாதிரி இருக்கு" என சொன்னவர்கள் 8.5% நபர்கள். 16% பேர்கள் குமட்டுவதாய்ச் சொன்னார்கள்.

# எஸ்.டி.எஸ். தொடர் 76

# செழியன் ஜெ. பேரின்ப நாயகம்

## இரா. பத்மநாதன்

நன்கு பண்படுத்தப்பட்ட பூமியிலே விதைக்கப்பட்ட ஒரு சிறந்த விதை செடியாக வளர்ந்து மரமாக உருவெடுத்து நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நல்ல விருட்சமாக பயன்பட ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்ற வேளையிலே வெட்டி வீழ்த்தப்பட்ட மரத்தைப் போல்தான் செழியன் பேரின்ப நாயகம் அவர்களின் வாழ்வும் தறித்து முறித்தெறியப்பட்டது.

மட்டக்களப்பு மாநிலத்தின் படுவான்கரையில் அமைந்துள்ள திருமுருகப் பெருமான் உறையும் மண்டூர்த் திருப்பதியில் பிறந்தவர் செழியன் அவர்கள். பண்டைச் சிறப்பு வாய்ந்த இக்கிராமத்தில் தான் பேரறிஞர்களான புலவர் மணி ஏ.பெரியதம்பிப்பிள்ளை, மகாவித்துவான் வி.சி.கந்தையா போன்றவர்களும் தோன்றி தமிழுக்கும், சைவத்துக்கும் பெரும் தொண்டாற்றினார்கள். இதே மண்டூர்ப் பகுதியில் 1936ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19ம் திகதியன்று செழியன் பேரின்ப நாயகம் அவர்கள் தோன்றினார்கள். இளமைக் கல்வியை பிறந்த மண்ணிலேயே முடித்துவிட்டு அவருடைய தந்தை யார் பணிபுரிந்த மலையகத்தில் கல்வியைத் தொடர்ந்தார். 50ம் ஆண்டுகளில் மட்டக்களப்புக்குத் திரும்பிய அவர் மத்திய கல்லூரியில் இணைந்து கல்வி கற்கலானார்.

இந்தக் காலத்தில் தான் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி வேரூன்றி வளர ஆரம்பித்தது. இக்கால கட்டத்தில் பெரும்பாலான மாணவர்களும் கட்சிப் பணியில் ஈடுபடமுன் வந்தார்கள். குறிப்பாக திரு.இராசதுரை அவர்களின் ஆளமான தமிழ்ப் பேச்சுக்களால் கவரப்பட்ட இளைஞர்களே கட்சிப் பணிகளில் ஈடுபடலாயினர். தமிழரசுக் கட்சி வாலிப முன்னணி என்ற சீர் அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக காலஞ்சென்ற சாம் தம்பிமுத்து அவர்களே செயற்பட்டார். கவிஞர் காசி ஆனந்தன் அவர்களும் இந்த அமைப்பில் ஓர் உறுப்பினரானார்.

மலையகத்தில் பண்டாரவளையில் புனித சூசையப்பர் கல்லூரியில் கல்வி கற்கும் காலத்தில் அங்கு தமிழ் இலக்கிய மன்றமொன்றை ஆரம்பித்து சிறந்து பணி புரிந்தார். இதன் அடிப்படையில் பெற்ற அனுபவத்தைக் கொண்டு தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் முன்நின்று பணிபுரிய தனது அனுபவங்களை பயன்படுத்தினார். அழகான தமிழ்ப்பேச்சிலும், எழுத்திலும் வல்லவரானார்.

இதே கால கட்டத்தில் தான் தலைசிறந்த தமிழ் எழுத்தாளரான எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ) அவர்கள் மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர் ஒரு முற்போக்கு வாதி. தமிழரசுக் கொள்கைகளில் இவருக்கு ஈடுபாடு கிடையாது. கட்சியையும், கட்சிக் கொள்கைகளையும் வகுப்பறையிலேயே விமர்சிப்பார். மேடைகளிலும் கட்சிக்கு மாறான கருத்துக்களை எடுத்துரைப்பார்.

எஸ்.பெ அவர்களுடைய கருத்துக்களும் அவருடைய மாணவர்களான செழியன் பேரின்பநாயகம், காசிஆனந்தன் ஆகியோருடைய கருத்துக்களுக்குமிடையில் கருத்து மோதல்கள் அடிக்கடி ஏற்பட்டு வந்தன. இதன்பயனாக மாணவர்களின் தமிழரசுக்கட்சி மீதான பற்றும் பாசமும் அதிகரிக்கவே செய்தது.

பேச்சாற்றலும் எழுத்து வன்மையும் கைவரப்பெற்ற செழியன் பேரின்ப நாயகம் கொழும்பில் இருந்து வெளிவரும் தினகரன் பத்திரிகைக்கு செய்திகளையும் வேறு சிறப்புத் தகவல்களையும், எழுதத் தலைப்பட்டார். அப்போது ஏரிக்கரைப் பத்திரிகைகளின் மட்டக்களப்பு நிருபராக இருந்த மத்திய கல்லூரியின் உப அதிபருமான திரு.பிரின்ஸ் காசிநாதர் அவர்களின் தூண்டுதலின் பேரிலேயே செழியன் தினகரன் பத்திரிகையில் தனது படைப்புக்களை பிரசுரிப்பதற்கு வாய்ப்புகளைப் பெற்றார். மத்திய கல்லூரி படிப்பை முடித்துக்கொண்டு சில ஆண்டுகள் செழியன் அவர்கள் கொழும்பில் வசித்துவந்தார்.

மட்டக்களப்பு கிராமியத் தமிழ் நடையில் நகைச்சுவை ததும்பும் உரையாடல்களையும், துணுக்குகளையும், தினகரனில் எழுதி வந்தார். கொழும்பில் நடைபெறும் நிகழ்ச்சிகளின் செய்திகளைத் திரட்டுவதில் ஈடுபாட்டுடன் செயற்பட்டு தனது திறமையைக் காட்டினார்.

இந்திய அமைதிப்படை இலங்கை வந்திருந்த போது மட்டக்களப்பில் சமாதான சபை ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இவ்வமைப்பு பிரஜைகள் குழு என்றும் அழைக்கப்பட்டது. 1987ம் ஆண்டு முதல் 1990ம் ஆண்டுவரை இக்குழுவில் சேர்ந்து பணியாற்றினார். பின்னர் சமாதானக் குழுவின் செயலாளராகவும் தொண்டாற்றினார். வன்செயல்களினால் பாதிப்புற்ற மக்களுக்கு உரிய உதவிகளைச் செய்வதில் சமாதானக் குழு ஈடுபட்டிருந்தது. எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் படையினரால் பிடிக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்படும் அப்பாவிகளை விடுவிப்பதற்கு திரு.செழியன் பேரின்பநாயகம் அவர்கள் ஆற்றிய பணியினை இலகுவில் எவரும் மறந்து விட முடியாது. இரவு பகல் என்று பாராமல் மட்டக்களப்பு மத்திய வீதியில் மேரிமாதா ஆலயத்தின் முன் புறமாக இருந்த கத்தோலிக்க சங்க கட்டடத்தில் அமைந்திருந்த சமாதான சபை பணியகத்தில் இரவு பகல் பாராது தன்னை நாடி வரும் மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துவந்தார்.



செழியன் ஜெ.பேரின்பநாயகம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் 1994ம் ஆண்டு நடைபெற்ற போது மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர் பதவிக்காக சுயேட்சையாகப் போட்டியிட்டு வெற்றியும் பெற்றார். மட்டக்களப்பு மாநகர சபையின் மேயராகவும் தெரிவு செய்யப்பட்டார்.

செழியன் அவர்கள் மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் பாடசாலையின் உப. அதிபராக இருந்த மண்டூரைச் சேர்ந்த மனோன்மணி கோணாமலை அவர்களை 1974ம் ஆண்டு தனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக் கொண்டார். இரு மகன்களையும் ஒரு புத்திரியையும் பிள்ளைகளாகப் பெற்றனர். மட்டக்களப்பு முதலியார் தெருவில் இல்லறம் நடத்திய செழியன் அவர்களை நள்ளிரவு வேளையிலும் தேடி வந்து உதவிகோறவோருக்கும் முகம் கோணாமல் கணவனும் மனைவியும் வேண்டிய உதவிகளைப் புரிந்து வந்தனர்.

1978 நவம்பரில் மட்டக்களப்பைத் தாக்கிய பெரும் சூறாவளியின் அனர்த்தங்களை விவரிக்கும் வகையில் "சீறிவந்த சூறாவளி 78" என்ற அரிய நூலை எழுதி வெளியிட்டார். மட்டக்களப்பில் 2000ம் ஆண்டு பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கான முஸ்தீபுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இத்தேர்தலில் ஆளும் கட்சியின் சார்பில் வேட்பாளராக இணைந்து போட்டியிடுவதற்கு திரு.செழியன் பேரின்பநாயகம் ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்தார். இந்த வேளையில் மட்டக்களப்பிற்குத் தெற்கே உள்ள பாண்டிருப்பு என்ற ஊருக்கு ஒரு நண்பரைச் சந்திப்பதற்காக வீட்டைவிட்டு புறப்பட்டுச் சென்றார். இந்தப்பயணமே அவருடைய இறுதிப்பயணமாக ஆகிவிட்டது. அவருடைய நண்பரின் வீட்டில் வைத்து செழியனை 10.09.2000 இனம் தெரியாத நபர்கள் சுட்டு வீழ்த்தினர். அவருடைய இறுதிக் கிரியைகள் அவருடைய பிறந்தகமான மண்டூரில் நடந்தேறியது.

எதிர்காலத்தில் மட்டக்களப்பு மண்ணுக்கு சிறந்த பணியினைப் புரிவதற்காக திடசங்கற்பம் பூண்டு வளர்ந்து வந்த ஒருவர் இடைநடுவே தனது வாழ்க்கைப் பயணத்தை 64வது வயதில் முடித்துக் கொண்டார்.

மட்டக்களப்பில் தமிழரசுக்கட்சியை வளர்த்தெடுப்பதற்காக தமது இளமைக் காலத்தை அர்ப்பணித்த பல இளைஞர்கள் வரிசையில் இடம்பிடித்துக் கொண்ட பலரை இத்தொடரில் அறிமுகம் செய்து வைக்க வேண்டியது நமது கடமையாகிறது. இந்த வரிசையில் முதல் நிலையில் அமரர் செழியன் பேரின்பநாயகம் அவர்களை வைத்து இக்கட்டுரையை அலங்கரித்துள்ளேன். பின்வரும் காலங்களில் பட்டியல் தொடரும்.

1952ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் ஆதரவு பெற்ற சுயேட்சை வேட்பாளராக மட்டக்களப்பில் போட்டியிட்ட திரு.ஆர்.பி.கதிர்காமர் வெற்றிபெற்றார். எனினும் பாராளுமன்ற 'படிக்கட்டுகளில் ஏறியபோதே அவர் தமிழரசுக்கட்சியை மறந்தார். சில நாட்களிலேயே ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினராக இணைந்து கொண்டார்.

தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவே இதே தேர்தலில் கல்முனைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கேற் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் அவர்களும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார். அவருடைய மருமகனான திரு.எம்.எம் முஸ்தபா அவர்கள் தமிழரசுக் கட்சியின் வேட்பாளராக இந்த ஊரில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவர் சிலவருடங்கள் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகவே செயற்பட்டார். அதன் பின்னர்தான் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொண்டார்.

(வளரும்)

# வாரம் ஒரு வார்த்தை!

## தென்கச்சி – கோ.சுவாமிநாதன்

**43. கவிதையில் தெரியும் காட்சி**

நாம யாரு? நம்ம தகுதி என்ன? அப்படிங்கற நினைப்பு எப்பவும் நமக்கு இருக்கணும்.

தகுதிக்கு மீறிய நினைப்புதான் பல சமயங்கள்லே நம்மளை சிக்கல்லே கொண்டுபோய் விட்டுடுது.

ஒரு பூனை இருந்துது.

அது தன்னை ஒரு புலின்னு நினைச்சிக்கிட்டிருந்துது. தன்னை பத்தின தகுதிக்கு மீறிய நினைப்போட அந்த பூனை நடந்து போய்க்கிட்டிருந்துது.

அப்போ வழியிலே ஒரு பெரிய யானை அமைதியா நின்னுகிட்டிருக்கு.

அந்த யானை பொறுமையா நின்னுக்கிட்டிருக்கறதுனாலே இந்த பூனைக்கு அதுகிட்டே போயி கொஞ்சம் வாலாட்டிப் பார்க்கலாம்ன்னு ஒரு ஆசை.

உலக இயல்புதானே இது!

இந்த பூனை ரொம்ப நல்ல பிள்ளை மாதிரி அந்த யானை இருக்கிற பக்கமா போவுது. அதை சுத்தி சுத்தி வருது. உற்றுப் பாக்குது! வாய் துறுதுறுக்குது. வம்பு வளக்க ஆரம்பிக்குது! அந்த யானைக்கிட்டே போயி.

"எல்லாருக்கும் ஒரு பக்கம்தான் வால் இருக்கும். ஆனா உனக்கு என்ன இப்படி? ரெண்டு பக்கமும் வாலா?" அப்படிங்குது! வேண்டாத வேலைதானே இது?

இருந்தாலும் அந்த யானை பொறுமையா பதில் சொல்லுது!

"அப்படி இல்லே! பின்னாடி இருக்கறதுதான் வால். முன்னாடி இருக்கிறது தும்பிக்கை!" அப்படிங்குது.

அதோட விட்டுட வேண்டியதுதானே! விடலே இந்த பூனை!

"அது சரி! தும்பிக்கை ஏன் அப்படி உருண்டையா இருக்கு? அது என்னத்துக்கு?" அப்படிங்குது.

இதுக்கும் அந்த யானை பொறுமையாவே பதில் சொல்லுது!

"ஓ! அதை கேக்கறியா?... ஊற்றுலே தண்ணி இருக்கும்லே, அதை உறிஞ்சி குடிக்கறதுக்காக அப்படி இருக்கு!"ன்னுது!

"சரி! எல்லாருக்கும் பல்லு வாய்க்குள்ளேதான் இருக்கும். உனக்கு என்ன வெளியேவே இருக்கு? அதுவுமில்லாமே இவ்வளவு பெரிசா.. இவ்வளவு நீளமா இருக்கு?" அப்படின்னு கேட்டுது பூனை.

"அதுவா ஒரு புலி என்கிட்டே வந்து வாலாட்டுதுன்னு வச்சிக்க... அந்த சமயத்துலே அதைத் தாக்கறதுக்காக இது இப்படி இருக்கு!"ன்னுது.

இதைக் கேட்டதும் பூனை விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பிச்சுட்டுது.

"மலை எங்கேயாவது பாயறது உண்டா? நீயோ கருப்பா பெரிசா இருக்கற மலை! உன்னாலே எப்படி பாய முடியும்? அது முடியாத காரியம்!" ன்னு சொல்லிபுட்டு மறுபடியும் சிரிக்குது!


என் உடம்பைப் பார்த்துட்டுதானே மலைன்னு சொல்றே! நான் பாய வேண்டிய அவசியம் இல்லே! இப்ப உன்னை பாய வைக்கிறேன் பார்!" அப்படின்னு சொல்லி புட்டு அந்தப் பூனையை தும்பிக்கையாலே அலட்சியமா தூக்கி எறிஞ்சுது யானை!

எங்கேயோ போயி விழுந்த அந்த பூனை 'அப்பாடா'ன்னு இடுப்பைப் புடிச்சிக்கிட்டே எழுந்திரிச்சி நின்னு பார்க்குது!

தூரத்துலே அந்த யானை இன்னமும் பொறுமையா ஆனா கம்பீரமா நின்னுகிட்டிருக்கு!

இப்பதான் அந்த பூனைக்கு ஞானோதயம் பிறக்குது!

"யானை பாய வேண்டிய அவசியமில்லே! அதுக்கு நீளமா தும்பிக்கை இருக்கு!" அப்படிங்கறதை புரிஞ்சிக்குது!



"வலியாரிடம் வாயாடக் கூடாது" அப்படிங்கற பாடத்தை பூனை கத்துக்கிட்டுது.

இந்தக் காட்சி பாவேந்தர் பாரதிதாசன் கைவண்ணத்துலே ஒரு கவிதையா உருவெடுத்து வருது:

**"இரண்டு பக்கமும் வாலா என்றது பூனை.**

**எதிரி லேதும் பிக்கை என்றது யானை.**

**உருண்ட துதிக்கை ஏனோ என்றது பூனை.**

**ஊற்று நீரை உறிஞ்ச என்றது யானை.**

**திரண்டு நிண்ட பல் ஏன் என்றது பூனை.**

**சீறும் புலியைத் தாக்க என்றது யானை.**

**இருண்ட மலை பாயா தென்றது பூனை.**

**எடுத்தெ றிந்தது பூனையைப் போய் யானை!"**

இந்தக் கவிதையிலே ஒரு பாடமும் இருக்கு. படமும் இருக்கு. அதாவது இதைப் படிக்கவும் முடியுது பார்க்கவும் முடியுது.

வலியார் கிட்டே வாயாடக் கூடாதுங்கறது சின்ன புள்ளைங்க மட்டுமில்லே... இந்தக் காலத்துலே பெரியவங்களும் கத்துக்க வேண்டிய ஒரு பாடம்.

ஒருத்தன் அப்படித்தான் ஆற்றங்கரையிலே பொறுமையா உட்காந்துகிட்டிருந்த இன்னொருத்தனை போயி தலையிலே குட்டினான்.

அவன் பார்த்தான். உடனே ஒரு ரூவாயை எடுத்து இவன் கையிலே குடுத்தான். இவனுக்கு ஒண்ணும் புரியலே!

அவன் சொன்னான்: இந்த ஊர்ல இப்படி ஒரு வழக்கம். யாரை குட்டினாலும் ஒரு குட்டுக்கு ஒரு ரூவா வீதமா குடுத்துடுவாங்க" அப்படின்னு பொறுமையா சொன்னான்.

இவனுக்கு ரொம்ப ஆசை உண்டாயிட்டுது. உடனே ஊருக்குள்ளே ஓடினான். கொஞ்ச நேரம் கழிச்சி திரும்பி ஓடிவந்தான். அந்த முதல் ஆசாமியை மறுபடியும் பார்த்தான்.

"உங்க பேச்சை கேட்டுட்டு உருக்குள்ளே போயி ஒரு பெரிய ஆசாமியைப் பார்த்து அவன் தலையிலே பத்து குட்டு குட்டினேன். ஆனா அவன் உடனே எங்கிட்டே இருந்ததை எடுத்து என் கையிலேயே குடுத்துட்டான்!"னான்.

**'என்ன பணமா?"ன்னான் அவன்.**

**"இல்லே! பல்லு!"ன்னான் இவன்.**

**(வார்த்தைகள் தொடரும்)**

# ஸ்போர்ட்ஸ்

## ஹஷான் திலகரட்ன இரட்டைச் சதம்

இலங்கை அணி வீரர் ஹஷான் திலகரட்ன டெஸ்ட் போட்டியில் தனது முதலாவது இரட்டைச்சதத்தையும் அதி கூடிய 204 ஓட்டங்களையும் பெற்றுள்ளார்.

மேற்கிந்திய அணிக்கும் இலங்கை அணிக்குமிடையில் நடைபெற்று வரும் இறுதியும் 3வது டெஸ்ட் போட்டியுமான போட்டியில் முதலாவது இன்னிங்ஸில் 4ஆம் நாள் மதிய இடைவேளையின் பின் முதலாவது இன்னிங்ஸில் 204 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்சை 9 விக்கட் இழப்பிற்கு 627 ஓட்டங்களுடன் நிறுத்திக்கொண்டது.

இலங்கை அணி வீரர்கள் பெற்ற ஓட்டங்கள்: சனத் ஜெயசூரிய- 85, மாவன் அத்தப்பத்து-4, குமார் சங்கக்கார-55, மகேல ஜெயவர்தன-39, ரசல் ஆர்னல்ட்-65, ஹஷான் திலகரட்ன 204 (ஆட்டமிழக்காமல்), திலான் சமரவீர-87, வாஸ்-23, நுவான் சொய்ஸா-10, நிரோசன் பண்டாரதிலக்க- 25, முரளிதரன்-4 (ஆட்டமிழக்காமல்) உதிரிகள் 26 அடங்களாக 627 ஓட்டங்களுக்கு 9 விக்கட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. மேலதிகமாக பெற்ற 237 ஓட்டங்களுடன் மேற்கிந்திய அணியினை



இரண்டாவது இன்னிங்சை ஆரம்பிக்குமாறு கேட்டுக் கொண்டது.

இந்த மூன்று டெஸ்ட் போட்டித் தொடரிலும் மேற்கிந்திய அணிவீரர் பிறைன்லாரா 5 இன்னிங்ஸ் விளையாடி 558 ஓட்டங்களையும் அது கூடிய ஓட்டமாக 221ஐயும் பெற்றார். டெஸ்ட் போட்டியில் பெற்ற மொத்த ஓட்டங்கள் 7091 ஆகும்.

இலங்கை அணிவீரர் ஹஷான் திலகரட்ன மூன்று டெஸ்ட் போட்டித் தொடரிலும் 5 இன்னிங்ஸ் விளையாடி 403 ஓட்டங்களையும் அதிகூடிய ஓட்டமாக 204ஐயும் பெற்றார்.

## வசீம் அக்ரம் மறுப்பு

பங்களாதேஷ் அணியை சிம்பிளாகக் கணித்து விளையாடினோம். இந்திய அணியுடன் ஒரு யுத்தம் நடத்துவது போல் விளையாடினோம். இதனால் அந்த அணிகளுடன் நாம் 1999 உலகக் கிண்ணப் போட்டிகளில் தோல்வியடைந்தோம். மற்றும்படி எந்த ஆட்ட நிர்ணயங்களிலும் எமது அணி ஈடுபடவில்லை.

இப்படி அடித்துக் கூறியிருக்கிறார் பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் வசீம் அக்ரம்.

ஆட்ட நிர்ணய விசாரணை ஆணைக் குழு முன்பாக சாட்சியமளிக்காமலேயே அவர் இப்படித் தெரிவித்தார்.

விசாரணைகளைத் திருப்தியாக மேற்கொள்ளும் பொருட்டு குறிப்பிட்ட ஆட்டங்களில் மத்தியஸ்தம் வகித்தவர்களிடமிருந்தும் அறிக்கைகள் பெறப்பட்டிருக்கின்றன.

## முக்கோணத்தொடரில் பங்குகொள்ளும் ஸிம்பாப்வே அணி!

இலங்கை-ஸிம்பாப்வே-மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான முக்கோண ஒரு நாள் போட்டித் தொடருக்கான 14 பேர் கொண்ட தமது அணியை ஸிம்பாப்வே அறிவித்திருக்கிறது.

அணி விவரம் வருமாறு:-

ஸ்ருவர்ட் கார்லைல் (அணித் தலைவர்), ஹீத் ஸ்டிரீக், அன்டி பிளவர், க்ரான்ட் பிளவர், டியோன் இப்ராஹிம், ட்ரிவோர் க்ரிப்பிள், க்ரெய்க் விஷர்ட், டக்ளஸ் மரிலியர், என்காலா, ட்ரவிஸ் ப்ரெனட், கரி ப்ரென்ட், ஹென்றி ஒலங்கா, சீன் ஏர்வின், டட்ரண்டா டெய்ல்.

## கங்குலி சீற்றம்



இங்கிலாந்து அணியுடனான முதலாவது டெஸ்ட் போட்டிக்கான அணித்தெரிவுக்கு என்னுடன் எவரும் தொடர்பு கொள்ளவில்லை. அணித் தலைவர் என்ற ரீதியில் என்னிடம் எந்த ஆலோசனையும் பெறவில்லை. சச்சின் கப்டன் பதவியிலிருந்து ஏன் விலகினார் என்பது இப்பொழுது தான் எனக்குப் புரிகிறது. என்று கூறியிருக்கிறார் இந்திய அணித் தலைவர் சௌரவ் கங்குலி.

அவர் மேலும் கூறுகையில்:-

தென்னாபிரிக்க அணியுடனான ஆட்டங்களில் பங்குகொண்ட ஐந்து நம்பிக்கையான வேகப்பந்து வீச்சாளர்களைத் தேர்வாளர்கள் மொஹாலி ரெஸ்ட் அணியில் சேர்க்கவில்லை. இது ஒரு எதிர் பாராத முடிவு.

மாறாக மூன்று அனுபவமில்லாத வேகப்பந்து வீச்சாளர்களை அணியில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எமது அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் தென்னாபிரிக்காவில் நன்றாக பந்து வீசவில்லைதான். ஆனால் தற்போது தெரிவு செய்யப்பட்ட வீரர்கள் அஜித் அகார்கர், அஸிஷ்நெஹ்ரா, சஹீர் கான் ஆகியோரை விடச் சிறப்பாக பந்துவீசக்கூடியவர்களா? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார் கங்குலி.

# எனக்குள் புதைந்த உன்னை......

இலக்கிய நயம்

தருவது முழடில்யன்

மோகனாகரமாக நின்றிருந்தாள் முல்லை.

அர்ஜுனன் பார்த்த கிளியாய் அகிலனுக்கு அவள் உருவம் ஒன்றே கண்களுக்குத் தெரிந்தது.

காற்றில் அலையெறிந்த கூந்தலும், அதன் கருமைப் பின்னணியில் ஒளிவீசிய வெண்சங்காக நீண்டிருந்த கழுத்தும், அதன்மேலே நிலவு பொறாமை கொள்ளும் முகமுமாக நின்றிருந்த முல்லையைப் பார்த்துப் பார்த்துத் தீரவில்லை அவனுக்கு.

கனவில் நடப்பவன்போல் தானறியாமல் இயங்கி அவளருகில் வந்தான்.

அவள் எவ்வித சலனமும் இன்றி நின்றிருந்தாள்.

கைகளைக் கட்டியிருந்தாள்.

இவன் கண்களை அங்கே கட்டியிருந்தான்.

கிட்ட நெருங்கிய பிறகு அவள் சிலையல்ல என்பதை அறிந்துகொள்ளப் பல தடயங்கள் தெரிந்தன.

குறிப்பாக, அவள் மூச்சுவிடுவதை எழுந்து தாழ்ந்து உணர்த்திய பாகங்களில் இவன் பார்வை நிலைத்தது கண்டு அனிச்சைச் செயலாய் சேலையைச் சரிசெய்து கொண்டாள்.

பேச்சற்ற மௌனம் இவனைப் பெரும்பாடாய்ப் படுத்தியது.

ஏதாவது பேசுவதன் மூலம்தான் பொங்கும் மன எழுச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்று உணர்ந்தான்.

"இப்படியே நின்றிருந்தால் எப்படி?"

வெறும் முனகலாக ஒலித்த தன் குரலால் அவனே சற்று அதிர்ச்சியடைந்தான்.

தொண்டையைச் செருமிக் கொள்ளும் முயற்சியில் அவன் ஈடுபடுகையில், அவள் வீணையின் மென் நரம்பைச் சுண்டினாள்.

"வேறு எப்படி நிற்பதாம்?" கேட்டபடியே பரத முத்திரை ஒன்றுக்கு கைகளை அசைத்தாள். முகத்தில் குறும்புச் சிரிப்பு பூத்தது.

"விருப்பம் அலைத்தலால் துன்பப்படும் என் நெஞ்சுக்கு எந்த ஆறுதலும் தராமல் வீம்பு காட்டாதே. எனக்கு பதிலைச் சொல். வேட்டை நாயக மாறிவிடுவேனோ என்று பயமாக இருக்கிறது..." பரிதாபமாக இறைஞ்சினான்.

இப்போது வரிசை தவறாத அந்தச் சிறுவெண்பற்கள் தெரியச் சிரித்தாள் அவள்.

இவனது கால்களுக்குள் பூமி நடுங்கியது.

ஆதாரத்திற்குப் பிடித்துக் கொள்பவனைப் போல அவளைப் பற்றினான்.

அவள் கன்னக் கதுப்புகளிரண்டையும் கைகளால் அழுத்திப் பிடித்தபடி அவள்மீது சாயமுற்பட்டான்.

அவள் அவனைக் கட்டிக் கொண்டாள்.

மெத்தென்ற ஸ்பரிசம் அவன் மேனியெங்கும் மின்சாரமெனப் பாய்ந்தது.

கன்னத்தோடு உராய்ந்தபடி "அந்தப் பற்களைக் கடிப்பேன்..." என்று முணுமுணுத்தான்.

"இங்கே வேண்டாம். வா" என்று அவனை அழைத்துப் போனாள்.

மறைவான ஒரு இடம் தேடி அமர்ந்து கொண்டாள். அவனைத் தன் மடியில் கிடத்தினாள்.

அவன் தலைமுடிக்குள் விரல்களை அலைய விட்டாள். குறுகுறுத்த வழிகளால் அவன் கண்களை ஊடுருவினாள்.

"இப்போது சொல். என்ன செய்யப் போகிறாய்?" அவள் உதடுகளில் சுழித்த கேலியை அவன் ரசித்தான். ஆளைச் சுருட்டி மடக்கிக் கொள்ள எழும் பேரலையாக விரிந்து கிடந்த அவள் கண்களிடமிருந்து தப்பிவிடும்



அவசரத்தோடு அவள் முகத்தை இழுத்துத் தன் தோளில் புதைத்தான்.

"இந்த மென்மலர்க் குவியலுக்குள் என்னைப் புதைத்து விடப் போகிறேன்" என்று காதுக்குள் சொன்னான்.

"எனக்குள் புதைந்த உன்னை நான் மறுபடி மறுபடி கண்டுபிடிப்பேன்" என்று அவளும் அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

"கண்டுபிடித்து..?" அதைக் கேள்வியாக்கி அவனும் கிசுகிசுத்தான்.

"கண்டுபிடிப்பது... கண்டுபிடிக்கிறதில் உள்ள சந்தோஷத்திற்காகத்தானே...!"

"என்ன சந்தோஷம்?"

"ம்க்கும்.. தெரியாதாக்கும்..."

அந்த வீணை நரம்பின் சிணுங்கலால் உள்ளே கிளுகிளுத்தபடியே கேட்டான்.

"தெரியாது சொல்?"

"என் அங்கங்களில் எங்கெங்கெல்லாம் இன்பம் ஒளிந்துகிடக்கிறது என்பதை உன் திண்டல்தானே எனக்குக் காட்டிக் கொடுக்கிறது..."

"அடடா! காட்டிக் கொடுப்பதால் இன்னொருவருக்கு சந்தோஷ!மும் தரலாம் என்கிறாயா?"

"ம்..." என்றபடி அவன் கன்னத்தோடு உராய்ந்தவள் மேலும் சொல்ல முற்பட்டு, "காட்டிக் கொடுப்பதால் மட்டுமல்ல, வன்முறையாலும்தான் சந்தோஷத்தைத் தரமுடியும்" என்றாள்.

"வன்முறையா?" என்று குழறினான், அவள் கழுத்துக்குள் முகத்தைப் புதைத்து வைத்திருந்த திணறலோடு,

"ஆமாம். உன் கைகள் செய்வதென்ன சாத்வீகமா?" என்று அவன் கைகள் பற்றிப் பிடித்திருந்த இடங்களைக் கண்களால் காட்டிச் சிரித்தாள் முல்லை.

"உன் கண்களால் நீ செய்யும் வன்முறையை விடவா? ம்..ம்.. உன் பேச்சின் நாதம் கூட என்னைச் சித்திரவதை செய்கிறது. இந்த இதழ்களிலும்கூட வன்முறை..." என்று அவன் கீழுதட்டை நிமிண்டினான்.

"சரி, சரி, போதும் வன்முறை. நான் போகவேண்டும்" என்று எழுந்தாள் முல்லை.

"இன்னும் வன்முறை பாக்கியிருக்கிறது வா" என்று இழுத்தான் அகிலன்.

நின்றால் விடமாட்டான் என்பதறிந்து துள்ளி ஓடினாள். ஒரு மான்குட்டிபோல அவளது பாய்ச்சலைப் பார்த்து, தனது ஏமாற்றத்தை மறைத்துக்கொள்ள மாட்டாதவனாக ஏக்கத்தோடு அந்தத் திசையையே நோக்கி இருந்தான். தனது வீடு நோக்கி விரைந்தோடுகிற அவள் பின்புறத்தைப் பார்த்தபடி இருந்தவன், அவளை மான்குட்டி என்று நினைத்த தன் உவமையை மனதினுள் அழித்தான். கலைமானைப் பிரிந்து செல்லும் பெண்மான் அவள். அவளது அந்த விரைந்த நடையிலும் தெரிவது பிரிவுத் துயரம்தான். அவள் போகும் திசைநோக்கி ஏங்கும் தன் நெஞ்சை அத்திசையிலிருந்து திருப்பமுடியாது என்று தெரிந்துகொண்ட அவன் அப்படியே சிலையாக அமர்ந்திருந்தான்.

....இன்சொல் மேவலைப் பட்ட என்
நெஞ்சுணக்
கூறு இனி மடந்தை நின்கூர் எயிறு
உண்கு என
யான்தன் மொழிதலின் மொழி எதிர்
வந்து
தான் செய் குறியில் இனிய கூறி
ஏறுபிரி மடப்பிணை கடுப்ப வேறுபட்டு
உறுகழை நிவப்பின் சிறுகுடிப் பெயரும்
கொடிச்சி செல்புறம் நோக்கி
விடுத்த நெஞ்சம் விடல் ஒல்லாதே.

*(நற்றிணை: 204:5-12)*

# சிந்தியா பதில்கள்

**★ உலக அழகியாக ஒரு கறுப்பினப் பெண்?**

த.குமாரவேல், கண்டி.

*ஒரு கிளியோபாத்ராவைக் கண்டு கொள்ள 2001 வரை காத்திருந்திருக்கிறோம்.*

**★ காதலிக்கும்போது அழகு தேவதை அது இது என்றெல்லாம் சொல்பவர்கள், கல்யாணத்துக்குப் பிறகு அதையெல்லாம் சொல்வதில்லையே, ஏன் சிந்தியா?**

ஆர்.விஜயராணி, கொழும்பு-13.

*கல்யாணத்துக்குப் பிறகு பொய் சொல்வதை விட்டுவிடுகிறார்களோ என்னவோ!*

**★ பத்திரிகையில் கேள்விகளுக்குப் பதில் சொல்வது கஷ்டமா?**

ரி.நிருபன், இறால்குழி-07.

*கஷ்டமில்லை சுலபம்தான். முட்டை முதலில் வந்ததா, கோழி முதலில் வந்ததா? என்று நீங்கள் கேட்டால் முட்டைதான் முதலில் வந்தது என்று நான் பதில் சொல்லிவிடலாம். எப்படி? என்று நீங்கள் உடனே திருப்பிக் கேட்க முடியாது.*

**★ தேர்தல் வன்முறைகள் குறைய வேண்டுமானால், மேடைகளில் வாய்க்கு வந்தபடி அரசியல் தூஷணங்கள் பேசப்படுவதை நிறுத்த வேண்டும் என்கிறாரே முன்னாள் வடக்குகிழக்கு முதலமைச்சர்?**

வி.பாக்கியராஜா, யாழ்ப்பாணம்.

*தமிழர் கூட்டமைப்பினரின் மேடைப் பேச்சுக்களைக் கேட்க நேர்ந்தபோது, 'இப்படியெல்லாம் தமிழ் வார்த்தைகளை குத்திப் பிடுங்கும் கொலைக் கருவியாக உபயோகிக்க முடியுமா' என்ற ஆச்சரியம் ஏற்பட்டது உண்மை. அந்நாட்களில் கிளிநொச்சித் தொகுதியில் ஆனந்தசங்கரியும், ஆலாலசுந்தரமும் அடிபட்டு அசிங்கத்தில் புரண்டதெல்லாம் ஞாபகத்தில் வந்தது.*

**★ நம்முடைய இந்த வாழ்க்கைபற்றி ஒரு கவிதை தர முடியுமா?**

என்.எம்.நிஸாம், காத்தான்குடி-02.

*நான் கவிதையைக் காதலிப்பதோடு சரி, அது என்னைக் காதலித்து என்னிடம் வந்ததில்லை. புல்நுனிப் பனித்துளிக்குள் உலகம் தெரிவதுபோல சில கவிதைகளுக்குள் வாழ்க்கை பற்றிய ஏதேனும் ஒரு தரிசனத்தைக் கண்டுகொள்ள முடிந்திருக்கிறது. கவிஞர் எம்.யுவனின் இந்த 'பிரவாகத்தில் ஒரு துளி' அதுபோல 'அட, நாமும் இதை எழுதியிருக்கலாமோ' என்று நினைக்க வைத்த கவிதை.*

எனக்குப் பிடிக்கும்
என்றறியாமலே
ஒலியெழுப்புகின்றன
பறவைகள்...
நான் விழித்து
எழாத போதும்
விடிந்து விடுகிறது
பொழுது.
கவிதையின் கணமொன்றை
கண்கள் துழாவ
காலடியில் பாய்ந்து மறைகிறது
கணங்களின் பிரவாகம்.

**★ காதலில் தோல்வி ஏற்படாதிருக்க என்ன செய்ய வேண்டும்?**

எஸ்.அமுதா, பொத்துவில்.

*காதலிக்காமல் இருக்க வேண்டும் என்று சொல்லலாம். ஆனால் அது புத்தி சாலித்தனம் அல்ல. தவிரவும் அதில் எந்த வெற்றியும் கிடையாது. அழிவைத் தடுக்க, வாழ்வைக் கொண்டாட, நம்மால் முடிந்த வழி காதல் ஒன்றுதான். அதனால் தான் காதல் செய்வீர் செகத்தீரே! தோல்வி பற்றிக் கவலை வேண்டாம். ஏனென்றால், காதலிப்பதே ஒரு வெற்றிதானே!*

**★ தாய்க்குப் பின் தாரம் என்றால், தாரத்திற்குப் பின் என்ன?**

பெ.கோகிலன், ஹட்டன்.

*அவரும் தாயாவது.*

**★ சிந்தியா! கவிஞர் வைரமுத்து எழுதிய காதல் கவிதைகளில் உங்களுக்குப் பிடித்ததைத் தருவீர்களா?**

பி.தியாகநாதன், செம்புகவத்தை.

*எனக்குப் பிடித்தது இருக்கட்டும். அவருக்குப் பிடித்தது, காதலித் தேசிய கீதம் என்று அவர் புகழ்வது கண்ணதாசன் வரிகளை...*

*"நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும் நாளோடும் பொழுதோடும் உறவாட வேண்டும் நான் காணும் உலகங்கள் நீகாண வேண்டும் நீ காணும் பொருள் யாவும் நானாக வேண்டும்!..." அடடா!*

**★ நந்தா பார்த்துவிட்டீர்களா?**

சி.மலர், கொழும்பு-12.

*ம்... 'சுபம்' என்று முடிப்பதில் நம்பிக்கையில்லாதவர் பாலா என்று தெரிகிறது. 'இருவரும் கல்யாணம் செய்துகொண்டு சந்தோஷமாக வாழ்ந்துவரலாயினர்' என்றோ, "கைகோர்த்தபடி தொடுவானச் சூரியனை நோக்கி நடந்தனர்' என்றோ தெரிந்துகொண்டுதான் நிம்மதியோடு எழுந்து வர விரும்புவது நம் வெகுஜன வழக்கம். நிம்மதியை மறுக்கும் 'ரோஷக்காரப் போராளி'யாகத் தெரிகிறார் பாலா.*

*மற்றபடி, சூர்யாவை 'நடிகர்கள்' வரிசையில் சேர்த்திருக்கிறார்; இலங்கைப் பிரச்சனையில் அங்கு பணம் சம்பாதித்துக் கொள்பவர்களை நாசூக்காகத் தட்டியிருக்கிறார்; ராமநாதபுரக் கடற்கரையிலேயே படம் முழுவதையும் முடிக்கும் துணிவு கொண்டிருக்கிறார் (லைலா கனவில் சூர்யாவோடு சுவிற்சர்லாந்து போய் ஒரு டூயட் பாடி வர வாய்ப்பிருந்தபோதும்கூட) எல்லாவற்றையும்விட அந்த லொடுக்கு பாண்டியை அற்புதமாகப் படைத்திருக்கிறார் என்பதெல்லாம் சரி. முரடர்களின் உலகிலிருந்து கொஞ்சம் வெளியே வர மாட்டாரா!*

**★ சிந்தியாவிடம் கேட்டால் யாருக்கு வாக்களிக்கச் சொல்வீர்கள்?**

ஆர்.நித்தியானந்தன், நாவலப்பிட்டி.

*வேட்பாளராக வரும் ஒவ்வொருவரும் இப்போது சொல்லிக் கொண்டுவரும் ஆரவாரப் பேச்சுக்களில் மயங்கிவிடக்கூடாது. கொஞ்சம் நிதானமாக, அவர் கடந்த காலத்தில் என்ன செய்தார் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு தேர்தலுக்கும் ஏதோவொரு உணர்ச்சிகரக் கோஷத்தை எடுத்துக் கொண்டு, 'இம்முறை வாக்களித்து விட்டால் தமிழ் மக்களுக்கு விடிவு நிச்சயம்' என்பதையே இம்முறையும் சொல்லிக் கொண்டு வருபவராக இருந்தால் அவர் மோசடியை அடையாளம் கண்டுகொள்ள கூரிய அறிவு எதுவும் வேண்டியதில்லை.*

*இதற்கு முன் வாக்குக் கேட்டு வராதவர் இம்முறை வந்திருந்தால், அவர் 'தேர்தல் முடிந்தவுடன் சமாதானம் நிச்சயம்' என்று சொல்பவராக இருந்தால் அதிலுள்ள ஏமாற்றையும் புரிந்து கொள்ளப் பேரறிவு வேண்டியதில்லை. 'தெற்கில் தீர்வைப் பற்றிக் கதைக்காதவர்களையும் சமாதானத்துக்காக இழுத்து விடுவதற்கு, காவோலையை நீரில் ஊறப் போட்டுப் பிழிந்தால் சாறுவரும் என்று கொஞ்சம் நம்பக்கூடிய விதமாக செகசாலம் பண்ணுபவர்களைப் புரிந்துகொள்ள நம் அறிவைப் பயன்படுத்த வேண்டும். நம்பமுடியாத வாக்குறுதிகள் எதையும் தராமல், யாராலும் வளைக்க முடியாத இரும்பை நாம் வளைத்துச் சில்லுச் செய்வோம் என்று சொல்லாதவர்களை, என்ன நடந்தாலும் உங்களுடைனேயே நிற்போம் என்று சொல்பவர்களை இனங்கண்டுகொள்ள கூரிய அறிவு தேவைப்படும். நிதானமாக சிந்தித்து உங்களுக்குரியவர்களைத் தேர்ந்து வாக்களிக்க வேண்டும். அது அவ்வளவு சுலபமல்ல. இனத்தின் பேராலும், திடீர் திடீர் ஒற்றுமையின் பேராலும் போடப்படும் இரைச்சல்களுக்கு மத்தியில் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள நீங்கள்தான் கடும் முயற்சி எடுக்க வேண்டும்!*

# மன்னாதி மன்னன் 84

பேரழகியான தாசி ரூபசௌந்தரி தன்னிடம் இன்பம் தூய்க்க வருபவர்களிடம் ஆயிரம் பொற்காசுகளைப் பெற்றுவந்தாள். அவளுடைய பேராசையும் மமதையும், அவளுடைய அழகை எந்த ஆண்மகன் வர்ணித்தாலும் அவர்களை தனது அடியாட்கள் மூலம் பிடித்து அவர்களிடமும் ஆயிரம் பொன் கறக்கலானாள்.

இதை விட ஒரு படிமேல் சென்று, தன்னைக் கனவில் கண்டதாக எவர் கூறினாலும் அந்தநபரிடமும் ஆயிரம் பொன்னைக் கறந்துவிடுவாள். இவ்வாறு தாசி ரூபசௌந்தரி அநீதியாக நடந்து கொள்வதற்கு அந்த நாட்டு அரசும் ஒத்தாசை புரிந்தது. இதற்குக்காரணம் அந்நாட்டு மந்திரிகள் பலரும் அரச அதிகாரிகளும்கூட அவளுடைய வாடிக்கையாளர்களாக இருந்தமையேயாகும்.

ஒருநாள் ஒரு ஏழை பிராமணன் நதிக்கரையில் குளித்துக் கொண்டிருக்கும்போது, மற்றொரு பிராமணனிடம், தான் தன் கனவில் தாசி ரூபசௌந்தரியைக் கண்டதாகக் கூறிவிட்டான். இதனால் கனவு கண்ட பிராமணனை தாசியின் அடியாட்கள் அவனைப் பிடித்து ஆயிரம் பொன் தரும்படி அடித்து உதைத்து இம்சைப்படுத்தினர். இவ்வழக்கு மன்னரிடம் கொண்டு செல்லப் பட்டபோது, மன்னரால்கூட உரிய தீர்ப்பு வழங்கமுடியாது போயிற்று.

இறுதியில் நகை வியாபாரம் செய்யும் செட்டியார் கடையில் உள்ள புத்திசாதுரியம் மிக்க கிளியிடம் வழக்குக் கொண்டு வரப்பட்டது. ஒரு நெடிய கம்பத்தை நட்டு அதன் உச்சியில் ஆயிரம் பொற்காசுகளைக் கொண்டு முடிச்சி ஒன்றைக் கட்டிவைத்து அதன் விம்பத்தை தரையில் வைக்கப்பட்ட கண்ணாடியில் தெரியுமாறு செய்த கிளி, அந்த விம்பத்தில் தெரிந்த பண முடிப்பை எடுக்கும்படி தாசி ரூபசௌந்தரியிடம் கூறியது.

கண்ணாடியில் தெரியும் பணமுடிப்பின் விம்பத்தை எவராலும் எடுக்கமுடியாதென ரூபசௌந்தரி புலம்பினாள். இதற்குக் கிளியின் உடலிலிருந்த விக்கிரமாதித்த மன்னன் கனவில் கண்டமைக்காக காசு கேட்பதானால் கண்ணாடியில் உள்ள காசு முடிச்சைப் பெற்றுக் கொள்வதுதான் முறையாகும் எனத் தீர்ப்பு வழங்கினார்.

கிளியின் தீர்ப்பைக் கேட்டு அங்கிருந்த அனைவரும் வியந்தனர். பலர் முன்னிலையில் தன்னை ஒரு சாதாரண கிளி அவமானப்படுத்திவிட்டமைக்காக மிகவும் வேதனைப்பட்டாள். தலைகுனிந்தாள். அவளுடைய கர்வம் இன்னும் குறைந்தபாடில்லை.

கிளியைப் பார்த்து ஒரு சபதமிட்டாள். "ஏ கிளியே பெரிய புத்திசாலி என்று கருதிக் கொண்டு என்னை மானபங்கப் படுத்திவிட்டாய். உன்னைக் கொன்று கறிசமைத்து உன் தலையைக் கடித்து உண்பேன்."

இவ்வாறு ரூபசௌந்தரி சபதமிட்டதும் இராஜகிளியும் மறுசபதமிட்டது. "ரூப சௌந்தரி, நான் நியாயமான தீர்ப்பையே வழங்கினேன். என்னைக் கறிசமைத்து உண்ணப் போவதாகக் கூறுகிறாய், நான் உன் தலையை மொட்டையடித்து உன் தலையில் கரும்புள்ளி செம்புள்ளி குத்தவைத்து ஒரு கழுதையின் மேலேற்றி நகர்வலம் வெல்ல வைப்பேன். யாருடைய சபதம் செல்கிறது என்று பார்க்கலாம்." என்று கிளி கூறியது. கூட்டமும் கலைந்து சென்றது.

தனது மாளிகைக்குக் திரும்பிய தாசி ரூபசௌந்தரி, தான் செய்த சபதத்தை எவ்வாறு நிறைவேற்றுவது என்று ஆலோசனை நடத்தினாள். அவளுடைய தோழிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழிகளைக் கூறினார்கள். அவை எதுவுமே சரிப்பட்டுவரவில்லை.

நகைக் கடைக்காரச் செட்டியும் தாசி ரூபசௌந்தரியின் வாடிக்கையாளர்களில் ஒருவர். அடிக்கடி தாசியிடம் அவர் வந்து செல்வார். அந்தச் செட்டியார் எப்போதாவது வருவார் என்று ரூபசௌந்தரி காத்திருந்தாள்.

அவள் காத்திருந்தது வீண்போகவில்லை. ஒரு நாளிரவு செட்டி அவளை நாடி வந்தார். அவர் தன்னை நாடி வருவதை அறிந்த தாசி தன் அறைக் கதவை மூடிக் கொண்டு உள்ளே இருந்து கொண்டாள். வழமைக்கு மாறாக, ரூபசௌந்தரி தன்னை வரவேற்காமல் அறைக்குள் சென்று கதவடைத்து விட்டதைக் கண்டு செட்டி பதை பதைத்தார். கதவடியில் நின்றவாறு தான் வந்திருப்பதாகவும் கதவைத் திறக்குமாறும் கோரினார்.

உள்ளிருந்த தாசி, கதவைத் திறந்தாள். என்றுமில்லாதவாறு அவள் மிகவும் அழகாகத் தன்னை அலங்காரம் செய்திருந்தாள். இதனைக் கண்ட செட்டி அவளுடைய மோகவலையில் மேலும் மயங்கலானர். செட்டியார் அறையினுள் நுழைந்ததும் செட்டியாரிடம், "செட்டியாரே, தாங்கள் இன்று என்னுடன் மகிழ்ச்சியாக இருக்க விரும்பினால் நான் கோரும் பொருளை எனக்குத் தரவேண்டும். அதனை என்னிடம் தந்துவிட்டு நீர் இங்கு என்னுடன் உல்லாசமாகப் பொழுது போக்கலாம்," என்றாள் தாசி ரூபசௌந்தரி.

செட்டியார் அப்போதிருந்த நிலையில் அவருடைய சகல செல்வத்தையுமே அவளிடம் ஒப்படைத்துவிடும் நிலையில் இருந்தார். எதைக் கேட்டாலும் தந்துவிடுவதாக வாக்களித்தார்.

சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த ரூபசௌந்தரி செட்டியாரிடம், அவருடைய கடையில் வைத்திருக்கும் கிளியை அதன் கூண்டோடு தரும்படி கேட்டாள். அதனையும் உடனே கொண்டு வந்து தரவேண்டும் என்றாள். இக்கோரிக்கை செட்டியாருக்கு பெரும் பொருட்டாகத் தெரியவில்லை. உடனடியாகத் தன் கடைக்கு வந்து கிளியைக் கூண்டோடு தூக்கிக் கொண்டு போய் ரூபசௌந்தரியிடம் கொடுத்தார்.

அந்தக் கிளியால், அது அவரிடம் வந்த

## இராஜகிளியின் சபதம் வென்றது

நாள் முதல்தான் பெற்ற அளப்பரிய செல்வத்தைப் பற்றிக்கூட நினைக்க மறந்துவிட்டார். தாசி ரூபசௌந்தரியின் மோகவலையில் வீழ்ந்த செட்டி தன்னை அவளிடம் கொடுக்கப் போவதனால் தான் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இராஜகிளியான மன்னர் விக்கிரமாதித்தன் கருதிக்கொண்டார்.

கிளியைப் பெற்றுக் கொண்ட ரூபசௌந்தரி தன்னுடைய சபதம் நிறைவேறப்போவதாக எண்ணி பெரு மகிழ்ச்சி அடைந்தாள்.

அடுத்தநாள் அதிகாலையில் எழுந்த ரூபசௌந்தரி தனது சமயல்காரியை அழைத்து அவளிடம் கூண்டோடு கிளியை ஒப்படைத்து, தான் நதிக்கரை சென்று குளித்துவிட்டு வருவதற்குள் கிளியை கறிசமைத்து வைக்கும்படி கட்டளையிட்டாள். சமயற்காரப் பெண்ணும் கிளியை கூண்டுக்குள்ளிருந்து வெளியே எடுத்தாள். இதனை எதிர்பார்த்திருந்த கிளி சமயற்காரியின் கைகளையும் முகத்தையும் தனது நகங்களாலும் சொண்டினாலும் பிராண்டிக் காயப்படுத்தியது. உபாதை தாங்க முடியாத அப்பெண் கிளியை நழுவவிட்டுவிட்டாள். தருணம் பார்த்துக் கொண்டிருந்த அக்கிளி உடனடியாக அவ்விடம் விட்டுப் பறந்து சென்று, சிவாலயத்தின் கோபரத்தின் மீது, பறந்து அங்கிருந்த ஏனைய கிளிகளுடன் சேர்ந்து கொண்டது.

கிளியைப் பறக்கவிட்ட சமயற்காரி தன் எஜமானி வந்து கிளிக்கறி கேட்டால் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தாள். உடனடியாக சந்தைக்குச் சென்றாள். அங்கு எங்கு தேடியும் கிளி கிடைக்கவில்லை. புறா ஒன்றை வாங்கிக் கொண்டு வந்து அதனை வெட்டிக் கறிசமைத்தாள்.

எஜமானி நதிக்கரையிலிருந்து வந்து சேர்வதற்கு முன்னர் கறிசமைத்துவிட்டாள். ரூபசௌந்தரி வந்ததும் வராததுமாக தனக்கு அகோரப்பசி என்றும் உடனடியாக சாப்பாடு போடும்படியும் சமயற்காரியிடம் சொன்னாள். அவளும் சோறு படைத்து புறாக்கறியை கிளிக் கறி என்றும் கூறிப் பரிமாறினாள். உண்மை தெரியாத ரூபசௌந்தரி தனது சபதம் நிறைவேறுவதாகக் கருதிக் கொண்டு மகிழ்ச்சியோடு உண்ணத் தொடங்கினாள். புறாவின் தலையைத் தனியாகக் கையிலெடுத்துக் கொண்டு, "முட்டாள் கிளியே, பார்த்தாயா? என்னுடைய சபதம் நிறைவேற்றப்படுவதை?" என்று கூறிக்கொண்டு தலையை கடித்துக் கடித்துச் சுவைத்துச் சாப்பிட்டாள்.

தான் கிளியுடன் போட்ட சபதம் வெற்றிகரமாக நிறைவேறிவிட்டமைக்காக நன்றிக்கடன் செலுத்தும் நோக்குடன் ரூபசௌந்தரி சிவன் கோயில் செல்லப் புறப்பட்டாள். அங்கு விசேட பூசைகள் நடத்திவிட்டு, வழமையான பிரார்த்தனையிலீடுபட்டாள்.

ரூபசௌந்தரி எப்போது சிவன் கோவில் சென்றாலும் தான் தனது கூண்டோடு கைலாயம் போக அருள் பாலிக்க வேண்டும் என்று வேண்டுதல் பண்ணுவாள். அன்றயை தினமும் அவள் சிவபிரான் சந்நிதியில் நின்றவாறு தனது கோரிக்கையை நிறைவேற்றி அருளும் வண்ணம் வேண்டினாள்.

இராஜகிளி வடிவிலிருந்த விக்கிரமாதித்த மன்னன் சிவலிங்கத்தின் பின்புறமாக நின்று கொண்டார். இறைவனே பேசுவது போல, "எனது உண்மையான பக்தை ரூபசௌந்தரியே, உனது தூய்மையான பக்தியை மெச்சினேன். உனது கோரிக்கையை நிறைவேற்ற சித்தம் கொண்டுள்ளோம். சாதாரண மானிடர் ஒருவர் கூண்டோடு கைலாசம் செல்வது மிகக் கடுமையான காரியம். நீ அவ்வாறு செல்வதானால் சில நிபந்தனைகளுக்குட்பட்டாக வேண்டும். உனக்குக் குடும்பம் என்று ஒன்றுமில்லாதமையினால், உன்னுடைய சொத்து சுகமெல்லாம் ஏழை எளியவர்களுக்குத் தானம் பண்ண வேண்டும். உன்னுடைய நீளமான கூந்தலால் எண்ணற்ற ஆண்களைக் கவர்ந்துள்ளாய். பாவத்துக்கு இருப்பிடமான அக்கூந்தலுடன் நீ கைலாயம் செல்ல முடியாது. எனவே உனது கூந்தலை முழுமையாக நீக்கி விடவேண்டும். பல ஆடவரைக் கவர்ந்த உன் முக அழகும் உடல் அழகும் கூட கைலாயம் போக உனக்குத் தடைக்கற்களாகும். எனவே உன் தலையிலும் முகத்திலும் உடலிலும் ,செம்புள்ளிகுத்திக் கொண்டு, ஒரு கழுதையிலேறி என் ஆலயத்தை ஏழுமுறை வலம் வந்தால் கைலாயம் செல்ல புஷ்ப விமானம் உனக்காகக் காத்திருக்கும். இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவாயானால் உன் கோரிக்கை இனிதே நிறைவேறும்!"

இவ்வாறு இராஜகிளி கூறிய வார்த்தைகளை ஆண்டவனின் அசரீரி என்றே கருதிய ரூபசௌந்தரி, கூறியபடி எல்லாவற்றையும் செய்து முடிப்பதாகக் கூறிக்கொண்டு தனதில்லாம் சென்றாள். அடுத்த நாளிலிருந்தே தனது சொத்துக்கள் யாவற்றையும் தனது உதவியாளர்களுக்கும் ஏழைகளுக்கும் பகிர்ந்தளித்தாள். குறிப்பிட்ட மற்றொரு தினத்தில் தனது கூந்தலை முழுமையாக நீக்கினாள். நீராடிவிட்டு சிவாலயத்துக்கு வந்து சேர்ந்தாள்.

ரூபசௌந்தரி கூண்டோடு கைலாயம் போகப் போகிறாள் என்ற செய்தி திக்கெட்டும் பரவியிருந்தமையினால் ஆலயத்தில் ஏராளமான மக்கள் வந்து குழுமியிருந்தனர்.

மகத நாட்டைச் சேர்ந்த தாசி ஒருத்தி கூண்டோடு கைலாயம் போகப்போவதாக உஜ்ஜயினின் மாகாளி பட்டணத்திலும் பரவியது. உண்மையான விக்கிரமாதித்த மன்னரைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக ஏவப்பட்டிருந்த ஏவலாளர்கள் மூலம் அறிந்த பட்டி, இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என்பதனை உணர்ந்து தானும் மகதநாடு செல்ல ஆயத்தமானார். சில காவலர்களையும் அழைத்துக் கொண்டு மகத நாட்டை அடைந்து சிவாலயத்துக்குச் சென்றார்.

ரூபசௌந்தரி ஆலய முன்றலுக்கு வந்ததும், அவளுடைய உடலெங்கும் செம்புள்ளி, கரும்புள்ளி குத்தப்பட்டது. தலையிலும் அவ்வாறு புள்ளிகள் குத்தப்பட்டன. கழுதையில் ஏற்றப்பட்டு ஆலயத்தை வலம் வந்து இறுதியில் சந்நதி சென்றாள். "எம் பெருமானே, தங்கள் கட்டளைப்படி எல்லாவற்றையும் செய்துவிட்டு வந்துள்ளேன். தாங்கள் கூறியபடி கைலாயத்துக்கு என்னை அழையுங்கள்," என்று கோரினாள்.

இந்த வேளையில் பலமான ஏளனச் சிரிப்பொலி ஒன்று கேட்டது. இவ்வோசையைக் கேட்டதும் ரூபசௌந்தரி துணுக்குற்றாள். சிரிப்பொலியைத் தொடர்ந்து, "ஏ தாசியே, உனக்கு கூண்டோடு கைலாயம் ஒரு கேடா? என்னைக் கறிசமைத்து உண்டுவிட்டதாக மகிழ்ச்சியடைந்தாயே! இப்பொழுது கூறு உன் சபதம் வென்றதா அல்லது என் சபதம் வென்றதா?" என்று கூறிய கிளி நேராக ரூபசௌந்தரி அருகே இருந்த கம்பம் ஒன்றில் ஏறி இருந்து கொண்டது.

கிளியைக் கண்டதும் ரூபசௌந்தரிக்கு உண்மை விளங்கிவிட்டது. தான் ஏமாந்து போனதை உணர்ந்தாள். அவமானம் தாங்க முடியாமல் அவ்விடத்திலேயே மயக்கமுற்று வீழ்ந்தாள். அவுளைத்தூக்கிக் கொண்டு வந்தவர்கள் ஆசுவாசப்படுத்தியும் ரூபசௌந்தரியைக் காப்பாற்றமுடியவில்லை அவளுடைய உயிர் பிரிந்தது.

வேடிக்கை பார்க்க வந்திருந்த கூட்டத்தில் ஒருவராக பட்டி நின்றிருந்ததைக் கண்ட விக்கிரமாதித்தன் உயிருடன் இருந்த கிளி பறந்துவந்து பட்டியின் தோளில் அமர்ந்து கொண்டது. தனது அண்ணனும் மாமன்னருமான விக்கிரமாதித்தனுக்கு ஏறப்பட்ட கதியைக் கண்டு பட்டி கலங்கி கிளியை அணைத்துக் கொண்ட பட்டி உடனடியாகப் புறப்பட்டு

**இராஜகுமாரன்**


உஜ்ஜனியி மாகாளிப்பட்டிணத்தை அடைந்தார். நாட்டு எல்லையிலிருந்த குலதெய்வமான காளி காம்பாள் ஆலயம் சென்று இருவரும் பிரார்த்தனை செய்தனர். அன்றுடன் விக்கிரமாதித்த மன்னரின் காடாறு மாதக் கெடுமுடிவடைந்தமையினால் கிளியையும் அழைத்துக்கொண்டு அரண்மனை திரும்பிய பட்டி, போலி விக்கரமாதித்தனான விஜயனின் கண்களில் கிளி பட்டுவிடாமல் எச்சரிக்கையாக இருந்தார்.

கிளி உருவில் நடமாடிய விக்கிரமாதித்த மன்னனின் உயிரை மீட்டு போலி விக்கிரமாதித்தனில் கூட்டில் எவ்வாறு செலுத்தலாம் என்றுபட்டி பலமாக ஆலோசனை செய்தார்.

(தொடரும்)

# தேர்தல் காலச் சிரிப்பு

தேர்தலின் பின்னர் நிகழக்கூடிய சம்பவங்கள் சிலவற்றை கற்பனை சித்திரமாக வாசகர்களுக்குத் தருகிறோம்.



"அதோ...! தலைவர் அவர்கள் வந்து விட்டார்கள்... தயவுசெய்து கூட்டத்தில் அமர்ந்திருப்பவர்கள் அவர் மேடைக்கு வர வழி விடுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்..."



"உங்கள் ஆவல் எனக்குப் புரிகிறது... கொஞ்சம் பொறுமையாக இருங்கள்... நம்முடைய கட்சியின் வேட்பாளர்கள் யார் யார் என்பதைக் கூட்ட முடிவில் அறிவிப்பதாக இருக்கிறோம்...!"



"தேர்தலில் படுதோல்வி அடைந்து விட்டபடியால், தீவிர சிந்தனைக்குப் பிறகு எங்கள் கட்சியை இன்றிலிருந்து மெல்லிசைக் குழுவாக மாற்றி விட்டோம் என்பதைத் தாழ்மையுடன் கூறிக்கொள்கிறோம்...!"



"வெற்றிக் கொடி நாட்டியுள்ள நம்முடைய அருமை வேட்பாளர் உங்களையெல்லாம் சந்திக்க, தொகுதி வழியே வந்து கொண்டிருக்கிறார்... கடைசி முறையாக அவரைப் பார்க்க விரும்புகிறவர்கள் இப்போதே பார்த்தக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்...!"



"அதை ஏன் கேட்கறிங்க! ஹேர்கட் பண்ணிக்கிட்டிருந்தபோது அரசியல் சம்பந்தமா அவரோட ஒரு சின்ன ஆர்க்யூமெண்ட்லே இறங்கினேன்...!"

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)


ஸ்ரீ கல்யாணி ஜுவல்லர்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

## அதிகம்



↗ மேல் நோக்கி கரண மடித்துச் செல்லும் இந்த எம்.ஓ.பி. என்ற மீன் உண்மையான கடல் வாழ் உயிரினம் அல்ல. இதுவொரு கம்பியூட்டர் வாழ் ஜீவராசி! விளம்பர நிறுவனம் ஒன்றினால் வடிவமைக்கப்பட்ட மீன்தான் இது. கடலுயிர்களுடன் தொடர்புடைய தகவல்கள் அடங்கிய ஒரு வெப் தளத்தின் சின்னமாக இந்த மீன் வடிவமைக்கப்பட்டுள்ளது. 1997ம் ஆண்டு இது அறிமுகம் செய்யப்பட்ட பின்னர் சுமார் 10 மில்லியன் பேர் இதனை பார்த்துள்ளனர்.


அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள் மின்னிப்பேசுகின்றன தினமும்!
108, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lspfk.com/arul

## அதிசயம்



லேசர் புகைப்படமாக எடுக்கப்பட்டு ↙ கணணியில் பதியப்பட்ட ஒரு மனிதனின் கழுத்துக்கு மேற்புற முகமான தோற்றத்தின் உள்ளக உருவையே இங்கு காண்கிறீர்கள். இது ஒரு ஆளின் தலைப்பகுதி. இவரது மூளை பரந்துகிடக்கும் விஸ்தீரணத்தை அவதானியுங்கள். உள்ளங்கையின் அளவிலேயே மனித மூளை இருக்கும் என்று அறிந்திருப்பீர்கள். ஆனால் இந்த மனிதனின் மூளை அதைவிட இரண்டு மடங்கு பெரியது. அமெரிக்காவில் உள்ள ஓஹியோ பல்கலைக்கழக பரிசோதனைக் கூடத்தில் வைத்து 1992ம் ஆண்டு இந்த நபரின் மூளை, மைய நரம்புத் தொகுதி ஆராயப்பட்டது.

↗ 30 வயதான இவரது மூளையின் எடை 2.3 கிலோ கிராம். அதாவது 2300 கிராம். சாதாரணமாக வளர்ச்சியடைந்த ஒரு மனித மூளையின் எடை 1349.9 கிராம் ஆகும். இதன் மூலம் உலகிலேயே மிகப் பெரிய மூளை என்ற பெருமை இவரது மூளை பெற்றுக்கொண்டது.

மேலதிகத்தகவல் ஒன்று: உலகிலேயே இதுவரை அறியப்பட்ட மிகவும் சிறிய மூளைக்கு சொந்தக்காரர் டேனியல் லியோன். இவரும் அமெரிக்கர்தான். இவரது மூளையின் எடை 680 கிராம் மட்டும்தான்.

## வேகம்



அமெரிக்க விமானப்படை பயன்படுத்தும் ↙ ஹெலிக்கொப்டர்தான் இது. இதில் பொருத்தப்பட்டிருக்கும் 7.62. மி.மீ. இயந்திர 'மினிகன்கள்' தான் உலகில் உள்ள துப்பாக்கிகளிலேயே மிகவேகமாக குண்டுகளை பொழியக்கூடியவை. 'கோப்ராகன் ஷிப்' என்ற இவை ஹெலிகெப்டரின் இருபுறமும் 6 பரல்களில் பொருத்தப்பட்டிருக்கும். மின்னியல் மோட்டார் ஒன்றினால் இயங்கும் இந்த 'கன்ஷிப்' நிமிடத்துக்கு 6000 ரவைகளை வெளியிடக்கூடியது. இது சாதாரண இயந்திரத் துப்பாக்கி ஒன்றின் செயற்திறனை விட 10 மடங்கு அதிகமானது. இத்தகைய 'கன்ஷிப்'புகளை 1967ம் ஆண்டிலேயே அமெரிக்க விமானப்படை வடிவமைத்துவிட்டது. காலத்துக்குக்காலம் நவீனமயப்படுத்தப்பட்டுவந்த இவை தற்போது உலகின் முன்னணி கன்ஷிப்களாக விளங்குகின்றன.

## செல்போன்

↘ செல்போன் கண்டு பிடிக்கப்பட்ட ஆரம்பகாலத்தில் பாவிக்கப்பட்ட ஒன்று என்றுதான் நினைப்பீர்கள். அப்படியல்ல. இதுவும் நவீன மானதுதான். மோடோரோலா நிறுவனம் தயாரித்திருக்கும் இந்த செல்போன் மிகப்பெரிய பிரதேசத்தில் அலைகளை ஏற்கக்கூடியது மட்டுமன்றி அளவிலும் பெரியது. பூமியில் எந்தப்பாகத்தில் இருந்தும் இந்த செல்லிடத் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ள முடியும். படத்தில் இருக்கும் வயது போன நபர் ஒரு கோசோவோ அகதி. மசிடோனிய அகதி முகாம் ஒன்றில் இருந்து தனது உறவினர்களுடன் தொடர்பு கொள்கிறார்.



## 1வது பிறந்தநாள் வாழ்த்து 14.12.2001



**செல்வன் முனீச்ராம் ஈஸ்வரன்**

Germany Muenchen இல் வசிக்கும் ஈஸ்வரன்-கவிதா தம்பதிகளின் செல்வப்புதல்வன் முனீச்ராம் தனது முதலாவது பிறந்ததினத்தை 14.12.01 அன்று தனதில்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா சிறி மாமா, சிவானிமாமி, இராதிமாமி, கிருஷ்ணாசித்தப்பா, பிரியாச்சித்தி, கிணேஷ் சித்தப்பா, கதிராமாமி, கவிந்தாச்சித்தி, காஞ்சனாச்சித்தி, சஜுமனா அக்கா, சங்கவி அக்கா, விஜா மச்சாள், சிறி மச்சான், எரினா மச்சாள், இரதீனன் மச்சான், இரதுஷன் மச்சான், இரதிந்தா மச்சாள், சானா அக்கா, London வாழ்மக்கள் நமேஷ் மாமா, சுரேஷ் மாமா, பவான் மாமா, பவானிமாமி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் முனீச்ராமை கண்ணாகம் கதிரமலைச் சிவன் அருள் கொண்டு பல்கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் வாழுகவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: வினா (மச்சாள்)

## 1வது பிறந்தநாள் வாழ்த்து

### 04.12.2001



**சிறீதரன் சபீனந்**

சிறீதரன் - வசந்தகுமாரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் சபீனந் தனது முதலாவது பிறந்த தினத்தை 04.12.2001 அன்று வெள்ளவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை கதிர்புரம் அப்பப்பா, அப்பம்மா, சித்தப்பாமார், சித்திமார், அத்தைமார், மாமாமார், தாத்தாமார், பாட்டிமார் மகிரித்தா சித்தி, அப்பா, ஆச்சி மற்றும் மாகலைவில் வசிக்கும் அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சாளமார், மச்சான்மார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பலகலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- நடராஜ் (மாமா)



இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவவில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் டிச.09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.